மர்ம பூமி

டி. எஸ். பத்மநாபன்



நூல் தலைப்பு	:	மர்ம பூமி
ஆசிரியர்	:	டி.எஸ்.பத்மநாபன்
மொழி	:	தமிழ்
பதிப்பகம்	:	நிலாச்சாரல் லிமிடட்
காப்புரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பாசிரியர்	:	நிலா
பதிப்பு எண்	:	1.0W
காலம்	:	ஆகஸ்ட் 2012
அட்டை வடிவமைப்பு	:	யஷஷ்வினி
Wrapper Image Courtesy	:	Tammy Hinton publicdomainpictures.net

"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்குத் தமிழ் இலக்கியங்களைப் படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்குத் தமிழ் இலக்கியப் பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்'-ன் இலட்சியம்"

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

****

உபயோக நிபந்தனைகள்

- *நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.*
- *நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.*
- *நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.*

****

1. கவலைப்படாதே கண்ணா..! காத்திருக்குது வேலை..!! 1
2. கதையல்ல.. நிஜம்! 5
3.சந்தோஷம் என்பது எதுவரை? 10
4.சோம்பலே சுகமாகலாம் 13
5. மனதைக் கொள்ளை கொள்ளும் மைசூர் தசரா 16
6. ஞாபக மறதி - வரமா, சாபமா? 19
7. ஜூலியஸ் சீசர் கொலையின் பின்னணியில்.... 23
8. ராமர் கதை - சில சரித்திரச் சான்றுகள்..26
9. முத்தமா? ஊஹூம்.....! 32
10. தலைவலி கொடுக்கும் தாலிபான்கள்...33
11. கொசுக்களும் பாடுமே டூயட்! 35
12. நிலவுக்குப் பின்னால்!..37
13. ம்யூனிக் படுகொலை 39
14. இதயம் வலிக்கின்றதே!..44
15. ஒரு கப்பலின் கதை 47
16. நம்பினால் நம்புங்கள்! 51
17. சில வியப்பூட்டும் ஆராய்ச்சிகள் 55
18. கனவுகள் 58
19. இன்னா பன்னிரண்டு..65
20. நான் விரும்பும் மனிதன் 68
21. நெஞ்சம் மறப்பதில்லை...!..69
22. அன்புடையீர்..... 71
23. ஐ.பி.எல். திருவிழா 2008..73

1. கவலைப்படாதே கண்ணா..! காத்திருக்குது வேலை..!!

இரவு பகலாகக் கண் விழித்து பொறியியலிலோ விஞ்ஞானத் துறையிலோ ஒரு பட்டம் வாங்கியாகிவிட்டது. அடுத்தது நாம் விரும்பியபடி படிப்புக்கேற்ற வேலை கிடைக்குமா என்ற கேள்விதான்.

எத்தனையோ நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையானவர்களை பணியமர்த்த விண்ணப்பங்கள் கோருகின்றன. ஒரு பணியிடத்திற்கு பல விண்ணப்பங்கள் வந்து குவியும். உங்களுக்கும் பணியமர்த்த நினைக்கும் நிறுவனத்திற்கும் உள்ள முதல் தொடர்பு நீங்கள் அனுப்பும் resume/ CV என்றும் அழைக்கப்படும் உங்களது தகுதி, அனுபவம் பற்றிய விண்ணப்பங்கள்தான்.

இந்த விண்ணப்பத்தை நீங்கள் எப்படிக் கையாளுகிறீர்கள் என்பதுதான் உங்களை நேர்முகத் தேர்விற்கு அழைத்துச் செல்லும். அடுத்தபடி.. ஆயிரம் விண்ணப்பங்களில் ஒன்றாக இருக்கும் உங்கள் விண்ணப்பம் தனித்து நின்று பணியமர்த்துபவர்களைக் கவரவேண்டும்-சொல்ல வேண்டிய விஷயத்தைச் சுற்றி வளைத்து வளவளவென்று சொன்னால் அது சரியாகப் படிக்கப்படாமலே குப்பைக் கூடைக்குச் சென்றுவிடக்கூடும். நான் படித்த சில வழிமுறைகளை இங்கே சொல்லுகிறேன்.

பல நேரங்களில் நாம் அனுப்பும் விண்ணப்பங்கள் கிணற்றில் விழுந்த கல்லாக நிறுவனத்திடமிருந்த எந்தவிதமான பதிலும் கிடைக்காதபோது நமக்கு இவர்கள் எப்படி வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றும். 'எவ்வளவோ தடவை நாம் நமக்குப் பொருத்தமான வேலையைத் தேர்ந்தெடுத்து விண்ணப்பம் அனுப்பியிருக்கிறோம். விண்ணப்பம் கோரிய உடனேயே தாமதமின்றி அனுப்பியிருக்கிறோம்! ஆனாலும் நிறுவனத்திடமிருந்து ஒரு பதிலும் இல்லையே,' என்று சோகமாகக்கூட இருந்திருப்போம்.

நீங்கள் உங்களது கல்வித் தகுதிகளை விவரித்து அனுப்பும் பல விண்ணப்பங்களுக்கு பதில் வராமலிருக்கப் பல காரணங்கள் இருக்கின்றன. சில நேரங்களில் நீங்கள் விண்ணப்பம் அனுப்பு முன்னமேயே நிறுவனம் சரியானவரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அல்லது உங்கள் தகுதி அவர்களுக்குப் பொருத்தமானதாக இல்லை என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அதனால் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வருவது ஒரு அதிர்ஷ்டம்தான். இதில் நாம் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை என்று மனம் தளர்ந்து போகவேண்டாம்.

ஒருவேலைக்கு அந்த நிர்வாகத்தினர் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும்போது அவர்களுக்குத் தோன்றக் கூடிய கேள்விகள் என்ன என்று அவர்கள்

மனநிலையிலிருந்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி நினைத்து உங்களது விண்ணப்பத்தைத் தயார் செய்து அனுப்பி வைத்தால் உங்களது விண்ணப்பம் நிறுவனத்தின் மனதைக் கவரும்.

வேலைக்குப் பொருத்தமானவரா?

நிர்வாகத்தினர் ஒரு விண்ணப்பத்தைப் பரிசீலிக்கும்போது அவர்களது முதல் கேள்வியே.. 'இவர் நம் நிறுவனத்தின் இந்த வேலைக்குச் சரியாகப் பொருந்துவாரா?' என்பதுதான்.

இது தெரிந்ததுதான். ஒரு கம்பெனி தனக்கு ப்ரொக்ராமர் பதவிக்கு ஆள் வேண்டுமென்றால் மனித வளர்ச்சித் துறையில் பயிற்சி பெற்றவரைப் பணிக்கு அமர்த்த நினைக்காது. வேறு துறையில் பல வருஷங்கள் அனுபவம் இருக்கிறது என்பது தகுதியாகாது. நிறுவனம் குறிப்பிட்ட வேலைக்கு பொருந்துபவரைத்தான் எதிர்பார்க்கும்.

மாத்தி யோசி!

நீங்கள் எந்த வேலைக்கு விண்ணப்பிக்கிறீர்களோ அதற்குத் தகுந்தவாறு உங்கள் CV-ஐ திருத்தி அமைத்துக் கொள்ளவேண்டும். அதனால் எல்லாக் கம்பெனிகளுக்கும் ஒரே மாதிரி CV அனுப்பக் கூடாது. அவர்கள் கேட்டிருக்கும் பணிகளுக்கும் தகுதிகளுக்கும் உகந்த மாதிரி உங்கள் CV இருக்க வேண்டும். அதற்காகப் பொய் சொல்லவேண்டும் என்று பொருளில்லை. நமக்குப் பொருத்தமான தகுதிகள் இருந்தாலும் அதனை எப்படி விண்ணப்பத்தில் வெளிப்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

இதனால் அதிக நேரமாகலாம். ஆனாலும் அந்த நேரத்தைச் செலவழிப்பது வீணில்லை.உங்களைப் பற்றிய விவரங்களைக் கூறும்போது கவனமாக இருங்கள். ஒரு நல்ல வழி. உங்கள் சாதனைகளை எண்ணில் வடிப்பது. உதாரணமாக உங்களது யோசனையால் 5000 ஆர்டர்கள் அதிகமாகப் பெற முடிந்தது என்று விண்ணப்பத்தில் குறிப்பிட்டுச் சொன்னால் அது நிர்வாகத்தினரைக் கவர வழியுண்டு- வெறும் எழுத்துக்களாலேயே விண்ணப்பத்தை நிரப்புவதைவிட எண்களில் சாதனைகளைப் பட்டியலிட்டுக் கூறினால் அதனால் கிடைக்கும் பலன் அதிகம்.

வேலைக்கு வேண்டிய தகுதிகள் என்னவென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை ஒரு முறைக்குப் பல முறை படியுங்கள். இது அந்தப் பணிக்குத் தகுந்தபடி உங்கள் தகுதிகளைக் குறிப்பிட வசதியாய் இருக்கும்.

வேலையில் நீடிப்பாரா?

நிறுவனத்திற்கு எழும் அடுத்த கேள்வி இவரை வேலைக்கு அமர்த்தினால் உடனே வேலையை விடாமல் நீடிப்பரா..?

வேலைக்குச் சரியான நபரைத் தேர்ந்தெடுப்பது நிறுவனத்தைப் பொறுத்தவரை நீண்ட அதிகச் செலவு பிடிக்கும் ஒரு கஷ்டமான விஷயம். அப்படி அவ்வளவு கஷ்டப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வந்த சில நாட்களிலேயே வேலையை விட்டுப்போவதை நிர்வாகம் விரும்பாது.

எனவே உங்கள் விண்ணப்பத்தைப் படிக்கும்போது ஏதாவது வேலையில் நிலையாக இருந்திருக்கிறாரா? அல்லது அடிக்கடி வேலை மாறுபவரா என்பதையும் பார்ப்பார்கள்..

மேலும் நீங்கள் உங்கள் வேலையை முழு அர்ப்பணிப்புடன் செய்யக் கூடியவரா என்பதிலும் அவர்கள் கவனம் செலுத்துவார்கள். நீங்கள் பார்க்கும் வேலையில் எவ்வளவு அர்ப்பணிப்புடன் இருந்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்க சான்று இருந்தால் அதைக் கட்டாயம் இணையுங்கள்.

அடுத்தது விண்ணப்பம் அனுப்புபவர் எடுத்த காரியத்தை நேர்த்தியாகச் செய்யக் கூடியவரா என்று அறிய விரும்புவார்கள். நீங்கள் யாரிடமாவது ஒரு பொருளை அது பற்றிய விவரங்களை மட்டும் சொல்லி விற்க நினைக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். வாங்குபவர் நிச்சயமாக நீங்கள் சொல்லும் விவரங்களை மட்டும் வைத்துக் கொண்டு வாங்கமாட்டார். அது எப்படி வேலை செய்கிறது என்று பார்க்கவும் ஆசைப்படுவார்.

அது போலத்தான் உங்களை பணியில் அமர்த்துபவர்களும் நீங்கள் அனுப்பும் CV.யின் சில பக்கங்களை வைத்துத்தான் நீங்கள் இந்த வேலைக்குப் பொருத்தமானவராக இருப்பீர்களா., இதற்கான தகுதிகள் முழுமையும் உங்களிடம் இருக்கிறதா.., நினைத்ததை வெளிப்படுத்தும் திறன் இருக்கிறதா.., என்பதைத் தீர்மானிப்பார்கள். அதனால் உங்கள் CV தவறில்லாமலும் படிக்கும்போதே நன்றாக விளங்கும்படியும் இருக்க வேண்டும்.

பணியமர்த்துபவர்க்கு நீங்கள் குறிப்பிட்டுள்ள அனுபவத்தில் ஏதாவது சந்தேகம் இருந்தால் அவர் உங்களை நேரில் கூப்பிட முடியாது. அதனால் நீங்கள் ஒருமுறைக்கு இரு முறை உங்கள் விண்ணப்பத்தைச் சரி பாருங்கள். நண்பர்களிடம் கொடுத்து படிக்கச் சொல்லுங்கள். உங்கள் விண்ணப்பம் மனதில் பதியும்படி இருக்கிறதா அல்லது மாற்றங்கள் தேவையா என்று அறிந்து கொள்ளுங்கள்.

நிர்வாகத்தினர் எப்படி வேலைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது வேண்டுமானால் நிச்சயமாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் அனுப்பும் CV கூட்டத்தோடு கூட்டமாக 'கோவிந்தா' ஆகாமலிருக்க கவனமாக இருங்கள்.

2. கதையல்ல.. நிஜம்!

மார்வின் ஹீமியர் - கொலராடோவில் கிரான்பி எனும் இடத்தில் வசித்த சாதாரணக் குடிமகன் - மோட்டார் வாகனங்களின் மஃப்ளர்கள் ரிப்பேர் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தவர். அமைதியான தெள்ளிய நீரோட்டமாகத்தான் அவரது வாழ்க்கை சென்றுகொண்டிருந்தது. ஆனால் திடிரென்று பொங்கியெழுந்து வந்த ஒரு சுனாமிப் பேரலை அவரது வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது.

அதிகார வர்க்கமும், அரசு நிர்வாகமும், நீதியுமே அவரது குரலுக்கு செவி சாய்க்காமல் போனபோது அவருக்குள் கனன்று கொண்டிருந்த கோபம் ஒரு நாள் இப்படித் தீவிரமாக வெடித்தெழும் என்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? “சாது மிரண்டால் காடு கொள்ளாது” என்பது இவரது வாழ்க்கையில் நிஜமாயிற்று. பீடிகை போதும் - ஹீமீயரின் வாழ்க்கையில் அப்படி என்னதான் நடந்தது என்று பார்ப்போம்.

அமெரிக்காவில் கொலராடோ மாகாணத்தில் விமானப் படையில் பணிபுரிந்தவர் ஹீமியர். அந்த மாகாணம் அவருக்கு மிகவும் பிடித்துவிட தன் பணி முதிர்ச்சிக்குப் பிறகு அங்கு கிராண்ட் லேக் என்னும் இடத்தில் மஃப்ளர் பழுது பார்க்கும் கடைகளை சில இடங்களில் அமைத்தார். சில வருடங்களுக்குப் பிறகு கிரான்பி என்னும் இடத்திலுள்ள கடையை மட்டும் தான் வைத்துக் கொண்டு மற்றவற்றை குத்தகைக்கு விட்டுவிட்டார்.

அனேகமாக அவரது நண்பர்கள், உறவினர்கள் எல்லாருமே அவரைப் பற்றி நல்லபடியாக 'உற்சாகமானவர் - யாருக்காவது உதவி தேவையென்றால் ஓடிவந்து உதவுவார்' என்றுதான் கூறுவார்கள். அவர் பெரிய முன்கோபி என்று சொல்பவர்களும் உண்டு . அரசியலில் ஆர்வம் கொண்ட அவர் சூதாட்டத்தைச் சட்டமாக்கவேண்டும் என்று கருதினார். இது பற்றி பத்திரிகைகளுக்குக் கடிதங்கள்கூட எழுதினார்.

ஒரு முறை ஒரு பத்திரிகையாளர் தன் பத்திரிக்கையில் சூதாட்டத்திற்கு எதிரான தலையங்கம் எழுத, ஹீமியரிடம் கருத்து கேட்டபோது ஹீமியர் ஆவேசமடைய அந்த சந்திப்பு கைகலப்பிலே முடிந்தது. இன்னொரு முறை ஒரு வாடிக்கைகையாளர் ரிப்பேர் செய்ததற்கான பணத்தைக் கொடுக்க மறுத்தபோது அவரது கணவரைக் கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தியதாகவும் சொல்கிறார்கள். 'ஹீமியர் உங்களது நண்பர் என்றால் உங்கள் இருவரில் அவர்தான் சிறந்த நண்பராயிருப்பார் - ஆனால் அவருக்கு யாராவது எதிரி என்றால், அவரைப்போல மோசமானவரையும் பார்க்கமுடியாது' என்பது பலர் கருத்து.

1990ஆண்டுகளின் கடைசியில் டொசெஃப் குடும்பத்தினர் அவரை நெருங்கி அவரது மஃப்ளர் கடையையும் நிலத்தையும் தங்களுக்கு விற்கும்படி கேட்டனர்- அங்கு அவர்கள் ஒரு கான்க்ரீட் கலவைத் தொழிற்சாலை அமைக்க நிலம் தேவைப்படுவதாகக் கூறினார்கள்.

ஹீமியர் அந்த நிலத்தை 42,000 டாலருக்கு வாங்கியிருந்தார். நிலத்தை வாங்க பேரம் பேசியவர் அந்த நிலத்திற்கு 2,50,000 டாலர் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் ஹீமியர் 3,75,000 டாலருக்குக் குறைவாக நிலத்தைக் கொடுக்க முடியாது என்று சொன்னதால் பேரம் முறிந்தது. பின்னர் பத்து லட்சம் டாலர் கொடுத்தால்தான் விற்க முடியும் என்றும் ஹீமியர் சொன்னதாகக் கூறுகிறார்கள்.

இதனால் அலுத்துப்போன டொசெஃப் குடும்பத்தினர் நகர அலுவலகத்திற்குச் சென்று ஹீமியரின் மஃப்ளர் கடை அமைந்திருக்கும் நிலத்தைச் சுற்றிய பிராந்தியத்தை மாற்றிச் சீரமைக்க வேண்டும் என்று கோரினர்.

ஹீமியரும் இந்த சீரமைப்பு பற்றி நகரக் கவுன்சில் நடத்திய கூட்டங்களுக்குச் சென்றார் - அவரது குறி நிலங்களின் பிரிவுகளை மாற்றி அமைப்பதால் தனது மஃப்ளர் கடைக்கு ஏதும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதுதான். 2001-ல் நகர பிராந்தியக் கமிஷன் பிராந்தியத்தைத் திருத்தியமைப்பதற்கான கோரிக்கைக்கு அனுமதி அளித்தது.

காங்க்ரீட் கலவை தொழிற்சாலை அமைப்பதற்கு ஒப்புதல் கொடுக்கப்பட்ட இடம்தான் ஹீமியர் தொழிற்சாலைக்குச் செல்வதற்கான ஒரே வழி. வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவதுபோல உபயோகமில்லாத பழைய கார்களை அவரது நிலத்தில் வைத்திருந்ததற்காகவும் கழிவுநீர்க் குழாய்கள் பொருத்தாதற்காகவும் 2500 டாலர் அபராதத்தை ஹீமியருக்கு விதித்தது நகரசபை.

இந்த இக்கட்டிலிருந்து தன்னை மீட்டுக் கொள்ள ஹீமியர் சாம தான பேத தண்டங்கள் என்று எல்லா வழிகளையும் கையாண்டார். பிராந்தியக் கமிஷனுக்கு அவர்களது முடிவை மறுபரிசீலனை செய்யும்படி வேண்டிக் கொண்டார். கையெழுத்துக்களை சேகரித்தார்.

சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார் ஹீமியர். கழிவுநீர் பாதை அமைப்பதற்காகக் கான்க்ரீட் தொழிற்சாலை உரிமையாளர்களிடம் எட்டடி நிலம் கேட்டார். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டனர். ஒரு புல்டோசர் வாங்கி தனது தொழிற்சாலைக்கு வாடிக்கையாளர்கள் வருவதற்கான பாதை அமைக்கக்கூட முயற்சி செய்தார். அந்த முயற்சிக்கும் நகர கவுன்சில் அனுமதியளிக்கவில்லை.

கான்க்ரீட் தொழிற்சாலை நிர்வாகத்திற்கும், நகர கவுன்சிலுக்கும் ஏதோ மறைமுக ஒப்பந்தம் இருப்பதாகக்கூட சிலர் பேசிக் கொண்டார்கள் - ஆனால்

எதையும் நிரூபிக்க முடியவில்லை. வேறு வழியேயில்லாமல் ஹீமீயர் நகர கவுன்சிலுக்கு 2500 டாலருக்கான செக்கை அனுப்பினார் - கோழைகள் என்று கொட்டை எழுத்தில் கடிதத்தில் எழுதி. பின்னர் வேறு வழியில்லாமல் அடிமாட்டு விலைக்குத் தனது மஃப்ளர் கம்பெனியை விற்றுவிட்டார். ஆறு மாதங்களில் இடத்தைக் காலி செய்யவும் ஒப்புக் கொண்டார்.

இதன் பின்புதான் தன்னை ஒன்றுமில்லாதவனாக ஆக்கிய அந்த நகர கவுன்சிலையும், ஊழல் பேர்வழிகளையும் அழிக்க ஒரு திட்டம் தீட்டினார் - தான் சாலை அமைப்பதற்காக வாங்கிய புல்டோசரை, கில்டோசராக மாற்றத் தீர்மானித்தார்.

புல்டோசரைத் தன் தொழிற்சாலைக்குள் கொண்டு வந்து முதல் கட்டமாக அதனது இஞ்சின், இரும்பு பாகங்கள், ஊர்தி, இவைகளை குண்டுகள் துளைக்காதபடி பாதுகாக்கக் கவசம் செய்தார். மேலே டிரைவர் உட்காரும் காபினையும் சுற்றி வரப் பாதுகாப்புக் கவசமிட்டு யாரும் நெருங்க முடியாதபடி செய்தார்.

அவரே முயன்றாலும் அவரால் வெளிவர முடியாதபடியான கவசம். முன்னாலும் பின்னாலும் வீடியோ காமிராக்களைப் பொருத்தினார். ஓட்டுபவர் அமர்ந்திருக்கும் அறையில் காமிராக்களுக்ளுடன் இணைந்த மானிட்டரைப் பொருத்தினார். சுற்றிவர துப்பாக்கிகளை வைப்பதற்கான வசதி செய்துகொண்டார். உணவு, தண்ணீர் மற்றும் காற்று வசதிக்காக ஒரு டாங்க். மொத்தத்தில் ஒரு ராணுவ டாங்க் போல தன் புல்டோசரை மாற்றி அமைத்துக் கொண்டார்.

இவையெல்லாம் செய்து முடிக்க அவருக்கு கிட்டத்தட்ட ஒன்றரை வருடம் பிடித்தது. அவரது கவச வண்டியைத் தயாரிக்கும்போது பலர் அவரது கடைக்கு வந்தனர். ஆனால் யாரும் அந்த புல்டோசர், ஒரு கில்டோசராக மாறி வந்ததைக் கவனித்ததாகத் தெரியவில்லை. தன்னுடைய செய்கைகளையெல்லாம் ஒரு ஆடியோ டேப்பில் தன் குரலில் பேசி பதிவு செய்து வைத்துக் கொண்டார்.

அந்த ஒலி நாடாவில்" நீங்கள் எனக்குக் கொடுத்த துன்பங்களுக்காக, இருண்ட எதிர்காலத்திற்காக நான் என் உயிரைத் தியாகம் செய்யப் போகிறேன் நீங்கள் எனக்கிழைத்தது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை நான் உங்களுக்கு உணர வைக்கப் போகிறேன்" எனக் கூறியிருந்தார்.

அவரது ஒலி நாடாவில் ஓரிடத்தில், "நான் மிகவும் நியாயமாகத்தான் நடந்து கொள்ள முயற்சி செய்தேன். ஆனால் அநியாயமாக நடந்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேன். சில நேரங்களில் நியாயமாக நடப்பவர்கள்கூட அநியாயத்தின் துணையைத் தேட வேண்டியிருக்கிறது" எனக் கூறித் தன் ஒலிநாடாவை முடித்திருக்கிறார்.

2004 ஹீமியருக்குக் கொஞ்சம் கஷ்டமான வருடமாகிவிட்டது. அந்த ஆண்டு மார்ச் மாதம் ஹீமியரின் தந்தை இறந்தார். பின்னர் அவரது மனைவியிடமிருந்து அவர் பிரிய நேர்ந்தது. ஜூன் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை. வானம் இருண்டிருந்தது. தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன. ஹீமியர் தனது ஒலிநாடாக்களை தனது சகோதரருக்கு அனுப்பினார். பின்னர் தான் தாக்க வேண்டிய இலக்குகளை ஒரு பேப்பரில் எழுதி வைத்துக் கொண்டு தனது கில்டோசரில் அமர்ந்தார்.

மாலை மூன்று மணிக்கு புல்டோசர் சீறிக்கொண்டு அவரது கடையைக் கிழித்துக் கொண்டு சென்று பக்கத்திலுள்ள கான்க்ரீட் தொழிற்சாலையைப் பதம் பார்த்தது. புல்டோசர் புறப்பட்ட சிறிது நேரத்தில் அவசர உதவிக்கான 911 நம்பருக்கு தொலைபேசி அழைப்புக்கள் தொடர்ந்தன. புல்டோசரைத் தகர்க்க ஒருவர் முயன்றபோது அந்த கில்டோசரிலிருந்து புறப்பட்ட துப்பாக்கி குண்டுகள் அவரைத் திரும்ப வைத்தன.

சில நிமிடங்களில் இரண்டு பெரிய கட்டிடங்கள் மற்றும் பல வாகனங்கள் தகர்க்கப்பட்டன. சாலையைக் கடந்து நகருக்குள் தன் பயணத்தை புல்டோசர் தொடர்ந்தது. அதனை நோக்கி வந்த பல அவசர போலிஸ் ஊர்திகள் சிதறின. ஒரு காவல் வாகனம் நொறுங்கியது. ஒரு போலிஸ் அதிகாரி எப்படியோ அந்த புல்டோசரின் மேல் ஏறி 37 குண்டுகளைத் தன் துப்பாக்கி மூலம் சுட்டார். ஒன்றும் பயனில்லை. அந்த வண்டியை ஓட்டுபவரைக் கொல்வதைத் தவிர புல்டோசரை நிறுத்துவதற்கு வேறு வழியில்லை என அவர் கூறினார்.

புல்டோசர் கிரான்பி நகரை நெருங்கியபோது போலீஸார் அதனைத் தாக்கத் தயாராக இருந்தனர். ஆனால் அந்த கவச வண்டிக்கு முன்னால் எந்தத் துப்பாக்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை. துப்பாக்கி குண்டுகளால் எதுவும் பயனில்லை என்று தெரிந்த பிறகு வெடிகுண்டுகளை முயற்சி செய்தனர்- அதற்கும் பயனில்லை. வேறுவழியில்லாமல் போலிசார் சாலையை விட்டு ஒதுங்கி நின்று வாகனங்களில் செல்வோரை ஒதுங்கிச் செல்லும்படி கூறினர்

யாரும் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டாம் என்று மைக் மூலம் எச்சரிக்கை செய்தனர். பத்திரிகைக்காரர்கள் ஹெலிகாப்டரிலிருந்து நடந்துகொண்டிருக்கும் விபரீதத்தைப் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள்..

பலமுனைத் தாக்குதலால் ஹீமியருக்கு வாகனத்தைக் கட்டுப்பாட்டுடன் செலுத்துவது கஷ்டமாக இருந்தது. ஆனாலும் ஹீமியர் தான் குறித்து வைத்திருந்த இலக்குகளை அழிப்பதில் தவறவில்லை. புல்டோசர் பல கார்களையும், கட்டிடங்களையும், முன்னாள் மேயர் வீடு, அவருக்கு எதிராகச் செயல்பட்ட செய்தித்தாள் காரியாலயம், முன்னாள் நகர கவுன்சில் உறுப்பினர்களுடைய அலுவலகங்கள் அனைத்தையும் துவம்சம் செய்தது.

ஆனாலும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. யாரும் இறக்கவில்லை! கிரான்பி போலீஸ் புல்டோசரின் ஓட்டத்தை நிறுத்துவதற்கான முயற்சிகள் எல்லாம் தோல்வியடைந்தன. ஒரு மணி நேரத்தில் 13 கட்டிடங்கள் இடிக்கப்பட்டுவிட்டன. புல்டோசர் மேல் நடத்தப்பட்ட தாக்குதலால் புல்டோசர் திணறத் துவங்கியிருந்தது. அடுத்த இலக்கை நோக்கி நெருங்கியபோது ரேடியேட்டரில் சிறிது ஓட்டை விழுந்திருந்தது. அடுத்த இலக்கின் சுவரைப் பெயர்த்துக் கொண்டு உள்ளே செல்ல முயன்றபோது ஓய்ந்து போயிருந்த புல்டோசர் தனது வேகம் இழந்து கடையின் அடித்தளத்தில் விழுந்தது.

போலீஸ் படை புல்டோசரை சூழ்ந்து கொண்டபோது டிரைவர் கேபினிலிருந்து ஒரு துப்பாக்கி சத்தம் கேட்டது. ஆம், ஹீமியர் தனது இலக்கு முடிந்த திருப்தியுடன் தற்கொலை செய்து கொண்டிருந்தார். மொத்தம் இரண்டு மணி நேரம் ஒரு பூகம்பத்தையே கிளப்பிய அந்த புல்டோசரும் தன் எஜமானரின் நோக்கம் முடிந்த மகிழ்ச்சியுடன் கண்ணை மூடியது.

ஹீமியரின் புல்டோசர் அரசுக்கு ஏற்படுத்திய நஷ்டத்தின் மதிப்பு ஏழு மில்லியன் டாலர்கள். அந்தக் கவச வாகனத்தைத் தகர்க்க வெடிகுண்டுகளால்கூட முடியவில்லை - காஸ் வெப்பத்தின் மூலமே கவசத்தை வெட்டி ஹீமியர் உடலை எடுக்க முடிந்தது.

அரசு எந்திரங்களால் பாதிக்கப்பட்ட பலருக்கு ஹீமியரின் இந்தச் செயல் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கலாம். ஆனால் சட்டத்தை ஒரு மனிதன் தன் கையில் எடுத்துக் கொள்ளலாமா என்பது விடைபெற முடியாத ஒரு கேள்வியாகிவிட்டது.

ஆதாரம் - "Damn Interesting" article

3.சந்தோஷம் என்பது எதுவரை?

என் நண்பரை ஒருநாள் வழியில் சந்தித்தேன். அவரைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் சந்தித்த தோஷத்திற்காக(!) வாய் சும்மா இல்லாமல் “என்ன சவுக்கியமா?” என்று கேட்டுவிட்டேன்.

“என்ன சவுக்கியம்! எனக்கு ரெண்டு நாளா தலைவலி, இருமல். அது என்னவோ பன்றிக் காய்ச்சல் என்று வேறு பயமுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள். வீட்டில் விருந்தாளிகள் வேறு. ஆபிசிலும் வறுத்தெடுக்கிறார்கள். என்ன சவுக்கியம், என்ன சந்தோஷம் போங்கள்” என்று தொடர்ந்தார். அவர் சொன்னதைக் கேட்டு நான் அசவுக்கியமாகிவிடுவேன் போலிருந்தது! “அவசர வேலை இருக்கிறது, அப்புறம் பார்க்கிறேன்” என்று விட்டேன் ஜூட். இவரைப் போல பல நெகடிவ் நாகராஜன்களை வாழ்க்கையில் சந்தித்திருக்கிறோம்.

“என்ன, பையன் +2ல நல்ல மார்க் வாங்கியிருக்கிறான் போலிருக்கே! அப்புறம் என்ன, இஞ்சினீயரிங்கா அல்லது மெடிக்கலா“ என்று ஒரு வார்த்தை பாராட்டுகிறோம் என்று வையுங்கள்.

“என்ன மார்க் வாங்கி என்ன பிரயோசனம்! சமூகம் வாரியான இட ஒதுக்கீட்டுல நாம அடிபட்டுப் போறோமே! மறுபடியும் கடனை வாங்கி ஏதாவது காலேஜ்ல டொனேஷன் கொடுத்தாதான் சீட் கிடைக்கும். இனிமே செருப்புத் தேய அலைய வேண்டியதுதான்!” என்று பையன் பாஸ் பண்ணிய சந்தோஷத்தை அனுபவிப்பதை விட்டு அலுத்துக் கொள்வார்.

“என்ன ஆபிஸில் பிரமோஷன் கிடைத்திருக்கிறது போலிருக்கே? எங்க ஸ்வீட்?” என்று இது போன்ற ஆசாமிகளிடம் கேட்டு விடாதீர்கள். என்ன பிரமோஷன் வாங்கி என்ன பிரயோசனம்! பைசாக்குப் பிரயோசனமில்லை. இன்னும் நாலு பேரைக் கட்டி மேய்க்கணும். மேல இருக்கறவன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்லணும்” என்பார்கள். ஏன்டா இவரது வாயைக் கிளறினோம் என்று தோன்றும்.

வாழ்க்கையில் பலர் இப்படித்தான். இப்போதிருக்கும் சந்தோஷத்தை அனுபவிக்காமல் நாளை என்ன ஆகுமோ என்ற அச்சத்துடன் வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். இவர்கள் என்றுமே சந்தோஷத்தை அனுபவித்திருக்க மாட்டார்கள். நேற்று இன்றையைப் பற்றிய கவலை. இன்று நாளை என்ன ஆகுமோ என்று அச்சம். எது இருந்தால் அல்லது என்ன கிடைத்தால் இவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள்?

அமன்டா மாரின் என்பவர் எழுதிய கட்டுரையைப் படித்தேன். அவர் சொல்கிறார், “பலர் தங்களுக்கு அதிகப் பணம் வேண்டும், இன்னும் செல்வாக்கோடு

இருக்க வேண்டும், வசதி இன்னும் வேண்டும் என்று மேலும் மேலும் விரும்புகிறார்களே தவிர, அவர்களிடம் தற்போது என்ன என்ன வசதிகள் இருக்கின்றன என்று நினைத்துப் பார்ப்பது கூட இல்லை. இன்னும் வேண்டும் வேண்டும் என்று அளவில்லாமல் ஆசைப்படும்போது சந்தோஷத்தைத் தொலைக்கிறோம். நம்மிடம் இருக்கும் வசதிகளே நமது தேவைக்குப் போதுமானவை என்று அறிவதில்லை. இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்க நினைக்கிறோம். இதைவிட சிறப்பான வாழ்க்கை வேண்டும் என ஆசைப்படும் போது நாம் இப்போது வாழும் வாழ்க்கையைப் பற்றி ஒரு கணக்கு எடுத்துப் பார்க்க வேண்டும்.

அதனால் சிறிது நேரம் நன்றாக யோசித்து உங்களுக்கு எது உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று தீர்மானம் செய்யுங்கள். அடுத்தபடி, இப்பொழுது வாழும் வாழ்க்கையில் நீங்கள் எதிர்பார்க்கும் சந்தோஷம் இருக்கிறதா என்றும் எண்ணிப் பாருங்கள். நீங்கள் ஆசைப்பட்ட வாழ்க்கையையே நீங்கள் வாழ்ந்து கொண்டிருந்தால் கூட உங்கள் குறைபடும் சுபாவம், இருக்கின்ற மகிழ்ச்சியைக் கூட மறைத்து விடும்.

நாம் நேற்றைய வாழ்க்கையில் காணாத வசதிகளை இன்று பெற்றிருந்தால் கூட அதைப் பற்றி எண்ணிப் பார்க்க மறந்துவிடுவோம், இன்னும் வேண்டும் என்ற ஆசையில். போன வருஷம் நீங்கள் ஸ்கூட்டர் வாங்கக் கூட வசதியில்லாமல் பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்திருக்கலாம். இன்று புது ஸ்கூட்டர் வாங்கிப் பயணம் செய்யும்போது நேற்று பஸ்ஸுக்காக லொங்கு லொங்கென்று ஓடியது கூட மறந்து போயிருக்கும்.

அடுத்து பக்கத்து வீட்டு பாஸ்கர் கார் வாங்கியிருக்கானே, ராமசாமி பங்களா கட்டிவிட்டானே, நாம் மட்டும் இப்படியே இருக்கிறோமே என்று வருத்தப்படாதீர்கள். நீங்கள் யார், உங்களது மதிப்பென்ன என்று உங்களுக்குத் தெரிந்தால் போதும். காரையும், பங்களாவையும் வைத்து ஒருவர் எடை போடப்படுவதில்லை. நமது தேவைக்கு நம்மிடம் இருக்கிறதா என்று மட்டும் யோசியுங்கள்.

நீங்கள் உங்களைப் பற்றி மட்டும் சிந்தியுங்கள். உங்கள் இனிய வாழ்க்கைக்கு எது தேவை, எது போதும் என்று தீர்மானியுங்கள். சிலருக்கு வீடு வாங்க வேண்டும் என்று ஆசையிருக்கும். சிலருக்கு வாகனம், சிலருக்கு நகை என்று மனிதர்களிடையே ஆசைகள் மாறும். அவசியத் தேவைகளை அடைய முயற்சி செய்யுங்கள். அல்லாமல் ஆசைக்கு அளவின்றி, எல்லாமே வேண்டும் என்று எண்ணி, அடைய முடியாத நிலையில் துக்கத்தில் ஆழ்த்திக் கொள்ளாதீர்கள்.

எப்போதுமே கிடைக்காததை எண்ணி வருந்தாமல் வாழ்வின் சந்தோஷங்களை நுகருங்கள்! ஒரு குழந்தையின் பூச்சிரிப்பு, ஒரு மலரின் வாசம், ஒரு சாக்லெட்டின்

சுவை, நெருங்கியவர்களிடம் மனம் விட்டுப் பேசும்போது ஏற்படும் மகிழ்ச்சி இவற்றை எல்லாம் இழந்துவிட்டு, இல்லாத ஒன்றைத் தேடுவதிலேயே வாழ்க்கையைத் தொலைக்காதீர்கள். மனதில் மகிழ்ச்சி இல்லாமல் என்னதான் செல்வம் இருந்தாலும் அது உண்மையான சந்தோஷத்தைத் தரமுடியாது

இப்போது புரிந்திருக்குமே சந்தோஷம் என்பது எதுவரை என்று!

4.சோம்பலே சுகமாகலாம்

"முன்னேற்றம் என்பது வைகறைத் துயிலெழுபவர்களால் ஏற்படுவதில்லை. அது காரியங்களை எளிதாக முடிக்க முயற்சி செய்யும் சோம்பல் மனிதர்களாலேயே சாத்தியமாகிறது!" - ராபர்ட் ஹெலென்

நீங்கள் விமானப் பயணத்தில் இருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களுக்கு வசதியான அமரும் இடம் கிடைத்துவிடுகிறது. விமானம் சரியான நேரத்தில் கிளம்புகிறது. உங்கள் சாமான்களை பத்திரமாக மேலே வைத்துவிட்டீர்கள். ஆகக் கூடி எல்லாமே வசதியாக அமைந்து விட்டது. 'இன்னுமொரு வழக்கமான பயணம்' என்று எண்ணியவாறே கண்களை மூடுகிறீர்கள். விமானப் பணிப்பெண், யாராவது கவனிக்கிறார்களா.. இல்லையா என்ற கவலையில்லாமல் விமானப் பயணத்தின் பாதுகாப்பு பற்றி விளக்கிக் கொண்டிருக்கிறார்.

"அவசர நிலையில் ஆக்சிஜன் கவசம் உங்கள் முன்னால் விழும். அதைக் கொண்டு உங்கள் மூக்கையும் வாயையும் மூடிக் கொள்ளுங்கள். மூடிக் கொண்டவுடன் வரும் ஆக்சிஜனை சுவாசியுங்கள். சாதாரணமாக மூச்சு விடுங்கள். மற்றவருக்கு உதவும் முன்னால் உங்கள் கவசத்தை சரியாகப் பயன்படுத்துங்கள்" என பணிப்பெண் தொடருகிறாள்.

சாதாரணமாக சுவாசியுங்கள்! கேட்கும்போது நன்றாகத்தான் இருக்கிறது! எப்படி அவசர நிலையில் காற்று சரியாக இல்லாத சூழ்நிலையில் சாதாரணமாக சுவாசிக்க முடியும்? நன்றாக உள்ளிழுக்கவேண்டாமா? சுத்த பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதே! என்றுதான் தோன்றும். சாதாரணமாகச் சுவாசிப்பதா?- ஊஹூம்!

ஆனால் யோசித்துப் பார்த்தால்தான் 'சாதாரணமாகச் சுவாசியுங்கள்' என்பது எவ்வளவு சரியான அறிவுரை என்பது புரியும். அமைதியாக இருந்து பிராணவாயுவை வீணாக்காமல் நிதானமாகச் சிந்தித்து, தற்போதைய நிலையை யோசித்து, அடிப்படையான காரணங்களை சீர்தூக்கி நிலைமைக்குத் தகுந்த முடிவை எடுத்து - குறைந்த சக்தியை செலவழித்து அதிகப் பயனைப் பெறுவதுதான் புத்திசாலித்தனம்!

பயன்தரும் சோம்பேறித்தனம் என்பது என்ன?

80/20 என்று சொல்லப்படும் பரேட்டோ விதி சொல்கிறது. "பல நிகழ்வுகளில் 20 சதவிகிதக் காரணங்களாலேயே 80 சதவிகித காரியங்கள் நடக்கின்றன" என்று. இது பல நேரங்களில் சரியானதுதான் என்று நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், இந்த விதி பல நேரங்களில் தவறாகவும் உபயோகப்படுத்தப்படுகிறது.

80 சதவிகித நிகழ்வுகளில் இந்த விதி சரியாக இருக்கிறது என்பதால் எந்தப் பிரச்சினைக்கும் இந்த 80 சதவிகித விதி பொருந்தும் என்று நினைப்பது அபத்தம். எந்தச் சூழ்நிலையிலும் பெரும்பாலான பிரச்சினைகளின் தீர்வுக்கு சில அடிப்படைக் காரணங்களே அமைகின்றன என்பதுதான் இதன் பொருள். எனவே 20 சதவிகித காரணங்கள்தான் உங்களது 80 சதவிகித பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகின்றன. இதனை கருத்தில் கொண்டால் உங்களின் பெரும்பாலான பிரச்சினைகளை சுலபமாக அணுக முடியும்.

உங்கள் திட்டங்களில் குறைபாடுகள் ஏற்படும்போதும், என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்க வைக்கும் பிரச்சினைகள் ஏற்படும்போதும், இந்த விதியைப் பயன்படுத்தினால் சுகம் தரும் சோம்பேறித்தனத்தை அனுபவிக்க முடியும்.

சரி, எப்படி இந்த சுகமான சோம்பேறித்தனத்தைப் பயனளிக்கும் வகையில் உபயோகப்படுத்துவது?

முதலில் ஒரு பெரிய பிரச்சினை ஏற்படும்போது என்னவாகுமோ என்ற அச்சமில்லாமல் அமைதியாக இருக்கவேண்டும். நீங்கள் அலுவலகத்தில் ஒரு ப்ராஜெக்டை எடுக்கும்போதே அதில் என்ன என்ன பிரச்சினைகள் ஏற்படக்கூடும், அதனை எப்படி சமாளிப்பது என்று கணித்திருப்பீர்கள். ப்ராஜெக்டை ஆரம்பிக்கும்போதே திட்டமிட்டு வரக்கூடிய பிரச்சினைகளை அலசியிருந்தால் பெரும்பாலானவற்றைச் சுலபமாக சமாளிக்க முடியும். வரும் எதிர்பார்த்த பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு என்பதையும் யோசித்திருப்பீர்கள். இதைத் தவிர சில பிரச்சினைகள் எதிர்பாராமல் நிகழக் கூடும். இந்த சந்தர்ப்பங்களில் என்ன செய்வது?

சாதாரணமாகச் சுவாசியுங்கள்!

சாவகாசமாகப் பத்துவரை எண்ணுங்கள்! பதறாத காரியம் சிதறாது என்பதை இந்த நேரத்தில் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். சற்று அமைதியாக யோசிப்பது, உண்டான பிரச்சினையை மனதில் குழப்பமின்றி தீர்வுகாண ஒரு விதத்தில் உதவி செய்யும். அவசரப்பட்டு தவறான முடிவை எடுப்பது எரிகிற கொள்ளியில் எண்ணையை ஊற்றுவது போலவே அமையும்.

பெரிய பிரச்சினை எதிர்ப்படும்போது பதற்றமடைவது மனித இயல்பு. இந்த நேரத்தில்தான் சாதாரணமாகச் சுவாசியுங்கள் எனும் விதியைப் பயன்படுத்தவேண்டும். பிரச்சினைகள் உங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்; உங்களைத் தாண்டிவிடக் கூடாது. அப்போதுதான் சரியான முடிவை எடுக்க முடியும்.

பிரச்சினையையும் அதன் மூலத்தையும் அறிந்த பிறகு தேவையற்றவற்றை வடிகட்டுங்கள்! நீங்கள் கவனிக்க வேண்டியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து, மற்றவைகளை உங்கள் அணியில் இருப்பவர்களிடம் ஒப்படையுங்கள்! ப்ராஜக்ட் மேலாளர்தான் ப்ராஜக்டில் ஏற்படும் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கவேண்டும் என்று எண்ணி உங்கள் தலைமேல் போட்டுக் கொள்ளவேண்டாம். எல்லாம் நாம்தான் செய்யவேண்டும் - நாம்தான் ஹீரோ என்று நினைத்து, பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் ஒரு 'ஜீரோ' ஆகிவிடாதீர்கள்! வடிகட்டிய பிறகு உங்கள் அணியிலிருப்பவர்களுக்கு வேலையைப் பகிர்ந்தளியுங்கள்! 80/20 விதிப்படி உங்கள் கவனம் 20 சதவிகிதத்தில் மட்டுமே இருக்கவேண்டும்.

பகிர்ந்தளிக்கப்படும்போது, பிரச்சினையின் பளுவும் பகிர்ந்து விடுகிறது. உங்கள் வேலையும் எளிதாகிறது. நீங்கள் உங்கள் பங்கிற்கு செய்யப்போகும் வேலையிலும் எது இப்போது செய்யப்பட வேண்டும், எதனைத் தள்ளிப்போடலாம் என்பதை யோசித்து, இப்போது கவனிக்காவிட்டால் ஒன்றும் நேர்ந்துவிடாது என்று தோன்றுபவைகளைத் தள்ளி வையுங்கள்! எந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்மானிக்கப்பட வேண்டுமோ அதில் மட்டும் கவனம் செலுத்துங்கள்! உங்கள் அணி உறுப்பினர்களோடு கலந்து ஆலோசித்து எந்த பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ, அதனை மட்டும் கவனியுங்கள்! அப்புறமென்ன? நிச்சயம் வெற்றி உங்கள் பக்கம்தான்.

எல்லாமே சாதாரணமாக சுவாசிப்பதில்தான் இருக்கிறது!

ஆதாரம் : Peter Taylor-The Art Of Productive Laziness

5.மனதைக் கொள்ளை கொள்ளும் மைசூர் தசரா

மைசூரின் மிகப் பிரம்மாண்டமான திருவிழா தசரா. பல நூற்றாண்டுகளாகத் தொடரும் இந்த விழா இன்றும் அன்றைய அளவிற்கு இல்லாவிட்டாலும் மிகப் பெரிய அளவிற்கு கொண்டாடப் படுகிறது.

புராணங்களின்படி அரக்கன் மஹிஷாசூரனை தேவி துர்கை வென்று வாகை சூடியதைக் கொண்டாடும் விழாவாகவே தசரா எனும் நவராத்திரி விழா கருதப்படுகிறது. அரக்கன் மஹிஷாசூரன் பெயரால்தான் 'மைசூர்' என்ற பெயர் அந்த நகருக்கு வந்தது என்றும் சொல்லப்படுகிறது. அசுரனின் அழிவைக் கொண்டாடும் இந்த விழாவை 'அதர்மத்தை தர்மம் நின்று வென்ற விழா' என்றும் கூறலாம்.

வரலாறு

கி.பி 1400ம் ஆண்டுவரை மைசூர் இந்து அரசர்களின் கோட்டையாக இருந்தது. விஜயநகர சாம்ராஜ்யத்தின் கீழ்தான் வாடியார்கள் 1565ல் அந்த சாம்ராஜ்யம் வீழும் வரை ஆட்சி புரிந்தார்கள். விஜயநகர சாம்ராஜ்யம் வீழ்ந்த பிறகு அவர்கள் தங்களை சுதந்திரமானவர்களாக அறிவித்துக் கொண்டு 1956ல் சமஸ்தானங்களின் சாம்ராஜ்யங்களை எல்லாம் இந்தியக் குடியரசுடன் இணைக்கும் வரையில் ஆட்சி செலுத்தி வந்தார்கள். ஆனாலும் இன்றும் தசரா கொண்டாட்டங்கள் தொடர்ந்து அரச மரியாதைகளுடன் அரசு விழாவாகவே நடைபெறுகின்றன.

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

சாதரணமான நாட்களில் அமைதியாக இருக்கும் மைசூர் நகரம் தசரா ஆரம்பிப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே திருவிழாக் கோலம் பூண்டிருக்கும். தசரா பற்றிய பிரம்மாண்டமான கண்காட்சி தொடாக்கெரே மைதானத்தில் நடைபெறும்.

இதைத் தவிர, உணவு மற்றும் திரைப்பட விழாக்கள் நடைபெறும். போட்டிகள், பந்தயங்கள், நாடகங்கள், நாட்டியங்கள் என்று நகரமே அமர்க்களப்படும். நாள்தோறும் சாமுண்டீஸ்வரி கோவிலில் ஹோமங்கள் நடைபெறும். நவராத்திரி ஒன்பது நாட்களிலும் பத்தாவது நாளான விஜயதசமியன்றும் விழாக்கோலம் பூண்டு மைசூர் ஜகஜ்ஜோதியாய்க் காட்சியளிக்கின்றது.

அரண்மனை, வீடுகள், கடைகள் மற்றும் முக்கியமான கட்டிடங்களிலெல்லாம் வண்ண வண்ண விளக்குகள் ஜாலம் காட்டி நகரையே ஒரு மந்திரத்தில் கட்டி வைக்கின்றன. கொண்டாட்டங்களின் பிரம்மாண்டம் மனதைக் கொள்ளை கொள்வதாய் இருக்கிறது.

1805ம் ஆண்டுகளில் வாடியார் குடும்பம் தசரா விழாக்களின்போது அரண்மனையில் ஒரு அரச தர்பாரைக் கூட்டும். அதில் அப்போதிருந்த முகலாய அரசர்கள், அரண்மனை அதிகாரிகள், குருமார்கள் மற்றும் முக்கிய குடிமக்கள் பங்கேற்பார்கள். ஆனால் காலத்தின் போக்கில் இன்று பழைய தர்பாரின் ஆரவாரம் குறைந்து கொண்டாட்டங்களெல்லாம் அரச குடும்பத்தினரின் தனிப்பட்ட விழாவாகிவிட்டது. இதற்கென்று சில குறிப்பிடப்பட்டவர்கள் மட்டுமே அழைக்கப் படுகிறார்கள். இந்தப் பத்து நாட்களும் அரண்மனை பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

விழா

நவராத்திரி விழாவின் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அம்பா விலாஸ் அரண்மனையிலிருந்துதான் தொடங்கும். நவராத்திரி முதல் நாளன்று மன்னர், மத சம்பிரதாயப்படி குளித்த பிறகு தன் குலதெய்வத்தை வணங்கி அரச தர்பாரை அடைகிறார். மங்கள மந்திரங்களும் வாத்தியங்களும் முழங்குகின்றன. நவக்கிரகங்களையும் பூர்ணகலசத்தையும் வழிபட்ட பிறகு ஏழு படிகளில் ஏறி தங்க சிம்மாசனத்தில் நல்லநேரம் பார்த்து அமர்கிறார். அரண்மனை முழுவதும் விளக்குகள் ஒளி வெள்ளத்தை வாரி இறைக்க, 21 குண்டுகள் முழங்க துப்பாக்கி வணக்கங்களுடன் அரசர் சிம்மாசனத்தில் ஏற, அவர் கையில் அரசின் வீரவாள் கொடுக்கப்படுகிறது.

சிம்மாசனத்தில் அமர்ந்து வந்திருப்பவர்களை வரவேற்கிறார் அரசர். பல கோவில்களிலிருந்தும் மத குருமார்களிடமிருந்தும் வரும் பிரசாதங்களை ஏற்றுக் கொள்கிறார். இசை வாத்தியங்களுக்கிடையே நடன நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

அலங்கரிக்கப்பட்ட யானை, வந்திருக்கும் விருந்தாளிகள் மேல் மலர்களைச் சொரிகிறது. அலங்கரிக்கப்பட்ட அரச குதிரை மன்னரைப் பணிந்து வாழ்த்துகிறது. ராணியின் வாழ்த்துக்களுக்குப் பிறகு அரசர் வந்திருக்கும் அரசு விருந்தினர்களுடன் சிறப்பு விருந்தில் பங்கேற்கிறார். இந்த நிகழ்ச்சிகள் ஒன்பது நாட்களும் வாணவேடிக்கைகள் கேளிக்கைகள் களியாட்டங்களுக்கிடையே தொடர்கின்றன. ஏழாம் நாளன்று மன்னர் தேவி சரஸ்வதியையும் எட்டாம் நாளன்று மஹிஷாசூர மர்த்தனியையும் வணங்குகிறார். மகாநவமியன்று அரசரது வீரவாள் பூஜை செய்யப்பட்டு மற்ற ஆயுதங்களுடன் யானை குதிரைகள் படைசூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

தேவியின் ஊர்வலம்

பத்து நாள் விழாவின் உச்சகட்டம் 10ம் நாளான விஜயதசமியன்று நடக்கும் பிரம்மாண்டமான ஊர்வலம்தான். அரச குடும்பங்களின் பரம்பரைப் பழக்கங்கள்

இந்த ஊர்வலத்தில் எதிரொலிக்கும். அன்னை சாமுண்டீஸ்வரி அலங்கரிக்கப்பட்ட யானையின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் தங்க அம்பாரியின் மீதமர்ந்து ஊர்வலம் வந்து மக்களுக்கு அருள் புரிவாள். சில காலங்களுக்கு முன்புவரை தேவிக்கு பதிலாக மன்னரே இந்த யானையில் அம்பாரி மீது ஏறி பவனி வந்து கொண்டிருந்தார். இந்த ஊர்வலம் மைசூர் அரண்மனையில் ஆரம்பித்து கிட்டதட்ட 2.5 மைல்கள் கடந்து பன்னி மண்டபத்தில் முடிவடையும். இந்த ஊர்வலத்திற்குப் பின்னால் தீப்பந்த ஊர்வலமும் ஊரையே அதிரச் செய்யும் வாண வேடிக்கைகளும் தொடரும்.

உலகத்தின் பார்வையையே தன்வசம் இழுத்துள்ள இந்த பிரமிக்க வைக்கும் திருவிழாவைக் காணக் கண் கோடி வேண்டும் என்று சொன்னால் அது மிகையாகாது.

6. ஞாபக மறதி – வரமா, சாபமா?

நம் எல்லாருக்கும் இது சாதாரணமாக நிகழ்வதுதான் - கார் சாவியை எங்கேயோ வைத்து விட்டுத் தேடுவோம்; நமக்குத் தெரிந்தவரைப் பார்க்கும்போது சமயங்களில் அவர் பெயர் தொண்டையிலிருக்கும், வாய்க்கு வராது; கண்ணாடியை எங்கே வைத்தோம் என்பது மறந்துவிடும். ஏன் இந்த ஞாபக மறதி?

ஞாபக மறதிக்கு முக்கியமான ஒரு காரணம் நாம் அந்தக் குறிப்பிட்ட தருணத்தில் எவ்வளவு கவனம் செலுத்துகிறோம் என்பது. சரியான கவனம் செலுத்தாமல் இருப்பது எவ்வளவு தூரம் நம் நினைவுகளை பாதிக்கிறது என்பதை மனவியல் நிபுணர்கள் தங்கள் சோதனைகள் மூலம் காட்டியிருக்கிறார்கள். அதில் ஒன்றுதான் கொரில்லா சோதனை!

இந்த சோதனையில் கலந்து கொண்டவர்களுக்கு ஒரு படம் காண்பிக்கப்பட்டது. அந்தப் படத்தில் கூடைப்பந்து வீரர்கள் பந்தை ஒருவருக்கொருவர் 'பாஸ்' செய்வார்கள். பார்வையாளர்கள் அவர்கள் ஒவ்வொருவரும் எத்தனை முறை பந்தை பாஸ் செய்தார்கள் என்று சொல்லவேண்டும். பார்வையாளர்கள் மிக கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காட்சி முடிந்தது. சோதனையாளர் கலந்து கொண்டவர்களிடம் அந்தக் காட்சியில் ஏதாவது வித்தியாசமாகப் பார்த்தார்களா என்று கேட்டார்.

"வித்தியாசமாகவா? அப்படி ஒன்றுமில்லையே" என்று பார்த்தவர்களில் பாதிப் பேருக்கு மேல் வியப்புடன் சோதனையாளரை நோக்கினார்கள். 'பந்தை ஒருவருக்கொருவர் பாஸ் செய்து கொண்டார்கள்.. அவ்வளவுதானே!' என்பது போலப் பார்த்தார்கள்.

சோதனை செய்தவர் சிரித்தவாறே மறுபடியும் அந்தப் படத்தை ஓடவிட்டார். படம் ஓட ஆரம்பித்து முப்பது விநாடிகளில் யாரோ ஒருவர் கொரில்லாவைப் போல உடை அணிந்து மைதானதிற்குள் நுழைவதுபோல காட்சி. அவர் நின்று காமிராவை நோக்கிப் பார்க்கிறார். பிறகு அவர் இருக்கைக்குத் திரும்புகிறார். இந்தக் காட்சி ஐந்து விநாடிகளுக்கு நீடிக்கிறது. பார்வையாளர்களில் பெரும்பான்மையானோர் இதைக் கவனிக்கவில்லை.

இதற்குக் காரணம் நினைவுச் சிதறலே. கவனம் முழுவதும் பந்தை எத்தனை முறை மாற்றிக் கொள்கிறார்கள் என்பதில் இருந்தபோது இயல்புக்கு மாறான இந்தக் காட்சி ஏனோ மனதில் பதியவில்லை. 1999ல் இந்த வீடியோ காட்டப்பட்டபோதும் பார்வையாளர்களில் பாதிப்பேருக்கு மேல் கொரில்லா ஆளை

அடையாளம் காணவில்லை. 30 ஆண்டுகளுக்கு முன் இந்த சோதனை முதன்முதலாக நடத்தப்பட்டபோதும் இதே நிலைதான்!

இன்னொரு நினைவுச் சிதறல் சோதனை. இதில் சோதனையாளர் பார்வையாளர்களிடம் மும்முரமாக உரையாடுகிறார். கவனம் முழுவதும் உரையாடலில் இருக்கிறது. அப்போது இருவர் ஒரு கதவை தூக்கிக்கொண்டு அவர்களிடையே நடந்து செல்கிறார்கள். செல்லும்போதே சோதனை செய்பவர் இடத்தில் வேறு ஒருவர் மாறி அவர் பார்வையாளர்களிடம் தொடர்ந்து உரையாடுகிறார். பார்வையாளர்கள் கவனத்தில் கதவை இருவர் எடுத்துக் கொண்டு சென்றதும் பதியவில்லை; முற்றிலும் புதிய ஒருவருடன் உரையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் அவர்கள் உணரவில்லை.

இந்த கவனச் சிதறலுக்கு இன்னொரு காரணம் நாம் எவ்வளவு தூரம் ஆழமாக ஒரு செய்தியை மனதில் பதிய வைக்கிறோம் என்பது. இதனை Memory encoding: depth of processing என்று கூறலாம்.

இதனை அறிய மூன்று விதமாக சோதனை செய்து பார்க்கப்பட்டது.

1. மேலோட்டமாகப் பார்ப்பது : இதில் கலந்து கொண்டவர்களிடம் ஒரு வார்த்தையைக் காட்டி அது எந்த எழுத்துருவில் (font)ல் எழுதப்பட்டிருக்கிறது எனக் கேட்கப்பட்டது.

2. நடுத்தரமாக சிந்திப்பது : இதில் கலந்து கொண்டவர்களிடம் ஒரு வார்த்தையைச் சொல்லி அதற்கு எதுகையான வார்த்தைகளை சொல்லச் சொன்னார்கள்.

3. ஆழமாகச் சிந்திப்பது : பங்கு கொண்டவர்களிடம் ஒரு வார்த்தையைச் சொல்லி அதனை ஒரு வாக்கியத்தில் எப்படி பொருத்தலாம் என்று கேட்டார்கள்.

ஆழமாக சிந்திக்கச் சொன்னவர்கள் கொடுக்கப்பட்ட வார்த்தைகளை அனேகமாக மனதில் நினைவு வைத்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு சிந்தித்து வாக்கியத்தில் அமைப்பதற்கும் அதிக நேரம் தேவைப்பட்டது.

சாதாரணமாக நாம் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்வதில்லை. நடக்கப்போகும் அல்லது செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்ளவே முயற்சிக்கிறோம். உதாரணமாக, இன்று 12 மணிக்கு மருந்து சாப்பிட வேண்டும்; இந்த வாரம் ஞாயிற்றுக் கிழமை சினிமா போக டிக்கெட் ரிசர்வ் செய்ய வேண்டும்; 26ம் தேதி நண்பனின் திருமணம் - கண்டிப்பாகச் செல்லவேண்டும்; போகும் வழியில் காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொள்ள வேண்டும் என செய்ய வேண்டிய

விஷயங்களையெல்லாம் இந்த நேரத்தில் அல்லது இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு செய்ய வேண்டும் என்று மனதிற்குள் ஒரு அலாரம் வைத்துக் கொள்கிறோம்.

ஞாபக மறதி என்பது செய்ய வேண்டிய நிகழ்ச்சிகளை நினைவில் வைத்திருக்கிறோமா அல்லது செய்ய வேண்டிய காலத்தை நினைவு கொள்கிறோமா என்பதைப் பொறுத்தது என்று மனவியல் நிபுணர்கள் சொல்கிறார்கள்.

பொதுவாக நாம் நினைவில் வைத்துக் கொள்ள ஒரு வெளித் தூண்டுதலைப் பயன்படுத்துகிறோம். உதாரணமாக, ஒரு நிகழ்ச்சிக்குப் போக வேண்டுமென்றால் அதனை நாளேட்டில் குறித்துக் கொள்கிறோம். பெட்ரோல் நிலையத்தைக் கடந்து செல்லும் போதுதான் பெட்ரோல் போடவேண்டும் என்று நினைவு வருகிறது. ஆனால் அந்த வழியாகச் செல்லும்போது வழியில் ஒரு விபத்து நேர்ந்திருந்தால் நம் கவனம் சிதறிப்போய் பெட்ரோல் போட வேண்டும் என்பதை மறந்து விடுகிறோம்.

இந்த நினைவுச் சிதறல் ஒரு சாபமல்ல - வரமாகக் கூட இருக்கக் கூடும் சிலநேரங்களில் என்பதை ரஷ்யாவைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளரின் வாழ்க்கைக் குறிப்பு காட்டுகிறது. அவரது ஞாபக சக்தி மிகவும் அபாரமானது. அவரால் சின்னச் சின்ன விஷயங்களைக்கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியும். பிறருடன் பேசியவை, அவரது வாழ்க்கையில் நடந்த சின்ன சின்ன சம்பவங்கள் என்று எல்லாவற்றையும் அணு அணுவாக நினைவிலிருந்து சொல்ல முடியும். ஆனால் அதுவே அவரது பலவீனமாகவும் இருந்தது.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை நினைவில் கொண்டு வர வேண்டுமென்றால் அது போன்ற எல்லா சம்பவங்களும் நினைவுக்கு வரும். அவரால் எதையுமே குறிப்பாக நினைவுக்குக் கொண்டு வர முடியாது. ஒரு நண்பர் கூறிய குறிப்பிட்ட விஷயத்தை நினைவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் அவர் பேசிய அத்தனை செய்திகளும் ஒன்றாக நினைவில் வரும். அதிலிருந்து அவருக்கு வேண்டிய செய்தியை மட்டும் பிரித்தெடுக்கும் ஒரு சூழ்நிலை - அவரைப் பொறுத்தவரை அவரது நினைவாற்றலே அவருக்கு ஒரு சாபமாகவும் அமைந்தது.

இதை சரி செய்வதற்கு அவரே ஒரு வழியைக் கண்டுபிடித்தார். அவர் மறக்கவேண்டும் என்று கருதிய விஷயங்களை ஒரு கரும்பலகையில் எழுதியதைப் போல் கற்பனை செய்து அதனை மனதிற்குள் அழித்து விடுவாரம். இந்த வழி அவருக்கு மிகவும் உதவியாகவே இருந்தது எனச் சொல்கிறார்.

இந்த நினைவுக் குறைவும் இறைவன் நமக்குக் கொடுத்த ஒரு வரம்தான் எனக் கருத வேண்டும். இல்லையென்றால் நம் வாழ்வில் நடந்த துயரமான நிகழ்ச்சிகள் நம்மைத் தொடர்ந்து வந்து நம் எதிர்காலத்தையே பாதிக்கக் கூடும்.

(Source : Seven sins of memory)

7. ஜூலியஸ் சீசர் கொலையின் பின்னணியில்....

கி.மு. 49ம் ஆண்டு, ஜூலியஸ் சீசர் மேற்கு இத்தாலியிலுள்ள ரூபிகான் நதியைக் கடந்து ரோமன் குடியரசில் ஒரு உள்நாட்டுப் போரை ஏற்படுத்தினார். ஜூலியஸ் சீசரின் பரம எதிரி பாம்ப்பே கிரீசுக்குத் தப்பிச் சென்றார். மூன்றே மாதங்களிலில் இத்தாலிய தீபகற்பம் முழுவதையும் சீசர் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். ஸ்பெயின் நாட்டில் பாம்ப்பேய்க்கு ஆதரவாயிருந்தவர்களையும் வென்றார். பின்னும் விடாமல் பாம்ப்பேயை கிரீசுக்குத் துரத்திச் சென்றார். ஆனால் பாம்ப்பே அதற்குள் எகிப்திற்குத் தப்பிச் சென்றுவிட்டார். அவரை எகிப்திற்குத் தொடர்ந்த சீசருக்கு பாம்ப்பேயின் வெட்டப்பட்ட தலை நட்பின் பரிசாக அளிக்கப்பட்டது.

எகிப்திலிருந்து திரும்புவதற்கு முன்னால் சீசர் கிளியோபட்ராவை தன் சார்பில் எகிப்தின் அரசியாக நியமித்தார். வட ஆப்பிரிக்காவில் இருந்த தன் மற்ற எதிரிகளை வென்ற பின்னர், கி.மு. 47ம் ஆண்டு தனது ஆட்சியை முழுமையாக நிலைநிறுத்திய மனநிறைவுடன் ரோமிற்குத் திரும்பினார். ஆனால் சீசர் அதனுடன் நிற்கவில்லை. கி.மு. 44ம் ஆண்டு வரை தொடர்ந்து தன்னை நிலைநிறுத்திக் கொள்ள போரிட்டு வந்தார். அந்த ஆண்டு பிப்ரவரி மாதம் தன்னை வாழ்நாள் சர்வாதிகாரியாகப் பிரகடனம் செய்தார். அவரது இந்தச் செயலும் அதிகார ஆணவமும் அவரது அரசவையில் இருந்தவர்களை அவர் மீது வெறுப்படைய வைத்தன. அவரது அரசவையிலிருந்த அறுபது உறுப்பினர்கள் சீசரின் சர்வாதிகாரத்தை ஒழிக்க ஒரே வழி அவரைக் கொல்வதுதான் என்று தீர்மானித்தார்கள்.

டமாஸ்கசைச் சேர்ந்த நிக்கோலஸ் என்பவர் சீசரது மரணத்தைப் பற்றி விரிவாக விளக்குகிறார். அவர் சீசர் கொல்லப்பட்டதை நேரில் பார்க்காவிட்டாலும் அந்த நிகழ்ச்சியின்போது இருந்தவர்களை சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது.

சீசரைக் கொல்லத் திட்டமிட்டவர்கள் ஒருபோதும் ஒரே சமயத்தில் சந்தித்துக் கொள்ளவில்லை. யாராவது ஒருவர் வீட்டில் சிலர் கூடிப் பேசுவார்கள். நிறையத் திட்டங்கள் அலசப்பட்டன; எப்படி, எங்கே சீசரைத் தீர்த்துக் கட்டுவது என்று. சிலர் சீசர் எப்போதும் நடந்து செல்லும் புனித வழி எனும் பாதையில் அவரை மடக்கிக் கொன்றுவிடலாமென்று கூறினர். இன்னொரு யோசனை சீசரைத் தேர்தலின் போது கொன்று விடுவது என்பது. அந்த சமயத்தில் சீசர் தேர்தலுக்கான மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிப்பதற்காகப் பாலத்தைக் கடந்து செல்வார். அது சரியான தருணமாக இருக்கும் என்பது அவர்கள் கணக்கு. யார் பாலத்திலிருந்து சீசரைக் கீழே தள்ளுவது, யார் அவரைக் கொல்வது என சீட்டுப் போட்டுப் பார்க்க

வேண்டும் என்றார்கள். அடுத்த யோசனை கத்திச் சண்டை போட்டி நடக்கும்போது அவரைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்பது. அந்த சமயத்தில் கத்தியுடன் யார் சென்றாலும் சந்தேகப்பட மாட்டார்கள் என்பது அவர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று எண்ணினார்கள். ஆனால் பெரும்பாலானோர் சீசரை அரசவையில் வைத்துக் கொன்றுவிட வேண்டுமென்று விரும்பினார்கள். அப்போது உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் இருக்க மாட்டார்கள். கத்திகளை மறைத்து வைப்பது சுலபம் என்பது அவர்கள் எண்ணம். கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோர் இந்த முடிவிற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

ஜூலியஸ் சீசரின் நெருக்கமான நண்பர்களுக்கு அவரைக் கொல்வதற்கான திட்டங்கள் பற்றி வதந்திகள் கசிந்து வந்தன. அவர்கள் சீசர் அரசவைக்கு வர வேண்டாம் என்று கருத்து தெரிவித்தார்கள். சீசரது மருத்துவர்களும் சீசரின் உடல் நிலையைக் கருதி அவர் அன்று அரசவை செல்ல வேண்டாம் என்றார்கள். அவரது மனைவி கல்பூரினா சில நாட்களாகக் கெட்ட கனவுகள் கண்டிருந்ததால் தன் கணவருக்கு ஆபத்து வருமோ எனக் கலங்கியிருந்தாள். இந்த நிலையில் அவளும் கணவன் அரசவை செல்வதை விரும்பவில்லை.

ஆனால், நண்பனைப் போல் உடனிருந்து சீசரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தவர்களில் முதல்வனான ப்ரூடஸ், சீசரிடம் ”இது என்ன பைத்தியக்காரத்தனம்! ஒரு பெண் கண்ட அர்த்தமில்லாத கனவுகளையும் சில அறிவில்லாதவர்களின் வார்த்தைகளையும் கேட்டு அவைக்கு செல்லாதிருக்கலாமா? இது அவைக்கு நீங்கள் செய்யும் அவமானமில்லையா? நான் சொல்வதைக் கேளுங்கள். யார் யாரோ சொல்வதைக் கேட்டு அவைக்கு வராமலிருக்க வேண்டாம்” என்றான். ப்ரூடஸ் சொன்னதைக் கேட்டு மனம் மாறிய சீசர் அவைக்குச் செல்ல நினைத்தார்.

சீசர் அரசவை செல்லும் முன் அவரது குருமார்களும் அவருக்காக பலி ஏற்பாடு செய்தபோது ஏற்பட்ட கெட்ட சகுனங்களைக் கூறி அவரை எச்சரித்தார்கள். கெட்ட சகுனங்களால் பலி ஏற்பாட்டை மாலை வரை ஒத்தி வைத்து, மாலை வரை சீசரை அரசவைக்குச் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். சீசரும் இதற்கு சம்மதம் தெரிவித்தார்.

எங்கே தங்கள் திட்டம் வீணாகி விடுமோ என்று எண்ணிய ப்ரூடஸ் சீசரிடம் மறுபடியும் சென்று, ”யாரோ வேலையில்லாதவர்கள் உளறுவதைக் கேட்டு அரசவைக்கு வராமல் இருக்காதீர்கள். தாங்கள் கூட்டிய அரசவை தங்களுக்காகக் காத்திருக்கிறது. கெட்ட சகுனங்களையே மாற்றி நல்லவைகளாக்கும் சக்தி உங்களுக்கு இருக்கிறது. வாருங்கள்!" என்று கூறி சீசரது வலது கரத்தைப் பற்றியவாறே அவரை அரசவைக்கு அழைத்துச் சென்றான்.

கொலுமண்டபத்திற்கு வந்த சீசரை அங்கிருந்த உறுப்பினர்கள் கரகோஷத்துடன் வரவேற்றனர். அவரைக் கொல்லத் திட்டமிட்டிருந்தவர்கள் அவர் அருகில் நின்றனர். டில்லியஸ் சிம்பர் எனும் அந்த உறுப்பினர் சீசரால் நாடு கடத்தப்பட்ட தன் சகோதரனுக்காக அவரிடம் பேசும் சாக்கில் சீசரது கரங்களை அவரது மேலங்கியுடன் சேர்த்து தன் கைகளால் பிடித்துக் கொண்டார். சிம்பர் சீசரின் கரங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டதால் சீசரால் அவற்றை விடுவித்துக் கொள்ள முடியவில்லை.

சரியான தருணத்தை உணர்ந்த எதிரிகள் தாங்கள் மறைத்து வைத்திருந்த பிச்சுவாக்களை வெளியே எடுத்து சீசரை நோக்கிப் பாய்ந்தார்கள். முதலில் சர்விலஸ் காஸ்கா என்பவன் கத்தியை சீசரின் இடது தோளை நோக்கி செலுத்த முயன்றான். ஆனாலும் அந்த பரபரப்பில் அவனது குறி தவறியது. சீசர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றபோது காஸ்கா தனது சகோதரனை நோக்கிக் கத்த, அவன் சீசரின் விலாவில் கத்தியைச் செலுத்தினான். இன்னொரு உறுப்பினரான காசியஸ் லான்ஜினஸ் குத்த முயன்றபோது குறி தவறி மார்கஸ் ப்ரூடஸின் விரலில் குத்திவிட்டான். பின்னர் காசியஸ் சீசரின் முதுகிலும், புரூடஸ் அவரது இடுப்பிலும் குத்தினர். இன்னொருவன் சீசரது தொடையில் குத்த, தாக்குதல் எல்லா முனையிலிருந்தும் சரமாரியாய் நடந்தது. ஒவ்வொருவரும் சீசரது கொலையில் தங்கள் பங்கும் இருக்க வேண்டும் என்பதுபோல் தொடர்ந்து குத்தினர்.

இறுதியில் சீசர் பாம்ப்பேயின் சிலையின் கீழே காயங்களுடன் வீழ்ந்தார், உடலில் முப்பத்தைந்து கத்திக் குத்துக்களுடன். சர்வாதிகாரியாகத் தன்னைப் பிரகடனம் செய்து கொண்ட சீசரின் இறுதி மூச்சு பிரிந்தது.

8. ராமர் கதை – சில சரித்திரச் சான்றுகள்

ராமர் கதை (ராமாயணம்) நிகழ்ந்ததாகக் கூறப்படும் நம் இந்தியாவிலேயே, "ராமாயணம் என்பது கட்டுக்கதை, ராமர் என்று ஒருவர் வாழ்ந்தார் என்பது முழுப் பொய், ராமர் சேது பாலாமா? அப்படி என்று ஒன்று கிடையவே கிடையாது" என நாமே நம் சரித்திர உண்மைகளைப் பல்வேறு காரணங்களுக்காக மறுத்து வருகிறோம். இவ்வேளையில், புத்தமதத்தினர் பெரும்பான்மையாக வசிக்கும் இலங்கையில் அந்த அரசின் சுற்றுலா அமைச்சரகம், ஸ்ரீலங்காவில் ராமாயணகால சம்பவங்கள் நடந்ததற்கான ஆதாரங்களைத் தேடி, கிட்டத்தட்ட 50 இடங்களைத் தேர்வு செய்திருக்கிறது.

ராமாயண இதிஹாசம் இந்தியா, இலங்கை இரண்டு இடங்களிலுமே நடந்திருப்பதால் இந்திய சுற்றுலாவாசிகளை ஈர்க்க ஸ்ரீலங்கா சுற்றுலா வளர்ச்சி நிறுவனம் இதன் துவக்க விழாவை நமது தலைநகர் தில்லியில் நடத்தத் தீர்மானித்தது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை நிர்வாகி கலைசெல்வன், இலங்கையில் ராமாயண நிகழ்விற்கானஆதாரங்கள் வெறும் கற்பனையல்ல என்றும், அவைகளில் புதைந்திருக்கும் சரித்திர உண்மைகளைக் கண்டறிய ஒரு ஆராய்ச்சிக் குழுவை நியமித்திருப்பதாகவும் கூறினார்.

'அசோக வாடிகா' என்னும் இந்த ஆராய்ச்சிக் குழு அமைப்பின் தலைவர் டி.ஒய். சுந்தரேசன், பாரதத்தின் பண்டைய கலாசாரம் மற்றும் அறிவியல் பற்றிய ஆராய்ச்சி செய்து வரும் 'பாரத் ஞான்' நிறுவனத்தின் நிறுவனர் டி.கே ஹரி மற்றும் அவரது துணைவியார் ஹேமா ஹரி ஆகியோரை ஸ்ரீலங்கா சுற்றுலாக் கழக நிர்வாகிகளுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களின் அழைப்புக்கு இணங்கி ஹரி மற்றும் அவரது துணைவியார் ராமாயண நிகழ்வுச் சான்றுகளைப் பற்றி ஸ்ரீலங்காவிலுள்ள ஆராய்ச்சியாளர்களுடன் கலந்தாலோசிக்கவும், தகுந்த வழிகாட்டவும் அங்கு சென்றிருந்தனர். அவர்கள் இலங்கையில் ராமாயண நிகழ்வுக்கான சான்றுகள் பற்றிய தடங்களை ஒரு பன்முக ஒளி ஊடகம் (Multimedia) மூலமாக, நூற்றுக்கணக்கில் குழுமியிருந்த பல அறிஞர்களுக்கிடையே விளக்கினர். இவர்களது ஒளிக்காட்சியை அங்கு வந்திருந்த புத்த மத பிட்சுக்கள், ஹிந்து சமயத்தினர், சரித்திர ஆய்வாளர்கள், கவிஞர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் கண்டு கட்டுண்டு பிரமித்தனர். வந்திருந்த அனைத்துத் தரப்பினரும் ஹரி அவர்கள் ராமாயணத் தடங்களை விவரித்த விதம் குறித்து வியந்து பல கேள்விக் கணைகளைத் தொடுத்து விளக்கம் பெற்றனர்.

கூட்டம் குறிப்பிட்ட நேரத்தைக் கடந்து மூன்று மணி நேரம் தொடர்ந்தது. இந்த வரவேற்பினால் பெரிதும் கவரப்பட்ட இலங்கை சுற்றுலாக் கழகம் இலங்கையில் ராமாயணத் தடங்கள் பற்றிய புனித சுற்றுலா ஏற்பாடுகளுக்கு பாரத் ஞான் ஆராய்ச்சி நிறுவனத்தைத் துணை கொள்ளத் தீர்மானித்தது.

இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும். இந்தக் கூட்டம் நடந்த இடம் ஹோட்டல் காலே ஃபேஸ் என்பது. இதன் சின்னம் தண்டு மொனரா விமானம் (பறக்கும் மயில்). இந்த விமானம்தான் ராவணன் தன் மனைவி மண்டோதரியுடன் இலங்கையைச் சுற்றிவர உபயோகப்படுத்தப்பட்டதாம்.

இதைத் தொடர்ந்து அக்டோபர் 2008ல் இன்னுமொரு ஒளிக்காட்சியை பொதுமக்கள் பார்வைக்காக இலங்கை அரசின் ஏற்பாட்டின் பெயரில் ஹரி தம்பதியர் நடத்தினர். இந்த நிகழ்ச்சிக்காக ஸ்ரீலங்காவிலுள்ள சின்மயா மிஷன், 'ஸ்ரீலங்காவில் ராமாயணம்' என்ற புத்தகத்தை வெளியிட்டது. இதில் சின்மயா மிஷனைச் சேர்ந்த சுவாமிஜிகளின் கட்டுரைகளுடன் பாரத் ஞான் மிகுந்த ஆராய்ச்சி செய்து வெளியிட்ட கட்டுரைகளும் அழகான படங்களோடு அமைந்திருந்தன. இந்தப் புத்தகம் ஸ்ரீலங்கா அரசு ராமாயண நிகழ்விற்கான ஆதாரங்களாகக் காட்டும் ஐம்பது இடங்களைப் பற்றியும், சுற்றுலா பற்றியும் விவரிக்கிறது,

ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறையின் முயற்சிகளுக்குத் தங்கள் பங்கு பற்றி ஹரி பின்வருமாறு கூறுகிறார்:

"ஸ்ரீலங்கா இனம் கண்டுள்ள ஐம்பது தடங்களில் ஏற்றுக் கொள்ளக் கூடியவை எத்தனை, தள்ள வேண்டியவை எத்தனை என்பதை அறிவுபூர்வமாக, ஆராய்ச்சி வழியாக, பகுத்தறிவோடு, சுய சிந்தனையோடு நிரூபணம் செய்ய வேண்டியது எங்களது பணி. இதில் மத சம்பந்தமான அல்லது தெய்வீகமான குறிக்கோள் என்று எதுவும் கிடையாது. அறிவுபூர்வமாக ஏற்கவேண்டிய அடையாளங்களை ஏற்பதுதான் இந்த முயற்சி.

வரலாற்று சான்றுகளை ஆராய்கிறோம். புத்தர்கள் வாழும் நாடான ஸ்ரீலங்காவில் புத்தமதக் குறிப்புகள் இருக்கின்றன. இந்தக் குறிப்புகளில் ராமாயண நிகழ்வுக்கான சான்றுகள் 49 இடங்களில் காட்டப்படுகின்றன. இதுவரை இரண்டு முறை இலங்கை சென்றிருக்கிறோம். இன்னும் பலமுறை செல்ல வேண்டியிருக்கும்."

ஹனுமான் இலங்கைக்குச் சென்றது, சஞ்சீவி பர்வதத்திலிருந்து சில கற்கள் இலங்கையில் வீழ்ந்ததாகக் கூறப்படுவது போன்றவையெல்லாம் அங்குள்ள தடங்கள் கொண்டு நிரூபிக்க முடியுமா என்ற கேள்விக்கு, வரலாற்றுபூர்வமாகவும் ஆராய்ச்சி மூலமாகவும் ராமாயண நிகழ்ச்சிகள் 7000 ஆண்டுகளுக்கு முன் நடந்ததை நிரூபிக்க முடியும் என்கிறார் ஹரி.

ஹரி அவர்கள் துணைவியாருடன் ராமாயண காலச் சான்றுகளை நேரில் கண்டது குறித்து விரிவாகக் கூறினார்.

சீதா எலியா (சீதை அம்மன் கோவில்)

சீதைக்குக் கோவில் அமைந்த இடம். இங்கு அசோகவனத்தில்தான் ராவணன் சீதையைச் சிறை பிடித்த பிறகு காவலில் வைத்திருந்தார். இந்த இடத்தை மரங்கள் அடர்ந்த காடு என்று சொல்ல முடியாது. ஆனால், அழகான பூஞ்சோலைகள் அமைந்த இடம். ராவணன் இந்த அழகிய சூழலில் சீதையை காவல் வைத்திருந்தால் ரம்மியமான சூழ்நிலையில் மனம் மாறி தன்னை மணக்கச் சம்மதிக்கலாம் என்ற எண்ணம்தான். இதற்கு அருகிலேயே ஹனுமானுக்கும் கோவில் உள்ளது.

டுவரும்போலா

டுவரும்போலா என்றால் சபதம் எடுத்த இடம் என்று பொருள். இந்த இடத்தில் சீதை தன்னை அக்னி பரீட்சை செய்து கொண்டாள். ராமன், சீதையை ராவணனிடமிருந்து மீட்ட பிறகு, சீதை ஒரு வருடம் ராவணனின் காவலில் இருந்ததால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூற, சீதை அக்னிப் பிரவேசம் செய்து புடமிட்ட தங்கமாக வெளியே வந்து தன் கற்பை நிரூபித்த இடம். இந்த இடத்தில் அனுராதபுர போதிமரத்தின் கன்று நடப்பட்டது. இதன் கீழே ஒரு சிறு கோவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ராமாயண ஓவியங்களைக் காணலாம். இன்றும் இந்தக் கோவிலில் சீதையின் பெயரால் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்வது சட்டரீதியாக ஒப்புக் கொள்ளப்படுகிறது.

முனேஸ்வரம் கோவில்

இது ராமாயண காலத்திற்கும் முந்தைய சிவன் கோவில். சிவலிங்கம் இங்கே அமைந்துள்ளது. முனேஸ்வரம் என்றால் முன்னு + ஈஸ்வரன் என்று பிரிக்கலாம். இதுதான் சிவபெருமானுக்காக அமைக்கப்பட்ட முதல் கோவில். ராமன் இந்த இடத்திற்கு வரும் முன்பே இங்கு சிவலிங்கம் அமைந்திருந்தது. இந்தக் கோவிலில்தான் ராவணன் சிவபெருமானை வழிபட்டார்.

மானவாரி

ராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் போவதற்காக ராமன் சிவபெருமானிடம் வேண்டியபோது, அவர் ராமனை மானவாரி, திருகோனேச்வரம், திருகெதெச்வரம், மற்றும் ராமெச்வரத்தில் லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கச் சொன்னார். இதில் முதல் லிங்கம்தான் மானவாரி. இந்த லிங்கம் ராமலிங்க சிவன் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

திருகோனேஸ்வரம்

இந்தக் கோவில் ராவணனின் மனைவி மண்டோதரியின் தந்தை அமைத்து பிரதிஷ்டை செய்த சிவன் கோவில். புராதன கோவிலான இது போர்த்துக்கீசியர்களால் 1624ல் அழிக்கப்பட்டு ஐம்பது வருடங்களுக்கு முன் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

கோவிகேலனியாபுத்தர் கோவில்

ராம ராவண யுத்தத்திற்குப் பிறகு விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் நடந்த இடம் இது. இந்த மகுடம் சூட்டும் விழாவிற்கு ராமன் வரவில்லை. அவரது தம்பி லக்ஷ்மணன்தான் நடத்தி வைத்தார். தந்தையின் சொல்படி 14 ஆண்டுகள் காட்டில் வசிக்க வேண்டுமென்பதால் தன் தம்பி லக்ஷ்மணனை தனது சார்பாக அனுப்பி வைத்தார். இந்த இடத்தையும் போர்த்துகீசியர்கள் அழித்து விட, பின்னர் கிறிஸ்தவர்களால் திரும்பக் கட்டப்பட்டது.

விபீஷணனின் மாளிகை இங்கேதான் கேலனி நதிக்கரையில் அமைந்திருந்தது. விபீஷணனிற்காக ஒரு புத்த கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலின் பின்புறம் விபீஷணப் பட்டாபிஷேகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

விபீஷணனுக்காக ஒரு தனிக்கோவிலும் அமைந்துள்ளது. அவரை ஸ்ரீலங்காவில் ஒரு அரசனாக, தெய்வமாக வழிபடுகிறார்கள். நான்கு காவல் தெய்வங்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார் விபீஷணன். இந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பலர்

விபீஷணன் பெயரால் வழங்கப்படும் தீர்ப்பை 'விபீஷணன் தீர்ப்பு' என்று முழு மனதோடு ஏற்றுக் கொள்கிறார்கள்.

ரூமசாலா

பாணங்களால் கட்டுண்ட ராமனையும், லக்ஷ்மணனனையும் உயிர்ப்பிக்க ஹனுமான் சஞ்சீவனி மலையை பெயர்த்துக் கையில் சுமந்து பறந்து வந்தார். அப்போது பாதையில் சில கற்கள் ஐந்து இடங்களில் விழுந்தன. அவற்றில் ஒன்றுதான் ரூமசாலா எனும் இடம். இந்த இடம் இலங்கையின் தென்புறத்தில் உள்ளது. இங்கே ஹனுமாருக்குக் கோவில் உள்ளது. புத்த பிக்குகள் இந்தக் கோவிலைக் கட்டியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மஹாவம்சம்

இது பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழம்பெரும் புத்த நூல். இந்த நூலில் ராமாயண நிகழ்வுகள் பற்றி 49 இடங்களில் குறிப்பிடப்படுகின்றன.

வானரங்கள் பற்றி கூறும்போது, "வானரத்தையும், குரங்குகளையும் பிரித்துப் பார்க்க வேண்டும். 'வா நரா' என்றால் நரனைப் போன்றவர்கள்; அதாவது மனிதர்களைப் போன்றவர்கள்" என்று சொல்லும் ஹரி, "ராட்சஷர்கள் என்பதையும் ராட்சஷர்கள் என்றால் ரட்சிப்பவர்கள் - அவர்கள் வயிற்றை ரட்சிப்பவர்கள்" என்று விளக்கம் கொடுக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசும் அங்குள்ள பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களுமே ராமாயணம் என்ற இதிஹாசத்தின் ஒரு முக்கிய பகுதி இலங்கையில் நடந்ததை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து, சுற்றுலாவாசிகளையும் தம் பக்கம் ஈர்க்கும்போது நமது இந்திய அரசு ஏனோ இதை ஒப்புக்கொள்ளத் தயக்கம் காட்டுகிறது என்று சொல்கிறார் ஹரி.

ராமசேது பற்றி கேட்ட போது, அங்கு இதை நிரூபணம் செய்ய நாணயங்கள் இருக்கின்றன. மற்றும் ஸ்ரீலங்காவில் சேது காவலன் என்ற ஒரு பரம்பரையே இருக்கிறது. இன்று வேண்டுமானால் அவர்கள் கிறிஸ்தவ மதத்தினராக ஃபெர்னான்டஸ் சேது காவலன் என்ற பெயரில் இருக்கலாம். ஆனால் சேது காவலர்கள் இருந்திருக்கிறார்கள். இது தவிர, அங்குள்ள நூலகத்தில் சேது பாலம்

கட்டுவதற்கான வரைபடங்கள் முப்பது ஆண்டுகள் முன் வரை இருந்ததாக சொல்லப்படுவதாகக் கூறினார்.

ராமரை தெய்வம் என்று சொல்லப்படுவதைப் பற்றி கேட்டபோது, அவர், "ராமன் ஒரு வரலாற்று மனிதன்; அடுத்து அவர் மனிதன்; பிறகு அவர் ஒரு ராஜா; அதற்கும் மேல் அவர் ஒரு தெய்வம். இந்த நாலு படிகளில் நாங்கள் எங்கள் ஆராய்ச்சியில் அவரை பதினாறு குணநலன்களுடன் விளங்கிய மனிதனாகத்தான் பார்க்கிறோம். ராமன், ராவணனை வென்றபோது அங்குள்ள மக்கள் ராமனை தெய்வமாகப் பார்த்தார்கள். அப்போது ராமன், தான் தசரத புத்திரன் எனவும், தெய்வமில்லை என்றும் சொல்கிறார். தெய்வமாகப் பார்ப்பது அவரவர் சொந்த விருப்பம்" என்று சொல்கிறார் ஹரி.

"நம்மை ஆண்ட வெள்ளைக்காரர்களால் ராமர் காவியம் ஒரு கட்டுக்கதை (mythology) என்று கூறப்பட்டாலும், ராமர் கதை ஒரு இதிஹாசம் - இதிஹாசம் என்றால் அது 'இது இப்படி நடந்தது' என்று பொருள். 'நடந்தது' என்றால், அது கதையல்ல உண்மை" எனக் கூறுகிறார் ஹரி.

ஹரி தம்பதியினரின் ஆராய்ச்சிகள் தொடர நம் வாழ்த்துக்கள்!

9. முத்தமா? ஊஹூம்.....!

முத்தம் என்று சத்தம்போட்டுச் சொன்னாலே மகாபாவம் என்று நினைக்கிற கலாசாரம் நம்முடையது. இருட்டில் நடக்கவேண்டியதையெல்லாம் வெளிச்சம் போடலாமா என்று சொல்கிறார்கள் கலாசாரக் காவலர்கள். சினிமாவில் முத்தக்காட்சி வருவதாகச் சொன்னாலே அது பெரிய செய்தியாகிவிடுகிறது- உடலுறவு பற்றிய மொத்தத்தையும் சினிமாப் பாடல்களில் பச்சையாகச் சொன்னாலும் அது தப்பில்லை- முத்தத்திற்கு மட்டும் தடை. பத்மினி கோலாபூரி வேல்ஸ் இளவரசுக்கு இதழில் 'இச்' கொடுத்ததும் ஷபனா அஸ்மி நெல்சன் மண்டேலாவை முத்தமிட்டதும் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஹாலிவுட் நடிகர் ரிச்சர்ட் கேர் ஷில்பாவை முத்தமிட்டதும் எவ்வளவு சர்ச்சைக்குரிய செய்திகளாகின என்பதை அறிவோம்.

ஆயத்துல்லா கோமேனி கணவனும் மனைவியும் முத்தம் கொடுத்துக் கொள்வதற்கு கூடத் தடை விதித்தார். ஆனால் கடவுள் மனிதனுக்கு வாழ்க்கையின் அர்த்தத்தை முத்தத்தின் மூலம் புரியவைத்தார் என்று பைபிளின் சொல்கிறது.

முத்தம் கொடுப்பது அவ்வளவு பாவமான செயலா? சொல்லப் போனால் அதனால் ஏற்படும் நன்மைகள் பல. பென்சில்வேனியாவின் ஒரு மனோதத்துவ பேராசிரியர் சொல்கிறார், 'இதழ்கள் சந்திக்கும்போது மூளையில் ஏற்படும் ரசாயன மாற்றம் காதலன்/ காதலியருக்கு உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது - மனஅழுத்தத்தைக் குறைத்து மனதை அமைதிப்படுத்துகிறது' என்று. பல் மருத்துவர்கள் முத்தம் கொடுக்கும்போது எச்சில் ஊறுவதால் ஒரு நல்ல முத்தம் பற்கள் சொத்தையாவதைத் தடுக்கிறது என்று சொல்கிறார்கள். உடற்பயிற்சி நிபுணர்கள் நீண்ட முத்தம் உடல் எடையைக் குறைக்க உதவுகிறது எனக் கூறுகின்றனர். முத்தத்தின் போது சுரக்கும் அட்ரினலின் இருதயம் உடலிற்கு அதிகமான ரத்தத்தை பம்ப் செய்ய உதவுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இதனால் இருதயத்தில் அடைப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் குறைகின்றன. தாடை மற்றும் கன்னங்களிலுள்ள தசைகளின் அசைவினால் அவை தொய்வடைவதைத் தவிர்த்து நம்மை இளமையாக வைக்கவும் முத்தம் உதவுகிறது. அதனால்தானோ என்னவோ 2005ம் ஆண்டில் ஜேம்ஸ் பெல்ஷா என்பவரும் சோபியா செரினும் - (மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள்!) தொடர்ந்து 31 மணி நேரம் முப்பது நிமிஷம் முத்தம் கொடுத்து கின்னஸ் சாதனை படைத்திருக்கிறார்கள்.

இப்படி ஏராளமான நன்மைகள் உள்ள முத்தத்தை ஏன் ஏதோ தீண்டத் தகாததாக நினைக்க வேண்டும்- கலாசாரக் காவலராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் கர்நாடகாவின் முத்தலிக்கின் பெயரிலேயே முத்தம் இருக்கிறதே!.

(ஆதாரம்)- டைம்ஸ் ஆஃப் இந்தியா

10. தலைவலி கொடுக்கும் தாலிபான்கள்

நவம்பர் 26ல் மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலும் பின்பு பாகிஸ்தானின் லாஹூர் எல்லையில் நமது வாகா பாகிஸ்தான்-இந்தியா எல்லைக்கோட்டுக்கு 12 மைல் தொலைவில் ஒரு காவல்துறை பயிற்சிக் கல்லூரியில் நடந்த தீவிரவாதத் தாக்குதலும்உலகத்தையே உலுக்கின.

தாலிபான்களின் தாக்குதல் ஒன்றும் புதிதல்ல. ஆஃப்கானிஸ்தானில் கொடி கட்டிப் பறந்த (இன்றும் பறந்து கொண்டிருக்கும்!) மதத் தீவிரவாதிகள் பாகிஸ்தானிற்குள் புகுந்து, 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனுஷனையே கடிப்பது போல' இன்று இந்தியாவின் எல்லைக்கோடு வரை வந்துவிட்டார்கள். அடுத்ததாக அமெரிக்காவில் வாஷிங்டனைக் குறி வைத்திருப்பதாக வேறு பகிரங்க எச்சரிக்கை விடுகிறார்கள்.

தாலிபான்களை வளர்த்து கொம்பு சீவி விட்ட பெருமை பல மேல்நாடுகளுக்கும், பாகிஸ்தானுக்கும் உண்டு. இன்று வளர்த்த கடா மார்பில் பாயும் போதுதான் அவர்களுக்குப் புரிகிறது. பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சொல்கிறார். "இப்போதிருக்கும் நிலையில் ஒன்று தாலிபான்களிடம் நாட்டைக் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்; அல்லது தீவிரமாகப் போராடி அவர்களை அழிக்கவேண்டும்"

யார் இந்தத் தாலிபான்கள்?

1994ம் ஆண்டிலிருந்து உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்தத் தாலிபான்கள் யார்? எப்படி முளைத்தார்கள்?

பெர்சிய மொழியில் 'தாலிப்' என்றால் 'தேடுபவர்கள்' என்று பொருள். மதங்களைப் பற்றிப் படிக்கும் மாணவர்கள் இந்தப் பெயரால் அழைக்கப் படுகிறார்கள். தாலிபான் என்பது தாலிப் என்ற வார்த்தையின் பன்மை. ஒரு மாணவன் மவுல்வியாகப் பட்டம் பெறுவதற்குப் பதினான்கு வருடங்கள் படிக்க வேண்டும். இந்த பதினான்கு வருடப் படிப்பின்போது, ஏதாவது மதப்போர் என்றால் (ஜிஹாதி) அதற்கு முக்கியத்துவம் கொடுத்து படிப்பை விட்டு விடுவார்கள்.

ஆஃப்கானிஸ்தானில் தாலிபான்களின் பின்னணி இஸ்லாமிய மதம் ஆஃப்கானில் வேரூன்றிய காலம் (635 A.D) தொட்டுப் பழமையானது. அந்த ஆண்டுதான் இஸ்லாம் மதம் சார்ந்த படைவீரர்கள், அன்று ஆஃப்கானிஸ்தானை ஆண்டு வந்த குஷன் குடும்பத்தைச் சேர்ந்த இந்து மன்னனை வென்று காபூலைப் பிடித்தார்கள். 2000 ஆண்டுகளுக்கு மேலாக, ஆஃப்கானிஸ்தானும் இன்றைய பாகிஸ்தானும் ஒரே நாடாகத்தான் இருந்தன என்பதை இங்கே குறிப்பிட

வேண்டும். பிரிட்டிஷார் இந்தியாவில் புகுந்த பிறகே ஆஃப்கானிஸ்தான் தனிநாடாயிற்று.

தாலிபான்கள் தீவிர மதக்கொள்கைகளைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்வதில்லை. குடியரசு, சுதந்திரம் மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் போன்றவை இஸ்லாம் மதத்திற்கு எதிரானது என்று கருதுபவர்கள். ஆஃப்கானிஸ்தானில் வசிக்கும் பெரும்பான்மையானவர்கள் பஷ்டூன் (பதான்) இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆஃப்கானிஸ்தான் மட்டுமல்ல, பாகிஸ்தானிலும் பெரும் பகுதியில் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.

பத்து வருடங்களுக்கு மேலாக ஆஃப்கானிஸ்தானை கட்டுக்குள் வைத்திருந்த ரஷ்யப் படைகள் 1989ல் விலகிய பிறகு உள்நாட்டுச் சண்டையில் உருவானதுதான் தாலிபான் அமைப்பு. 1989ல் ரஷ்யர்கள் ஆஃப்கானிஸ்தானை விட்டு வெளியேறியபோது, அங்கு பஞ்சமும், வறுமையும் தலை விரித்தாடின.

15 லட்சம் பேர்கள் மடிந்துபோய் நாட்டைத் தலைமை ஏற்றுச் செல்வதற்கு யாரும் இல்லாத நிலையில், முஜாஹுதீன் ராணுவத் தலைவர்கள் உள்ளே புகுந்தார்கள். ஆஃப்கானைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் தங்கள் பெற்றோர், தாய் நாடு இவை பற்றி அறியாமல் பாகிஸ்தானில் மதரசா எனப்படும் மதப்பள்ளிகளில் பயின்றார்கள். அவர்களைப் பாகிஸ்தானும், சவுதி அரேபியாவும் மதத் தீவிரவாதிகளாகப் பயிற்றுவித்தனர். அவர்களைக் காஷ்மீரில் இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாதச் செயல்களைச் செய்ய பயன்படுத்தினார்கள். அந்த சிறுவர்கள் மூலம் ஆஃப்கானிஸ்தானையும் தன் பிடியில் கொண்டுவர பாகிஸ்தான் முயற்சி செய்தது. மதத் துவேஷமே தாய்ப்பாலாக ஊட்டப்பட்ட அவர்கள், 'இந்தியாவிற்கு எதிரான புனித சண்டை' என மூளைச் சலவை செய்யப்பட்டு எதற்கும் துணிந்தவர்களாக உருவாக்கப்பட்டனர்.

தாலிபான்கள் பரப்பி வரும் 'ஷரிய' என்று சொல்லப்படும் இஸ்லாமியக் கொள்கைகள் உண்மையான இஸ்லாமியக் கொள்கைகளிருந்து வேறுபட்டது; அவைகளுக்கு முற்றும் புறம்பானது. தங்கள் ஆளுமையை நிலைநாட்ட தாலிபான்கள் அவர்களாகக் கொண்டு வந்த சட்டங்கள் இவை!

தாலிபான்களின் முக்கிய நோக்கம், ஆஃப்கானிஸ்தானில் மக்கள் யாரும் புரட்சி செய்யாமல் அமைதியாக கீழ்ப்படிந்து வாழ்வது, ஷரிய சட்டத்தை அமலாக்குவது, முற்றிலும் சுதந்திரமான இஸ்லாமிய நாடாக ஆப்கானிஸ்தானை ஆக்குவது ஆகியவைதான். அவர்கள் தங்களை சமூகத்தைச் சீர்திருத்தும் அமைப்பாகவே காட்டிக் கொண்டார்கள். மதபோதகர் மொஹமத் அமரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

11. கொசுக்களும் பாடுமே டூயட்!

கொசுக்கள் நம்மைச் சுற்றி வந்து காதில் 'ஞொய்' என்று சத்தமிடும்போது நமக்கு எரிச்சலாக இருக்கும். ஆனால், கொசுக்களின் காதலன்/காதலிக்கோ அவை காதல் கவிதைகளாக இருக்கும். ஒருவகையான கொசுக்கள் தங்கள் ஒலி அலைவரிசைகளை சரியான முறையில் அமைத்துக் கொண்டு காதல் டூயட்கள் பாடுகின்றனவாம்! இந்த டூயட் பாடும் Aedes aegypti கொசு வகைகள் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கொசுக்கள்தான் மனித இனத்திற்கு டெங்கு காய்ச்சலையும், yellow feverஐயும் பரப்புகின்றன. இந்த டூயட் ஆராய்ச்சி இது போன்ற வியாதிகள் பரவுவதைத் தடுக்க உதவி செய்யும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இது பற்றி ஆராய்ச்சி செய்த நியூயார்க்கைச் சேர்ந்த ரொனால்ட் ஹாய் மற்றும் அவரது சகாக்கள் A.aegypti கொசுக்கள் தங்கள் இறக்கைகளை அடித்துக் கொள்ளும் ஒலியைப் பதிவு செய்தார்கள். கொசுக்கள் தங்கள் ரீங்காரத்தை இறக்கைகளை மாறுபட்ட வேகங்களில் அடிப்பதன் மூலம் ஏற்படுத்துகின்றன. ஆண் கொசுக்கள் ரீங்காரமிடும் அலைவரிசை (அடிப்படை அலைவரிசை எனக் கூறப்படுகிறது) 550லிருந்து 650 ஹெர்ட்ஸ் வரை மாறுபட்டது. பெண் கொசுக்களின் ரீங்காரம் 350-450 ஹெர்ட்ஸ்

பெண் கொசுக்களை ஆண் கொசுக்களின் அருகில் கொண்டு சென்றபோது பெண் கொசுக்களின் இறக்கைகளின் வேகம் சற்றே மாறுபட்டது. 70 சதவிகித கொசு ஜோடிகள் ஒன்றை ஒன்று நெருங்கும்போது தங்களது இறக்கைகள் அடிக்கும் வேகத்தை, அந்த இறக்கைகளிலிருந்து வரும் சத்தம் ஒருவகை இசையாக அமையும் வகையில் அமைத்துக் கொண்டன.

அடிப்படையில் கொசு ஒரு விநாடிக்கு குறிப்பிட்ட முறை இறக்கைகளை அடித்துக் கொள்ளும் போது ஒரு ஒலியை எழும்புகிறது. அந்த பிரதானமான ஒலியோடு ஒருவித இசையும் ஏற்படுகிறது. (பியானோ வாசிப்பவர் பியானோவில் ஒரு கீயை இசைக்கும்போதோ அல்லது கிதார் வாசிப்பவர் கிதார் நரம்பை இழுக்கும்போதோ ஏற்படும் ஒலியைப் போல.). இது டூயட் பாடி இணைவதற்குத் தோதான அதிர்வுள்ள ஒலியாக அமைகிறது.

பெண் கொசுக்கள் தங்கள் ஒலியை எழுப்புவது, ஆண் கொசுக்களிடம் "என்னுடைய இந்த இசைக்கு சமமாக உன்னால் பாட முடியுமா?' என்று கேட்பது போலிருக்கும். ஆண் கொசுக்கள் பெண்களோடு போட்டி போடுவதில் மந்தமாக இருந்தாலோ, அவைகள் எதிர்பார்க்கும் அளவுக்கு ஒலி எழுப்ப முடியாவிட்டாலோ இந்தக் கொசுவை விட்டு விட்டுத் 'தகுதியான' வேறு கொசுவைத் தேடிச் சென்று விடும்!

இந்த ஆராய்ச்சி, கொசுக்களால் ஏற்படும் வியாதிகளை தவிர்க்கப் பயன்படும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஒரு A. aegypti பெண் கொசு ஒரு முறை உறவு கொண்டால், பிறகு ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு மீண்டும் உடலுறவு கொள்ளாது. அந்தக் கொசுக்களின் ஆயுட்காலமே சில நாட்கள் அல்லது வாரங்கள்தான். அதனால் ஆண்மையில்லாத கொசுக்களை வளர்த்து அவைகளைப் பரப்புவதன் மூலம் கொசுக்களின் இனப் பெருக்கத்தைத் தடை செய்யலாம் என ஒரு ஆராய்ச்சி தெரிவித்தது. ஆனால் ஆண் கொசுக்களின் காதல் இசையைக் கொண்டே பெண் கொசுக்களால் அவை ஆண்மை உள்ளவைகளா இல்லையா என்பதை அறிந்து கொள்ள முடியும் என்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

(ஆதாரம் : லைவ்சயின்ஸ்.காம்)

12. நிலவுக்குப் பின்னால்!

சந்திராயன்-1 குறித்து இந்திய விஞ்ஞானிகளின் சாதனையை உலகமே வியந்து பாராட்டும் இந்த வேளையில், சந்திராயன் நிலவைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கும் இந்த நேரத்தில் நாமும் நிலவு பற்றிய சில சுவையான தகவல்களைப் பார்ப்போமே!

தேன் நிலவு என்ற வார்த்தை எப்படி வந்தது? பாபிலோனியர்கள் மீட்(mead) என்ற தேனின் சுவையைக் கொண்ட திராட்சை ரசத்தை (wine) திருமண விழாவிற்கான ஒரு பானமாகக் கருதினார்கள். பெண் வீட்டார்கள் இந்த மதுவை மாப்பிள்ளை வீட்டாருக்குத் திருமணம் முடிந்தபின் ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து அளித்துக் கொண்டேயிருக்க வேண்டுமாம்!

'once in a blue moon' என்பது நாம் அடிக்கடி பயன்படுத்தும் சொற்றொடர். இது எப்படி வந்தது என்று தெரியுமா? இது ஒரே மாதத்தில் இரண்டு பவுர்ணமிகள் வருவதைக் குறிக்கும். இது அதிசயமாகத்தான் நிகழும். 1999 ஜனவரியிலும் மார்ச் மாதத்திலும் இரண்டு பவுர்ணமிகள் வந்தன. அதற்குப் பிறகு 2001 இறுதிவரை அப்படி இரண்டு பவுர்ணமிகள் ஒரே மாதத்தில் வரவில்லை. (நீல நிலவு என்றுமே நீல நிறத்தில் இருந்ததில்லை!)

நிலவில் கண்ணாடிகள் இருக்கின்றன. இந்தக் கண்ணாடிகளை நிலவுக்குச் சென்ற விண்வெளி வீரர்கள் லேசர் கதிர்களை நிலவிலிருந்து வீசுவதற்காகப் பொருத்தினார்கள். இதன் மூலம் நிலவுக்கு இங்கிருந்து உள்ள தூரத்தை அறிய முடியுமாம்!

பூமியின் மையப்பகுதி 7000 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் உள்ள இரும்பு மற்றும் நிக்கலினால் ஆன ஒரு உருண்டை. இது நிலவைப் போல 80 சதவிகித அளவு இருக்கும்.

நிலவுக்குச் சென்ற விண்வெளி வீரர் Buzz Aldinesன் அம்மாவின் பெயர் Moon!

நிலவுக்கு அனுப்பப்பட்ட அப்போல்லோ-11 விண்கலம் நிலவில் இறங்கியபோது அந்த விண்கலத்தில் இன்னும் 11 விநாடிகளுக்கே தேவையான எரிபொருள் மிச்சமிருந்தது.

விண்வெளியில் உள்ள நிலவுகளில் ஜூபிடரின் நிலவான Ganymedeதான் மிகப் பெரியது. இதன் அளவு மெர்குரி மற்றும் ப்ளூட்டோ கிரகங்களை விடப் பெரியது.

நிலவின் ஒளி பூமியை வந்தடைவதற்கு 1.25 விநாடிகள் பிடிக்கின்றன.

சூரிய வெளியிலுள்ள எல்லா நிலவுகளுக்கும் கிரேக்க மற்றும் ரோம தேசங்களின் புராணங்களை அடிப்படையாக வைத்துப் பெயரிடப்பட்டன. யுரேனஸ் கிரகத்தின் நிலவுகள் மட்டும் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் வந்த பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

பவுர்ணமி நிலவின் பிரகாசம் அரை நிலவின் ஒளியை விட ஒன்பது பங்கு அதிகமானது.

27 சதவிகித அமெரிக்கர்கள் மனிதர்கள் நிலவில் இறங்கினார்கள் என்பதை நம்பவில்லை!

நிலவு உங்கள் தலைக்கு நேராக இருக்கும்போது உங்கள் எடை சற்று குறைவாக இருக்கும்.

நிலவினுடைய எடை 81 பில்லியன் டன்கள்.

13. ம்யூனிக் படுகொலை

தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக்ஸ் போட்டிகளை பிரம்மாண்டமான முறையில் நிகழ்த்தி சீனா உலகத்தையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. இதுபோல ஒலிம்பிக்ஸ் இனியும் நிகழ்த்த முடியுமா என்ற அளவுக்கு அனைவரையும் வியக்கச் செய்திருக்கிறது.

இதேபோல் மறக்க முடியாத ஒலிம்பிக்ஸ் போட்டிகள் (மேற்கு) ஜெர்மனியில் உள்ள ‘ம்யூனிக்’ நகரிலும் 1972ம் ஆண்டு நடந்தன. ஆனால் இந்த ஒலிம்பிக்ஸ் மறக்க முடியாமல் போனது வேறு காரணங்களுக்காக. ஒலிம்பிக்ஸ் வரலாற்றிலேயே பெரிய களங்கத்தை ஏற்படுத்தியது இங்கு நடந்த துயர நிகழ்ச்சி. மாறாத வடுவை ஏற்படுத்திய அந்த ஒலிம்பிக்ஸ் நிகழ்ச்சியை சற்றே பின்னோக்கிச் சென்று பார்ப்போம்.

இரண்டாவது உலகப் போர் முடிந்து 27 ஆண்டுகள்தான் சென்றிருந்தன. இஸ்ரேலியர்கள் மேல் நாஜிகள் நடத்திய கொடூரத் தாக்குதல்களின் துயர் இன்னும் தீர்ந்திராத காலம். இந்த நிலையில் ம்யூனிக்கில் நடந்த ஒலிம்பிக்சில் 27 பேர் கொண்ட இஸ்ரேலிய அணி கலந்து கொண்டதே ஒரு குறிப்பிடத்தக்க விஷயம். "எங்களை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது; மறுபடியும் புதிய சக்தியாக உருவாகுவோம்" என்று இஸ்ரேலியர்கள் ஜெர்மானியர்களுக்கு பறைசாற்றுவதாகவே இருந்தது அவர்கள் பங்கு கொண்டது.

ஆனால் அந்த ஒலிம்பிக் போட்டிகளின்போது யாசர் அராஃபத்தின் ஆதரவான ‘கறுப்பு செப்டம்பர்’ என்ற தீவிரவாதக் கும்பல் இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களையும், பயிற்சியாளர்களையும் கடத்தி பதினோரு பேரைக் கொலை செய்தது ஒலிம்பிக் வரலாற்றில் ஒரு துயர நிகழ்ச்சி. அவர்களை விடுவிக்கும் முயற்சியின்போது ஒரு ஜெர்மானிய போலிஸ் அதிகாரியும், கடத்திய எட்டு பேர்களில் ஐவரும் கொல்லப்பட்டனர்.

எப்படி நடந்தது இந்தக் கடத்தல்?

ஒலிம்பிக்ஸ் போட்டிகள் ஆரம்பித்து இரண்டு வாரங்கள் முடிவடைந்திருந்த வேளை. மேற்கு ஜெர்மனி தனது நாட்டின்மேல் இரண்டாவது உலகப்போர்

ஏற்படுத்தியிருந்த அந்தக் கொடூர நினைவுகளை மறக்கச் செய்வதற்காக, ஒரு நல்ல சூழ்நிலையை ஒலிம்பிக் கிராமத்தில் ஏற்படுத்த முயற்சி செய்தது. குறிப்பாக, 1936ல் ஹிட்லரின் அராஜகத்தின்போது நடந்த ஒலிம்பிக்சின் நினைவுகளை அகற்ற. ஆனால் பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியான வகையில் செய்யப்படவில்லை. வேண்டுமென்றேதான் ஜெர்மனி இப்படிச் செய்தது என்று சொல்வோரும் உண்டு. ஒலிம்பிக்ஸ் கிராமத்துக்குள் நுழைபவர்கள் சரியாகக் கண்காணிக்கப்படவில்லை. பல வீரர்கள் தங்கள் அடையாள அட்டையைக் காண்பிக்காமலே சுலபமாக உள்ளேயும் வெளியேயும் சென்றுவர முடிந்தது.

செப்டம்பர் 4ம் தேதி இரவு இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் பொழுதை மிகவும் சந்தோஷமாக ஆட்டம் பாட்டத்தில் கழித்துவிட்டு தங்கள் தங்குமிடத்திற்குத் திரும்பினார்கள்.

செப்டம்பர் 5ம் தேதி அதிகாலை நாலரை மணி அளவில் விளையாட்டு வீரர்களின் உடையை அணிந்த எட்டு பயங்கரவாதிகள் ஏகே 47 துப்பாக்கிகள், பிஸ்டல்கள் மற்றும் கைவெடிகுண்டுகள் சகிதமாக ஒலிம்பிக்ஸ் கிராமத்தைச் சுற்றியிருந்த இரண்டு மீட்டர் உயர வேலியைத் தாண்டி கிராமத்துள் புகுந்தார்கள். உள்ளே நுழைந்ததும் திருட்டு சாவிகள் கொண்டு இஸ்ரேலியர்கள் தங்கியிருந்த அறைகளைத் திறந்து நுழைந்தனர்.

யூசுஃப் கட்ஃப்ரூன்ட் என்ற குத்துச் சண்டைப் பயிற்சியாளர், சத்தம் கேட்டு பார்க்க எழுந்தபோது, கதவு மெதுவாகத் திறக்கப்படுவதையும், முகமூடி அணிந்தவர்கள் சிலர் துப்பாக்கிகளுடன் உள்ளே நுழைய முயற்சிப்பதையும் பார்த்தார். உடனே கூச்சல் போட்டு உள்ளே தூங்கிக் கொண்டிருந்த மற்ற விளையாட்டு வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். தனது 300 பவுண்ட் எடையினால் கதவை அழுந்தத் தள்ளி முகமூடி மனிதர்கள் நுழைவதைத் தடுக்க முயற்சி செய்தார்.

கிடைத்த இடைவெளியில் அவரது அறையில் வசித்த பளு தூக்கும் போட்டிக்கான பயிற்சியாளர் ஜன்னலை உடைத்துக் கொண்டு அதன் வழியாக தப்பினார். இன்னொரு பயிற்சியாளர் வந்த தீவிரவாதிகளைத் தடுக்க முயல, அவரது கன்னத்தில் சுட்டு அவரைப் பலவந்தமாக மற்ற இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள் தங்கியிருக்கும் இடத்தைக் காண்பிக்கச் செய்தார்கள்.

அறை எண் இரண்டைக் கடந்தபோது அந்தப் பயிற்சியாளர், பயங்கரவாதிகளிடம் இரண்டாவது அறையில் தங்கியிருப்பது இஸ்ரேலியர்கள் அல்ல என்று சொல்லிவிட்டு மூன்றாவது எண் அறையை அடைந்தார். அங்கு அவர்கள் ஆறு குத்துச் சண்டை வீரர்களை பிணையாட்களாகப் பிடித்தார்கள். துப்பாக்கியால் சுடப்பட்டிருந்த பயிற்சியாளர் மீண்டும் பயங்கரவாதிகளை முடிந்தவரையில்

தாக்கினார். அதில் ஒரு பயங்கரவாதி மூர்ச்சையாக, இன்னொருவனுக்குக் கத்திக் குத்து. இறுதியில் வீரமரணம் அடைந்தார். இதற்குள் பிடிபட்டிருந்த பிணையாளர்களில் ஒருவர் தப்பினார். இன்னொரு வீரரும் சண்டையில் உயிர் இழந்தார்.

இறுதியாக பயங்கரவாதிகளின் கையில் உயிருடன் பிடிபட்டது ஒன்பது இஸ்ரேலிய விளையாட்டு வீரர்கள். அதில் மிகுந்த பலசாலியாகத் தோன்றிய ஒரு வீரரை ஒரு நாற்காலியில் அழுத்தமாகக் கட்டிப்போட்டுவிட்டு மற்ற எட்டு பேரையும் இரண்டு படுக்கைகளில் கை கால்களைப் பிணைத்திருந்தனர். துப்பாக்கி குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டு இறந்து போன ரொமனோ என்ற விளையாட்டு வீரரின் உடலை ஒரு எச்சரிக்கையாக பிணையாளர்களின் காலடியில் போட்டிருந்தனர்.

இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கடத்தியவர்கள் பாலஸ்தீனிய தீவிரவாதிகள் எனப் பின்னர் அறிய வந்தது. அவர்கள் இஸ்ரேலில் சிறையில் அடைபட்டிருந்த 234 பாலஸ்தீனியர்கள் மற்றும் ஜெர்மனியின் சிகப்புப் படையைச் சேர்ந்த இருவரையும் உடனே விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். தங்களது கோரிக்கை நிறைவேறுவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று எச்சரிப்பதுபோல கொல்லப்பட்ட பரக் என்பவரின் உடலை அறைக்கு வெளியே வீசி எறிந்தனர். ஆனால் இஸ்ரேல் இந்த கோரிக்கைகளை ஏற்க முற்றிலும் மறுத்தது.

ஜெர்மானிய அரசுக்கு பிடிபட்டிருப்பது இஸ்ரேலிய வீரர்கள் என்பதால் ஒரு தர்மசங்கடமான நிலை. ஜெர்மானிய அரசு கடத்தல்காரர்களிடம், ”நீங்கள் எவ்வளவு பணம் கேட்டாலும் தருகிறோம் அல்லது எங்களது உயர் பதவியிலுள்ள அதிகாரிகளை பிணைக் கைதிகளாக வைத்துக் கொண்டு இஸ்ரேலிய வீரர்களை விட்டுவிடுங்கள்” என்று கேட்டது.

ஆனால் கடத்தியவர்கள் அவர்களது வேண்டுகோளை ஏற்க மறுத்துவிட்டனர். ”பணமோ, அல்லது எங்கள் உயிரோ எங்களுக்குப் பெரிதல்ல” என்று கூறிவிட்டார்கள். பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்த அரசு ஐந்து முறை கடத்தல்காரர்கள் விதித்திருந்த கெடுவை நீட்டிக்கச் செய்தது.

கடத்தல்காரர்கள் பிடியிலிருந்து இஸ்ரேலிய விளையாட்டுக்காரர்களை விடுவிக்கத் தங்கள் ராணுவ உதவியை அனுப்புவதாகக் கூறிய இஸ்ரேலிய அரசின் கோரிக்கையை ஜெர்மன் அரசு பிடிவாதமாக நிராகரித்தது. ஜெர்மன் அரசின் உள்துறை அமைச்சகம் போலிஸ் உதவியோடு கடத்தல்காரர்களைத் தாக்கி விளையாட்டு வீரர்களை விடுவிக்கப் போட்டிருந்த திட்டம் - சரியான திட்டமிடாததாலும், காவல்துறையின் குழறுபடியாலும் படுதோல்வி அடைந்தது.

பலமுறை பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு கடத்தல்காரர்கள் தங்களை விமானம் மூலம் கெய்ரோவுக்கு பத்திரமாகக் கொண்டு செல்லவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு ஒப்புக்கொள்வதுபோல் நடித்து அதிரடிப்படை மூலம் பயங்கரவாதிகளிடமிருந்து வீரர்களை விடுவிக்க வேண்டும் என ஜெர்மன் அரசு திட்டமிட்டது.

தீவிரவாதிகளையும் பிணைக்கப்பட்ட வீரர்களையும் இரண்டு ஹெலிகாப்டர் மூலம் அருகிலிருந்த NATO விமானதளத்துக்கு இட்டுச் சென்றது. ஜெர்மன் போலிஸ் படையினர் கடத்தல்காரர்கள் அறியாமல் மூன்றாவது ஹெலிகாப்டரில் பின் தொடர்ந்தனர். விமானதளத்தை அடைந்தவுடன் கடத்தல்காரர்களை அதிரடியாகத் தாக்கி வீரர்களை விடுவிப்பதுதான் அவர்கள் திட்டம்.

ஆனால், ஜெர்மன் அதிகாரிகள் விமான தளத்தில் ஒளிந்திருந்து தாக்குவதற்காக ஏற்பாடு செய்த ஐந்து பேர்களும் சரியான தேர்ச்சி பெற்றவர்களாக இல்லை. ஜெர்மன் போலிஸ் துறை போட்ட திட்டப்படி, தீவிரவாதிகளையும் பிணைக்கைதிகளையும் அழைத்துச் செல்லவிருந்த விமானத்தில் அதிரடிப்படையினர் இருப்பார்கள். அவர்கள் முதலில் விமானத்தை சோதிப்பதற்காக வரும் இரு கடத்தல்காரர்களைத் தாக்குவார்கள். வெளியே உள்ள கடத்தல்காரர்களை மறைந்திருக்கும் ஐந்து துப்பாக்கி வீரர்களும் கொன்று வீரர்களை விடுவிக்கவேண்டும்.

ஆனால் ஆரம்பம் முதலே எல்லாம் கோணல்தான். விமானத்தில் இருக்கவேண்டிய அதிரடிப்படையினர் உயர் அதிகாரிகளிடம் சொல்லாமல் கொள்ளாமல் அவர்களாகவே திட்டத்தைக் கைவிட்டு விமானத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். இதைத் தவிர கடத்தல்காரர்கள் எண்ணிக்கையைத் தவறாகக் கணக்கிட்டு விட்டார்கள். பின்னர் நேர்ந்த குழப்பத்திலும் சரியாகத் திட்டமிடாத ஜெர்மன் அரசின் கையாலாகாத நிலையாலும் மூன்று வீரர்கள் துப்பாக்கிகளால் நேருக்கு நேர் கொல்லப்பட, அவர்கள் பிணைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் எறிகுண்டினால் தாக்கப்பட்டு அனைத்து வீரர்களும் உயிரிழந்தார்கள்.

இந்த சோக நாடகத்தின் முடிவில் இஸ்ரேலின் விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் பதினோரு பேர், ஒரு ஜெர்மன் போலிஸ் அதிகாரி, மற்றும் ஐந்து கடத்தல்காரர்கள் கொல்லப்பட்டார்கள். மீதமிருந்த மூன்று பயங்கரவாதிகளும் பிடிபட்டார்கள்.

பின்னர் ஜெர்மன் நாட்டின் லுஃப்தான்சா விமானம் கடத்தப்பட்டபோது அதனை கடத்தல்காரர்களிடமிருந்து மீட்க கைது செய்யப்பட்ட மூன்று கறுப்பு செப்டம்பர் பயங்கரவாதிகளும் விடுவிக்கப்பட்டனர். இது ஜெர்மன் அரசால் வேண்டுமென்றே திட்டமிட்டு செய்யப்பட்ட நாடகம் என்று நோக்கர்கள் கூறுகிறார்கள்.

ஒலிம்பிக் போட்டிகளின் வரலாற்றிலேயே ம்யூனிக்படுகொலை மாறாத ஒரு துயரத்தை ஏற்படுத்திவிட்டது. முதல்முறையாக அந்த செப்டம்பர் 5ம்தேதி ஒருநாள் ஒலிம்பிக் பந்தயங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. 80,000 பார்வையாளர்களும், 3000 விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்ட நினைவுக் கூட்டம் ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தில் கூட இறந்த வீரர்களைப் பற்றியும் துயர சம்பவம் பற்றியும் அதிகம் பேசப்படவில்லை. பயங்கரவாதிகள் ஆதிக்கம் அதிகரித்துள்ள இன்றைய சூழ்நிலையில் விளையாட்டு வீரர்களையும், பார்வையாளர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அதிகரித்துக்கொண்டே வருகிறது. இன்னுமொரு ம்யூனிக் படுகொலை போன்ற சம்பவம் இனி நிகழக்கூடாது எனப் பிரார்த்திப்போம்.

14. இதயம் வலிக்கின்றதே!

நமக்கு உடலில் காயம்பட்டால் அல்லது நோய் வாய்ப்பட்டால் ஏற்படும் வலியை உணர முடிவதுபோல் மனதில் தோன்றும் வலிகளையும் உண்மையிலேயே உணர முடியுமா?

" முடியும் " என்று சொல்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். மூளையை நுண்ணியமுறையில் ஆராய்ந்து பார்க்கும்போது (Scan செய்து பார்த்தபோது), உடல் வலி மூளையில் பதிவாவதைப்போல மனவலியும் பதிவாகிறது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்!

இவர்களின் ஆராய்ச்சிக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் சொல்லியிருக்கிறார் மனதில் ஏற்படும் காயங்களைப்பற்றி- தீயினால் சுட்ட புண் கூட விரைவில் ஆறிவிடலாம். ஆனால் நாவினால் சுடப்பட்ட வடு மனதில் எப்போதும் வலியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும், ஆறாது என்று.

இன்னொரு குறளில் காதல் வலியையும் சொல்கிறார்:

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடின் ஆற்றுமோ தீ.

“தொட்டவரைச் சுடும் தன்மையே நெருப்பிற்கு உண்டு. ஆனால் தொலைவில் இருப்பாரையும் சுடும் காதல் நோயின் கொடுமை அதற்கு இல்லையே!” என்று வள்ளுவர் கூறுகிறார்.

உடலில் பெரிய காயங்கள் அல்லது முறிவுகள் ஏற்படும்போது எப்படி பல நாட்களுக்கு வலி நீடிக்கிறதோ, அதேபோல் நம் வாழ்க்கையில் நிகழும் மிகப்பெரிய சோக நிகழ்ச்சிகளும் நீண்ட நாட்களுக்கு மன வலியைக் கொடுக்கின்றன என்று சொல்கிறது ஆராய்ச்சி.

மனதில் ஏற்படும் சோகங்களுக்குப் பல காரணங்கள் இருக்கலாம்; சொந்தங்கள் விலகிப்போகலாம், காரியாலயத்தில் பிரச்சினைகள் ஏற்படலாம்; வார்த்தைகளால் காயப்படுத்தலாம்; நமக்கு மிகவும் நெருக்கமானவர்கள் இறந்து போகலாம்; நம் கண்ணெதிரே ஒரு விபத்தைக் காண நேரலாம் - இப்படி எத்தனை எத்தனையோ காரணங்கள் மனதில் காயங்களை ஏற்படுத்துகின்றன. இவற்றுள், நெருங்கியவர்களின் மறைவுதான் மனதில் மிகப்பெரிய காயத்தை ஏற்படுத்துகின்றது.

சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளால் தன் உறவினர், குழந்தைகள் அழிவதை நேரில் கண்டவர்களுக்கு ஏற்படும் வலி வாழ்நாள் முழுவதும் நீடிக்கிறது.

ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த மார்க் ஸ்டீபன் ஒருமுறை வயலில் டிராக்டரில் சென்று கொண்டிருந்தபோது தவறுதலாக தன் பெண் குழந்தையின்மேல் டிராக்டர் மோத, அந்தக் குழந்தை இறந்துவிட்டது. அளவிட முடியாத மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட அவர், தனது மகளின் மறைவு பற்றிய நினைவே தனக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்துவிடுமோ என்ற நிலையில், மன அழுத்தங்களை ஆராய்ச்சி செய்யும் பேராசிரியர் டேவிட் அலெக்சாண்டர் என்பவரை அணுகினார்.

அலெக்சாண்டர் ஏற்கனவே, எண்ணைக் கிணற்று விபத்தில் சிக்கியவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள், பாகிஸ்தான் பூகம்பம் மற்றும் ஈராக் சண்டையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியாக உதவி செய்தவர். இவர்தான் மார்க் ஸ்டீபனையும் அவரது மன அழுத்ததிலிருந்து வெளிவர உதவி செய்தார்.

அலெக்சாண்டர் சொல்கிறார். "மனதில் ஏற்படும் வலிக்கும் உடலில் ஏற்படும் காயங்களுக்கும் தொடர்பிருக்கிறது. மனதளவில்பாதிக்கப்பட்டவர்களைக் கேட்டால் அவர்கள் தங்கள் துன்பத்தை உடல் வலியோடு உருவகப்படுத்தித்தான் சொல்வார்கள். இதயம் சுக்குநூறாகிறதே, மண்டையே வெடித்துவிடும் போலிருக்கிறதே என்பதுபோல."

உடல் வலியைப்போல மன வலியை ஆராய்ச்சி செய்பவர்கள் மிகக் குறைவே. நவோமி ஈசன் பர்ஜர் என்பவர் மன அழுத்தம் ஏற்படும்போது மூளையின் எந்த பாகத்தில் பதிவாகிறது என்று ஆராய்ச்சி செய்தார். இதற்காக அவர் ஒரு தனி கணினி விளையாட்டைப் பயன்படுத்தினார். இந்த விளையாட்டில் கலந்துகொள்பவர்கள் வேண்டுமென்றே தனிமைப்படுத்தப்பட்டார்கள். அப்போது செய்யப்பட்ட மூளை 'ஸ்கேனிங்' மூலம், சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் மனவலியும் உடல் வலிகள் போல மூளையின் அதே பாகத்தில் பதிவாவதைக் கண்டுபிடித்தார்.

ஏன் உடல் வலிகளுக்கும், மன வலிகளுக்கும் இந்த ஒற்றுமை? திரு. சுந்தர் என்பவர் தன் வலைப்பதிவில் சொல்கிறார். "உடல், உயிர், அறிவு மற்றும் மனது - இந்நான்கும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன. உடலில் வலி என்றால் எப்படி சரியாக நமது கடமைகளை செய்ய முடியாதோ, அதுபோல் மனதில் வலி என்றாலும் அறிவில் குழப்பம் என்றாலும், உயிர் இல்லை என்றாலும் நமது

பணிகளை சரியாகச் செய்ய முடியாது. ஆகவே ஒவ்வொன்றையும் தனியாகப் பிரித்துப் பார்ப்பது அரிது"

சில சமயங்களில், நெருங்கியவர்களின் மரணம் ஏற்படுத்தும் துன்பத்தைத் தாங்க முடியாமல், சில காலங்களிலேயே மரணமடைபவர்களும் உண்டு.

காலம் எல்லாத் துன்பங்களையும் மறக்கச் செய்யும் என்று சொல்கிறார்கள். ஆனால் பலர் தமக்கு இழைக்கப்பட்ட தீங்குகளை - வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை மனதிலேயே வைத்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் அவதிப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் உடல் வலிகளையும் அதிகமாக உணர்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

உடல் வலிகளுக்கு மருத்துவ சிகிச்சை செய்வது போல, மனதில் ஏற்படும் அழுத்தங்களுக்கும், கொந்தளிப்புகளுக்கும், காயங்களுக்கும் நாம் தகுந்த முறையில் ஆலோசனை பெற்று மனஅழுத்தங்களிலிருந்து வெளிவர முயற்சி செய்யவில்லையென்றால், அதுவே நம் எதிர்காலத்தை சூன்யமாக்கிவிடும்.

உடல் நலத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் நாம் தருகிறோமோ அந்த அளவு மனவளத்தையும் சீராக வைத்திருப்பது அவசியம். நண்பர்களோடும், உறவினர்களோடும் மனம் விட்டுப் பழகுங்கள். துயரங்களையும் சந்தோஷங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். கோபம், பழிவாங்குதல் போன்ற தீய உணர்ச்சிகளை விட்டொழியுங்கள்! வாழ்வே சொர்க்கமாகும்!

(ஆதாரம்:Vivienne Parry)

15. ஒரு கப்பலின் கதை

ஸ்பானியர்களின் காலனி ஆதிக்கம்

கி.பி. 1500 - ஸ்பானிய மன்னர்களும், மத குருமார்களும் தங்கள் சாம்ராஜ்யத்தை கொலம்பஸ் கண்டுபிடித்த அமெரிக்கத் தீவுகளில் விரிவாக்கிக் கொண்டிருந்த காலம்.

மெக்சிகோ, லிமா பொடோசி என்று விரிவடைந்தது ஸ்பானியர்களின் ஆதிக்கம். இந்த இடங்களின் ஸ்பானிய மக்கள் தொகை அவர்களது சொந்த நாடான ஸ்பெயினைவிட அதிகமாக இருந்தது. இன்னும் ஐம்பது வருடங்களில் வட அமெரிக்காவிலுள்ள பாஸ்டன், ஃபிலடெல்பியா மற்றும் நியூயார்க்கும் அவர்கள் கை வசம் வர இருந்த கால கட்டம் அது.

புது இடங்களில் வசித்த காலனிவாசிகள் தேயிலை, புகையிலை ஆகியவற்றைப் பயிர் செய்து தங்களது சொந்த நாடான ஸ்பெயினுக்கு ஏற்றுமதி செய்தார்கள். இவைகளையெல்லாம் விட இந்த இடங்களில் கிடைத்த இயற்கைச் சுரங்கங்களான தங்கமும், வெள்ளியும் ஸ்பானியர்களின் பொருளாதாரத்தை எங்கோ கொண்டுபோய் நிறுத்தின!

ஸ்பானியரின் கப்பல் படை

புதிதாக ஆக்கிரமித்த அமெரிக்கக் கண்டத்துடன் வியாபாரம் 1561ம் ஆண்டிலிருந்து 1748வரை மும்முரமாக நடந்தது. ஒவ்வொரு வருடமும் இரண்டு கப்பல் படைகள் இந்தப் புதிய உலகத்திற்கு, அங்குள்ள காலனிவாசிகளுக்குத் தேவையான பொருட்களைக் கொண்டு வரும். அந்தக் காலனிகளில் கிடைக்கும் அபரிமிதமான வெள்ளி, தங்கம் மற்றும் விவசாயப் விளைபொருட்களை திரும்ப அள்ளிச் செல்லும். இரண்டு கப்பல் படைகளும் வேறு திசைகளில் சென்று ஹவானாவில் ஒன்று சேர்ந்து ஸ்பெயினை அடையும்.

இந்த விலை மதிப்பில்லாத பொக்கிஷங்களைக் கொண்டுவரும் கப்பல்களுக்கு வழியில் ஏற்படும் இன்னல்கள் பல. ஒன்று பருவ நிலை; இரண்டாவது கடற்கொள்ளைக்காரர்களின் தொல்லை. ஜுலை மாதங்களில் புயல் காற்று அதிகமாக இருக்கும் என்பதால் கப்பல்கள் ஜூலை மாதத்திற்கு முன்னமேயே திரும்ப ஸ்பெயினைச் சென்று சேரும் வகையில் ஏற்பாடு செய்வார்கள்.

கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பிக்க ஆயுதங்களுடன் ஒரு பலமான படையே கப்பலுடன் செல்லும். முன்னால் பாதுகாப்பிற்காகச் செல்லும் கப்பலுக்கு 'கபிடானா' என்றும், பின்னால் தொடரும் கப்பலுக்கு 'அமர்நாத்' என்றும் பெயர்.

புதிதாகக் கட்டப்பட்ட 110 அடி நீளமுள்ள 'Nuestra Senora de Atocha' என்ற கப்பல்தான் டியாரா ஃபிர்ம் கப்பல் கூட்டத்திற்குப் பின்னால் தொடரும் 'அமர்நாத்'.

வரலாற்றுப் புகழ்பெற்ற பயணம் ஆரம்பம்

இந்தக் கப்பல் படை 1622ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம்தேதி புதிய உலகத்திலிருந்து தங்கம், வெள்ளி, வைரம் மற்றும் முத்து பொக்கிஷங்களைக் கொண்டு வர ஸ்பெயினிலிருந்து புறப்பட்டது. சிறிது நாட்கள் டொமினிகா தீவில் நின்ற பிறகு டியாரா கப்பல் படையும் அடோச்சாவும் மே மாதம் 24ம்தேதி கொலம்பியாவின் துறைமுகமான போர்ட் பெல்லோவைச் சென்றடைந்தன.

எல்லாப் பொக்கிஷங்களையும் ஏற்றிய பிறகு ஜூலை 22ம்தேதி ஹவானாவை நோக்கிப் பயணித்தன, கார்டிகானா எனும் இடத்தின் வழியாக. இங்கு, மேலும் பொக்கிஷங்கள் தங்க, வெள்ளிப் பாளங்களாக அடோச்சா கப்பலில் ஏற்றப்பட்டன. அங்குதான் வெராக்ரூசிலிருந்து வரும் கப்பற்படையுடன் டியாரா சந்திக்க வேண்டும்.

ஹவானாவை வந்தடைந்த போது, அது ஆகஸ்ட் மாதத்தின் இறுதி. கடல் கொந்தளிப்பும் புயலும் அதிகமாக வீசும் பருவம். பாதுகாப்புப் படையான அடோச்சாவில் 82 காலாட்படை வீரர்கள் கடற்கொள்ளைக்காரர்களிடமிருந்து பொக்கிஷங்களைப் பாதுகாக்க உடனிருந்தார்கள். அதனால்தான் கப்பற்படையின் மிக விலை உயர்ந்த பொக்கிஷங்கள் பாதுகாப்பு கருதி அடோச்சா கப்பலில் ஏற்றப்படும். ஆனால் பருவ மற்றங்களை, கடும் புயல் போன்ற நிகழ்வுகளைத் தாங்கக்கூடிய சக்தி அடோச்சாவிற்கு இல்லை.

இயற்கையின் சதி

செப்டம்பர் 4ம் தேதி பருவநிலை மிகவும் நன்றாக இருந்தது. தெளிவான வானம். அன்று கப்பல்களை ஸ்பெயினுக்குத் திரும்பக் கொண்டு செல்லத் தீர்மானிக்கப்பட்டது. மொத்தம் இருபத்தியெட்டு கப்பல்கள் ஒரே நேர்கோட்டில் தங்கள் ஸ்பெயின் நோக்கிய பயணத்தைத் துவக்கின. பொக்கிஷங்களால் நிறைந்திருந்த அடோச்சா, கப்பல் கூட்டத்தின் பின்னணியில் சென்று கொண்டிருந்தது.

மாலை நேரத்தில் வடகிழக்கிலிருந்து காற்று வீசத் துவங்கி இரவு செல்லச் செல்ல அதிகரித்தது. அடுத்த நாள் காலையில் ராட்சத அலைகள் அடிக்கத் துவங்க, கப்பல்களில் அனைவரும் கீழ்ப்பாகத்தில் பதுங்கிக் கொண்டார்கள், இறைவனை வேண்டியவாறே! அடுத்த நாளில் காற்று தெற்கு திசைக்கு மாறி பல கப்பல்களை பாதுகாப்பான மெக்சிகோ கரையில் கொண்டு சேர்த்தன.

அடோச்சா, சாந்தா மர்கரிடா உட்பட ஐந்து கப்பல்கள் மட்டும் புயலின் வேகத்தைத் தாங்க முடியாமல் தத்தளித்தன. அடோச்சா, பெரிய அலைகளில் சிக்குண்டு பவளப் பாறை ஒன்றில் பலமாக மோதி, கடலுக்குள் மூழ்கியது. இதர நான்கு கப்பல்களும் மூழ்கின.

தோல்வியடைந்த மீட்புப் பணி

அடுத்த நாள் ஒரு வணிகக் கப்பல், அடோச்சா கப்பலிலிருந்து தப்பிய ஐந்து ஊழியர்களைக் காப்பாற்றியது. கப்பலில் இருந்த 265 பேர்களில் தப்பியவர்கள் இந்த ஐந்து பேர்தான்! அடோச்சா 55 அடி ஆழத்தில் தலைகீழாகக் கவிழ்ந்திருந்தது. உள்ளே மூழ்கிச் செல்வதற்குப் பெரும் வசதியில்லாத நிலையில் அடோச்சா கப்பலை மீட்கும் முயற்சியில் தோல்விதான் ஏற்பட்டது.

மொத்தம் மூழ்கிய ஐந்து கப்பல்களில் ரொசாரியோ கப்பலை எளிதில் மீட்க முடிந்தது. அடோச்சாவிலிருந்து பொக்கிஷங்களை மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட நேரம், மேலும் ஒரு கடும் புயல் அடித்து சாந்தா மர்கரீடாவையும், அடோச்சாவையும் சின்னாபின்னமாக்கியது.

அடுத்த பத்து வருஷங்களுக்கு கப்பல்களைத் தேட எடுத்த எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை. பகீரதப் பிரயத்தனத்திற்குப் பிறகு 1626ம் ஆண்டு சாந்தா மர்கரிடா மட்டும் மீட்கப்பட்டு அதிலிருந்த பொக்கிஷங்கள் எடுக்கப்பட்டன. இந்தப் பொக்கிஷத்தில் பல நூற்றுக்கணக்கான வெள்ளிப் பாளங்கள், 64000 வெள்ளி நாணயங்கள் மற்றும் பல விலை மதிக்க முடியாத பொருட்களும் அடக்கம்.

காலப் போக்கில் அடோச்சா கப்பல் மறக்கப்படும் நிலை ஏற்பட்டது. அந்தக் கப்பல் பற்றிய ஆவணங்கள் மட்டும் ஸ்பெயினில் அகழ்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றில் பாதுகாக்கப் பட்டிருந்தன. இந்த ஆவணங்கள் சரியான தருணத்திற்காக சில நூற்றாண்டுகள் அடோச்சா கப்பலிலிருந்த பொக்கிஷங்களைப் போலவே காத்திருக்க நேர்ந்தன.

பிறந்தது விடிவு காலம்

இருபதாம் நூற்றாண்டு - விஞ்ஞானம் பல புதுமைகளை சாதித்த காலம். 1942ம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆழ்கடலில் நெடுநேரம் மூச்சுவிட வழி செய்யும் 'ஸ்கூபா' என்ற சோதனைக் கருவி அடோச்சாவின் விடிவு காலத்திற்கு வித்திட்டது. ஸ்கூபா 1715 ஆண்டு கடலில் அழிந்த பத்து ஸ்பானிய கப்பல்களைக் கண்டுபிடிக்க உதவியது. 1960ல் நடந்த இந்த நிகழ்ச்சி உலகில் பெரிதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இதுவே, மெல் ஃபிஷர் போன்ற அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு புதையுண்ட அடோச்சாவைக் கண்டுபிடிக்கத் தூண்டுதலான தீப்பொறியாக அமைந்தது.

மெல் ஃபிஷர் - இவர் கடல் ஆராய்ச்சிக்காகவே தனது வாழ்நாளில் பெரும்பாலான ஆண்டுகளைச் செலவிட்டவர். அவருக்கு கடலில் மறைந்த பொக்கிஷங்களைத் தேடும் ஆர்வம் மிகுந்திருந்தது. அடோச்சாவின் மர்மத்தை விடுவிக்கவேண்டும், அதனுள் மறைந்திருக்கும் அரிய விலை மதிப்பில்லாத பொக்கிஷங்களை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியில் பதினாறு வருஷங்கள் இடைவிடாமல் பாடுபட்டார்.

புதையலைத் தோண்டும் முயற்சியில் அவரது மகனும் மருமகளும் உயிரை விட நேர்ந்தது. ஆனாலும் ஃபிஷர் மனம் தளரவில்லை. 1970ம் ஆண்டு அடோச்சாவோடு நீரில் மூழ்கிய சாந்தா மார்கரிடா கப்பலின் எஞ்சிய பொக்கிஷங்கள் மீட்கப்பட்டன. கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஜூலை மாதம் 1985ல்தான் அடோச்சா கப்பலோடு மூழ்கிப் போன பொக்கிஷங்களை வெளிக்கொண்டு வந்தார் ஃபிஷர்.

அடோச்சா கப்பலின் அடிப்பாகத்தில் புதைந்திருந்த புதையல் அதிகமல்ல - 40டன்கள் வெள்ளியும், தங்கமும் மற்றும் எழுபது பவுண்டு மரகதக் கற்கள்தான்! இத்தனை ஆண்டு கடின உழைப்பிற்குப் பின் ஃபிஷர் கண்டுபிடித்த புதையலுக்கு அமெரிக்க அரசு சொந்தம் கொண்டாடியது. ஃபிஷருக்கும் அந்தப் பொக்கிஷத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றது. நீதிமன்ற வழக்குக்கு 1.6 மில்லியன் டாலர் செலவழித்த பின்தான் ஃபிஷருக்கு பொக்கிஷத்தின் உரிமை கிடைத்தது! டன் கணக்கிலான இந்த பொக்கிஷம் பல தனியார்களால் விற்பனை செய்யப்பட்டது.

அசர வைக்கிறது அடோச்சாவின் சரித்திரம்.

16. நம்பினால் நம்புங்கள்!

சில சமயங்களில் இரு வெவ்வேறு சம்பவங்களுக்கிடையே உள்ள ஒற்றுமை நம்மை வியப்பில் ஆழ்த்தும். அட.. இப்படியும் நடக்குமா! என்று அதிசயப்பட வைக்கும். இவை எல்லாம் காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையா? அல்லது மெய்யாலுமே விதியின் செயலா? என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட அரிய சம்பவங்களில் சில இங்கே..

புத்தகத்திற்குள்

அமெரிக்க நாவலாசிரியை அன்னா பாரிஷ், ஒரு சமயம் தனது கணவருடன் ஒரு பழைய புத்தகக்கடையில் இருந்த புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு 'ஜேக் ஃப்ராஸ்ட் மற்றும் சில கதைகள்' என்ற புத்தகம் கைக்குக் கிடைத்தது. அதை எடுத்துத் தனது கணவரிடம் காண்பித்து, தான் சின்னவயதில் ஆசையோடு அந்தக் கதைப் புத்தகத்தைப் படித்ததாக சொன்னார். அவரது கணவர் அந்தப் புத்தகத்தைக் கையில் வாங்கி முதல் பக்கத்தைத் திருப்பினார். அதிசயம்! அதில் முதல் பக்கத்தில் அன்னா பாரிஷின் பெயர், பழைய விலாசம் எல்லாம் இருந்தது. அந்தப் புத்தகம் அவர் படித்த அதே புத்தகம்தான்!

தந்தைக்குப் பின் தனயன்

ராபர்ட் ஃபாலன் என்பவர் 1858ம் ஆண்டு சுடப்பட்டு இறந்தார். இது அவர் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது அவரைப் பழி தீர்த்துக்கொள்வதற்காக செய்யப்பட்ட கொலை. கொன்ற சக விளையாட்டுக்காரர்கள், ராபர்ட் தங்களை விளையாட்டில் ஏமாற்றி அறுநூறு டாலர் ஜெயித்துவிட்டதாகக் கூறினார்கள். விளையாட்டில் ஃபாலனின் இடம் காலியாகவே இருந்தது. அவர் ஜெயித்த 600 டாலரை வைத்து யாரும் விளையாட முன்வரவில்லை.

ஒருநாள் அந்த இடத்திற்கு ஒருவன் வந்தான். அவனிடம் ஃபாலன் வென்ற 600 டாலரை வைத்து விளையாடச் சொன்னார்கள். அப்போது போலீஸ் சம்பவ இடத்திற்குக் கொலையைப் பற்றி விசாரிக்க வந்தது. அதற்குள் புதிதாக விளையாட வந்தவன் ஆட்டத்தில் வென்று அறுநூறை இரண்டாயிரத்து நூறாக்கிவிட்டான். போலீஸ் ஃபாலன் வென்ற 600 டாலரை அவரது பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். பின்னர் அவர்கள் செய்தி அறிந்தபோது வியந்து போனார்கள். அறுநூறு டாலரை வைத்து வென்றது வேறு யாருமில்லை! ஏழு ஆண்டுகளாக அப்பாவைப் பார்க்காத அவரது பையனேதான்!

இரட்டை விபத்துக்கள்

ஒன்றாகப் பிறந்த இரட்டைச் சகோதரர்கள் 2002ம் ஆண்டு சிலமணி நேர இடைவெளியில் ஒருவருக்குப் பின் ஒருவராக இறந்து போனார்கள். இதில் என்ன அதிசயம் என்கிறீர்களா? அவர்கள் இருவருமே ஃபின்லாந்தின் வடக்குப்பகுதியில் ஒரே சாலையில் வெவ்வேறு விபத்துகளில் இறந்துபோனதுதான் ஆச்சரியமான செய்தி.

இரட்டையரில் முதல் சகோதரன் ஃபின்லாந்தின் தலைநகரிலிருந்து அறுநூறுமைல் தூரத்தில் இருந்த ராஹே என்னுமிடத்தில் தனது பைக்கில் வந்தபோது எதிரே வந்த லாரி மோதி இறந்தான். அதற்கு 1.5 கிலோமீட்டர் தூரத்தில்தான் அவனது சகோதரனும் விபத்தில் இறந்திருக்கிறான்.

'இதுமாதிரி சம்பவம் இதுவரை நடந்ததே இல்லை. இந்த சாலையில் வாகனங்கள் அதிகம் போனாலும் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதில்லை' என்று சொல்கிறார் அங்கிருந்த போலீஸ் அதிகாரி. இறந்தவர்கள் இருவரும் இரட்டையர்கள் என்று அறியும்போது இந்த சம்பவம் மயிர் கூச்செறிய வைக்கிறது. எல்லாம் மேலே இருக்கும் அவன் செயல்தான் என்று நினைக்கத் தோன்றுகிறது எனச் சொல்கிறார் அவர்.

கதையல்ல, நிஜம்!

எட்கர் ஆலன் போ என்ற பிரபலமான நாவல் ஆசிரியர் ஒருமுறை 'ஆர்தர் கார்டன் பின்னின் கதை" என்ற புத்தகத்தை எழுதினார். அதன் கதை ஒரு கப்பல் விபத்தில் சிக்கித் தப்பிய நால்வரைப் பற்றியது. அந்தக் கதையின்படி காப்பாற்ற யாருமில்லாமல் வெகு நாட்களாக உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த நான்கு பேரில் மூவர் உணவுக்குக் கூட வழியில்லாமல் அந்தக் கப்பலின் ஊழியனான ஒரு சிறு பையனையே கொன்று உணவாக்கிக் கொண்டனர்.

1884ம் ஆண்டு உண்மையிலேயே Mignonette என்ற ஒரு கப்பல் கவிழ்ந்தது. அதிலும் நான்கு பேர்தான் உயிர் பிழைத்தனர். கதையில் வந்தது போலவே அந்த நால்வரில் மூவர் கப்பல் கடைநிலை ஊழியனைக் கொன்று பசியாறினார்கள். இதில் இன்னொரு அதிசயம், இறந்துபோன அந்த ஊழியனின் பெயர் கதையில் இருந்தது போலவே நிஜத்திலும் ரிச்சர்ட் பார்க்கர் என்பதுதான்!

ஒற்றுமையோ ஒற்றுமை!

இத்தாலியிலுள்ள மொன்சா என்னுமிடத்தில் அரசன் முதலாம் உம்பர்டொ, அவரது துணையுடன் ஒரு சிறிய ஹோட்டலுக்குச் சென்றார். அங்கு சாப்பிடும்போது அந்த ஹோட்டல் சொந்தக்காரரும், தானும் உருவ ஒற்றுமையுடன்

இருப்பதைப் பார்த்தார். இதைப்பற்றி அதிசயத்துடன் அவர்கள் பேசிக்கொண்டபோது அவர்களுக்குள் இன்னும் பல ஒற்றுமைகளை அறிய முடிந்தது.

1. இரண்டு பேருடைய பிறந்த தினமும் ஒன்று. (மார்ச் 14, 1844)
2. ஒரே ஊரில் பிறந்திருந்தார்கள்.
3. இரண்டு பேருடைய மனைவியரின் பெயரும் மார்கரீடா.
4. அரசன் உம்பர்டு அரசனாகப் பதவியேற்ற அதே நாளில்தான் அந்த ஹோட்டல்காரரும் தனது ஹோட்டலைத் துவங்கினார்.
5. 29 ஜூலை 1900 அன்று ஹோட்டல் சொந்தக்காரர் மர்மமான முறையில் துப்பாக்கி சூட்டில் உயிர் துறந்தார் என்ற செய்தி அரசருக்கு வந்தது. அவர் அந்த இறப்பிற்கு வருத்தம் தெரிவிக்கும்போதே கூட்டத்திலிருந்த ஒரு கொடியவன் அரசனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டான்.

கொல்லாமல் விடமாட்டேன்

இது 1883ம் ஆண்டு நடந்தது. ஹென்றி ஜீக்லண்ட் என்பவன் ஒரு பெண்ணைக் காதலித்துக் கடைசியில் கை விட்டு விட்டான். மனமுடைந்த அவள் தற்கொலை செய்துகொண்டாள். இதனால் கோபமடைந்த அவளது சகோதரன் தன் சகோதரியின் காதலனைக் கொன்றுவிடுவது என்று தீர்மானித்தான். அவனைத் தேடிப் பிடித்துத் துப்பாக்கியால் சுட்டான். அவன் இறந்துவிட்டான் என்று சகோதரன் நினைத்துத் தானும் தற்கொலை செய்து கொண்டான். ஆனால் அந்தக் காதலன் இறக்கவில்லை. சகோதரன் சுட்ட குண்டு காதலனின் முகத்தை லேசாக உரசிச் சென்று அருகிலிருந்த மரத்திற்குள் பாய்ந்துவிட்டது.

பல வருஷங்களுக்குப் பிறகு அந்தக் காதலன் ஜிக்லண்ட் குண்டு பாய்ந்திருந்த அந்த மரத்தை வெடிமருந்து வைத்துத் தகர்க்க தீர்மானித்தான். அந்த வெடிமருந்து வெடித்தபோது மரத்தில் தங்கியிருந்த குண்டு சிதறி ஜீக்லன்டின்

தலைக்குள் பாய்ந்தது. அந்த இடத்திலேயே அவன் மரணமடைந்தான். சகோதரன் அன்று கொல்ல முடியாததை மரம் நின்று கொன்றுவிட்டது!

கீழே விழுந்த குழந்தை

1930ம் ஆண்டில் ஒருநாள் ராபர்ட் பிக்லாக் என்பவன் டெட்ராயிட் வீதி ஒன்றில் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு வீட்டு மாடி ஜன்னலிலிருந்து சின்னக் குழந்தை தடுமாறி அவன் மேல் வந்து விழுந்தது. நல்லவேளையாக, இருவருமே ஆபத்தில்லாமல் தப்பித்துக் கொண்டார்கள். விஷயம் இதோடு முடியவில்லை.

ஒரு வருஷத்திற்குப்பிறகு இன்னொரு நாள் அதே ஜன்னலிலிருந்து அதே குழந்தை அதே ராபர்ட் மேலே விழுந்தது. இந்த முறையும் இருவரும் காயமில்லாமல் தப்பினார்கள்.

மர்ம சாமியார்!

இந்த நிகழ்ச்சி ஆஸ்திரியாவில் 19வது நூற்றாண்டில் நடந்தது. முன்னுக்கு வந்து கொண்டிருந்த ஓவியரான ஜோசப் எய்னர் என்பவர் 18 வயதில் தூக்கு மாட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்தார். அந்தச் சமயத்தில் ஒரு சாமியார் அதைப் பார்த்துவிட்டு எய்னரைத் தற்கொலையிலிருந்து மீட்டார்.

இதேபோல் எய்னர் 22ம் வயதில் தற்கொலைக்கு முயற்சித்தபோதும் அதே சாமியார் அந்த ஓவியரைக் காப்பாற்றினார். இதற்கு எட்டு வருஷங்களுக்குப் பிறகு எய்னர் அரசியல் புரட்சியாளராக அரசால் கருதப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார். இந்த முறையும் அந்த சாமியார் அவரை தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றினார்.

தனது 68வது வயதில் கடைசியாக வெற்றிகரமாக(!) தூக்கு போட்டுக்கொண்டு இறந்தார். ஆனாலும் சாமியார் வாசம் விடவில்லை. அந்தச் சாமியாரே எய்னரின் இறுதிச் சடங்கையும் நடத்திவைத்தார். கடைசி வரையில் எய்னருக்கு அந்த மர்ம சாமியார் யார் என்றே தெரியாது.

வித்தியாசமான இரட்டையர்

ஜிம் லூயிஸ், ஜிம் ஸ்ப்ரிங்கர் இருவரும் பிறவி இரட்டையர்கள். இருவரும் பிறந்தபோதே பிரிந்து வெவ்வேறு குடும்பத்தாரால் வளர்க்கப்பட்டார்கள். ஒருவருக்கொருவர் தெரியாமலே இரண்டு குடும்பத்தார்களும் இரட்டையர்களுக்கு ஜேம்ஸ் என்று பெயர் சூட்டினார்கள். இரண்டு ஜேம்ஸ்களும் ஒருவரை ஒருவர் பார்த்ததே இல்லை.

இரண்டுபேரும் போலீஸ் வேலைக்கான பயிற்சியின்போது ஒருவரை ஒருவர் முதல் முதலாக சந்தித்தார்கள். அவர்கள் இரண்டு பேருக்கும் இயந்திரப் பொறியியலிலும், மரவேலை செய்வதிலும் ஆர்வமிருப்பதை உணர்ந்தார்கள். இரண்டு பேரின் மனைவியர் பெயரும் லின்டா. அவர்களுடைய மகன்கள் பெயர்களும் ஒன்றாகவே இருந்தன. இரண்டு பேரும் மனைவிகளை விவாகரத்து செய்தார்கள். அவர்கள் மீண்டும் மணந்த பெண்களின் பெயரும் ஒன்றே. அவர்கள் நாய்களின் பெயரிலும் ஒற்றுமை. இரண்டிற்குமே பெயர் 'டாய்'.

17. சில வியப்பூட்டும் ஆராய்ச்சிகள்

அளந்து சிரியுங்க..

வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்கிறார்கள். ஆனால் எத்தனை பேர் வாய் விட்டு மனதாரச் சிரிக்கிறோம்? வெறுமனே ஒரு மென்னகையோடு, எங்கே இதற்குமேல் சிரித்தால் காசு போய்விடுமோ என்பது போலச் சிரிக்கிறோம்.

ஜப்பான் நாட்டு மனோதத்துவப் பேராசிரியர் யோஜி கிமுரோ சிரிப்பை அளப்பதற்கு ஒரு டிஜிடல் கருவியைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் சொல்கிறார், "வாயாற வயிறு குலுங்கச் சிரித்தால்தான் அது இயல்பான சிரிப்பு. சிரிக்கும்போது பல முறை 'ஹாஹ் ஹாஹ்' என்ற சத்தம் வெளிப்படுகிறது. தொடர்ச்சியாக இந்த சத்தம் வெளிப்பட வேண்டும். அப்படி வெளிப்பட்டால் மின்னதிர்வுகள் உடலில் பரவி சுரப்பிகள் இயங்கும் திறன் அதிகமாகும். ரத்த ஓட்டம் சீராகும். இதயத்துக்கும் வயிற்றுக்கும் இடையே உள்ள தசைகள் (உதரவிதானம்) முழு வேகத்தில் புத்துணர்ச்சி பெறும்".

குறிப்பிட்ட அளவு 'ஹாஹ் ஹாஹ்'கள் நம்மிடமிருந்து வெளிவரும்போது ஏற்படும் மின்னதிர்வுகளை இவர் கண்டுபிடுத்துள்ள டிஜிடல் கருவி அளவிடுகிறது. நகைச்சுவை உணர்வே இந்த மின்னதிர்வுகளை ஏற்படுத்தி மூளையைச் சுறுசுறுப்பாக இயங்கவைக்கும். அப்புறம் என்ன? 'ஹாஹ் ஹாஹ்' என்று சிரிக்க வேண்டியதுதானே! (தனியாக மட்டும் சிரிக்காதீர்கள்! வேறுமாதிரியாக நினைத்துக்கொள்ளப் போகிறார்கள்!)

அரண்டவன் கண்ணுக்கு

இரவில் தனியாக சாலையில் நடந்து செல்வதென்றாலே ஒருவித பயம். படித்த பல பேய்க்கதைகள் நினைவிற்கு வந்து சங்கடம் செய்யும். ஏன் இரவில்தான் பேய் வர வேண்டும்? பகல் என்றால் பேய்களுக்கு பயமா? இப்படி ஒரு ஆராய்ச்சி.

உண்மையில் அப்படியில்லையாம். மனிதர்களுக்குத்தான் இருளைக் கண்டால் மனபிராந்தி ஏற்படுகிறதாம். இதை அறிவியல் பூர்வமாக லண்டனில் உள்ள ஒரு ஆராய்ச்சிக் குழு நிரூபித்துள்ளது.

இருள் சூழ்ந்திருக்கும்போது நிழலைப் பார்த்து இல்லாத ஒரு உருவத்தை மூளை உருவாக்கிக்கொள்கிறது. கண்களால் காணும் காட்சி முழுமையாக மூளைக்குச் செல்வதற்குள் ஏற்படும் மாயத்தோற்றம் இது. இருளில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு பந்துகளை வீசச் செய்தபோது வீசப்படாத மூன்றாவது பந்து ஒன்றும் வந்து மறையும். இது கண்களையும் மூளையையும் ஏமாற்றும் செயல்.

உண்மையில் பந்து வீசப்படாதபோது அப்படி ஒரு பந்து வீசப்பட்டதாகவும் வீசப்பட்ட பந்து மற்ற இரு பந்துகளைப்போல மறைந்து விடுவதாகவும் மனது உருவகப்படுத்திக் கொள்கிறது. கம்ப்யூட்டர் மூலமாகவும் இந்த உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒரு அறையில் உள்ள கம்ப்யூட்டர் திரையின் மத்தியில் 80 மில்லி விநாடிகள் மட்டுமே தோன்றும் சிறிய பழுப்பு நிறத்திலான முக்கோணம் இன்னொரு அறையில் பதிவு செய்யப்பட்டது. இந்தச் சோதனையின்போது உண்மையில் திரையில் தோன்றிய முக்கோணத்தைவிட அதிக எண்ணிக்கையில் முக்கோணங்களை அடுத்த அறையில் இருந்த விஞ்ஞானிகளின் மூளை பதிவு செய்தது தெரியவந்தது.

இதன்மூலம் ஒளியில்லாத இடங்களில் காணப்படும் காட்சிகள் மூளையை ஏமாற்றும் வகையில் தோன்றுகின்றன. இதைத்தான் பேய் என்றும் ஆவி என்றும் மூளை கற்பனை செய்துகொள்கிறது எனச் சொல்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

குரங்கிலிருந்து பிறந்தவன்

பேச்சு என்பது மனிதர்களுக்கு மட்டுமே சொந்தமானதா? குரங்குகளால் பேச முடியாதா? ஜெர்மன் குழுவினர்கள் இப்படி ஒரு ஆராய்ச்சி நடத்தினர்.

ஆசிய குட்டைவால் குரங்குகளைக் கொண்டு பல்வேறு ஒலிகளை எழுப்பி அவற்றை குரங்குகள் உணர்கின்றனவா என்று சோதிக்கப்பட்டது. அப்போது மனிதர்களைப்போலவே குரங்குகளுக்கும் மூளையில் ஒலிகளை உணரும் பகுதி இருப்பது கண்டறியப்பட்டது. ஒலியின் தன்மைக்கேற்ப மூளையில் ஏற்படும் மாற்றங்களை எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் உறுதி செய்தார்கள். இதனால் குரங்குகள் தங்கள் இனத்துடன் பல்வேறு ஒலி சமிக்ஞை மூலம் பேசிக்கொள்கின்றன. ஒவ்வொரு குரங்கின் குரலுக்கும் வித்தியாசம் கண்டு கொள்கின்றனவாம். ஆனால் இவைகளால் பிற விலங்குகள், பூச்சிகள், இடி மழையின் ஒலிகளைத் துல்லியமாக அறிய முடிவதில்லை.

இந்த ஆராய்ச்சியின் மூலம் மனிதர்களுக்குக் குரல் இழப்பு, செவித்திறன் இழப்புக்கான காரணங்களைக் கண்டுபிடிக்க முடியும் எனக் கருதப்படுகிறது

குடிச்சாப் போகுமா துக்கம்?

குடிப்பழக்கம் உள்ளவர்களிடமெல்லாம் காரணம் கேட்டால் கவலையை மறக்கக் குடிப்பதாகக் கூறுவார்கள். ஆனால் உண்மையில் குடிப்பதால் கவலை அதிகரிக்கத்தான் செய்யும் என்கிறது ஓர் ஆய்வு.

இரு பிரிவு எலிகளை இதற்காகத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு லேசான அளவில் மின் அதிர்வு தரப்பட்டது. அதன் பிறகு ஒரு பிரிவு எலிகளுக்கு 'எத்தனால்' (சாராயம்) கொடுத்துக் கண்காணித்தார்கள். இன்னொரு பிரிவிற்கு 'எத்தனால்' செலுத்தவில்லை. 'எத்தனால்' செலுத்தப்பட்ட எலிகளுக்கு மதுவில் இருக்கும் போதைத்தன்மை நரம்பிலேயே தங்கிவிடுகிறது. பய உணர்வு இருந்தால் அது நீங்க இரு வாரங்கள் ஆகின்றன. அதிர்ச்சி நீங்க அதிக கால அவகாசம் தேவைப்படுகிறது. ஆனால் 'எத்தனால்' செலுத்தப்படாத எலிகள் அதிர்ச்சியிலிருந்து விரைவில் மீண்டுவிடுகின்றன.

மனிதர்களிடம் சோதனை செய்தபோது கவலையைப் போக்குவதற்காக மது அருந்துவோர் அந்தக் கவலையில்தான் அதிகம் மூழ்குகின்றனர். தாங்கள் விரும்பாத சம்பவத்தை மறப்பதற்காகக் குடிப்பதாகச் சொல்லப்படும் மது அந்த விஷயத்தை நீண்ட காலம் நினைவில் நிறுத்துகிறது என அறிய வந்தது.

18. கனவுகள்

கனவு என்றால் என்ன? ஏன், எப்போது, எப்படிக் காண்கிறோம்? கனவுகள் முக்கியமானவையா? அவற்றின் பலன்கள் என்ன? அவை எதிர்காலத்தை அறிவிக்கின்றனவா?

இதுபோன்ற பலவகைக் கேள்விகளுக்கு இக்கட்டுரையில் விடை காண்போம்.

கனவுகளை நாம் இரண்டு வகையில் பொருள் கொள்கிறோம். நம் எதிர்காலம், நமது லட்சியங்கள், அவைகளை அடைவதற்கான வழிமுறைகளை எண்ணிப் பார்ப்பதும் ஒருவகையான கனவுதான். இந்தக் கனவை நாம் விஷன் (vision) எனச் சொல்கிறோம். நமது அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களைக் காணச் சொன்னது 'சுபிட்சமான எதிர்கால இந்தியாவைப் பற்றிய காட்சியைத்தான்.'

மற்றொரு வகைக் கனவுகள்தாம் நாம் கண்ணை சிறிது அசந்தாலும் மூடிய கண்களுக்குள் படமாக ஓடுவது.

கனவுகள் என்றால் என்ன?

1. நாம் அசந்திருக்கும்போது நமது மூளை மிகக்குறைந்த அளவில் வேலை செய்யும் நேரங்களில் படக்காட்சிகள் போல நிகழ்வதுதான் கனவுகள் என்பது. அந்த நேரங்களில் வேறெந்த வெளித் தூண்டுதல்களும் மனதிற்குள் நுழைவதில்லை.

ஆமாம். நாம் தூங்கும்போது மட்டும் கனவு காண்பதில்லை. நம்மை மறந்து ஓய்வு நிலையில் விழிப்புடன் இருக்கும்போதுகூட ஏதோ காட்சிகள் நம் முன் விரிகின்றன. திடீரென ஏதோ கனவு கண்டோமே என்று திடுக்கிட்டு விழிக்கிறோம்.

இந்த மாதிரி ஓய்வாக இருக்கும்போது கனவு காண்பவர்கள் விழிப்புடன்தான் இருக்கிறார்கள் என்று கூறுகின்றன ஆராய்ச்சிகள். இந்த நிகழ்வுகள் தூங்கும்போதுதான் கனவுகள் வரும் என்ற தவறான முடிவைத் தகர்க்கின்றன.

2. கனவு என்பது நாம் அனுபவிப்பது, உணர்வது. கனவில் நடப்பவைகள் அப்போது உண்மையாகவே நிகழ்வதைப் போலத் தோன்றுகின்றன. அப்போது நாம் நமது புலன்களைப் பயன்படுத்துகிறோம், பார்க்கிறோம், கேட்கிறோம்.

கனவுகளில் எப்போதுமே நாம் தான் கதாநாயகனாக இருப்போம். நமக்கு அல்லது நம்மைச் சுற்றிய நிகழ்வுகளைத் தான் பெரும்பாலும் கனவு காண்கிறோம். பல சமயங்களில் நமது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது திடுக்கிட்டு விழிக்கிறோம். அருகிலிருப்பவர்கள், 'என்னாயிற்று உனக்கு?'என்று கேட்குமளவுக்கு உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறோம்

3. கனவு என்பது நம் அடுத்தநாள் நினைவில் நிற்பது. எனவே இதனைக் கனவு அனுபவத்தின் 'நினைவுகள்' என்றுகூடச் சொல்லலாம்.

4. கனவு என்பது நாம் வாய் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ மற்றவர்களுக்குக் கொடுக்கும் ஒரு ரிப்போர்ட். கனவில் நாம் கண்ட நிகழ்ச்சியை வேறு யாரும் பார்க்கவும் முடியாது, கனவு காணும்போது நாம் நேரடியாகக் கனவை மற்றவர்களுக்கு விளக்கவும் முடியாது.

கனவைப்பற்றிய இந்த நான்கு செய்திகளையும் இணைத்து சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், "கனவு என்பது நாம் சாதாரணமாக அயர்ந்து இருக்கும் நிலையில் நம் மனக்கண்முன் நடைபெறும் நிகழ்ச்சிகளின் ஒரு நினைவு" என்று சொல்லலாம்.

இன்னும் விளங்கும்படியாகச் சொல்ல வேண்டுமென்றால் நாம் நம்மையும் சூழ்நிலையையும் மறந்திருக்கும் நிலையில் நமது மனதுக்குள் தானாக அரங்கேறும் சின்ன நாடகங்கள் என்றும் கூறலாம்.

நாம் எப்போது கனவு காண்கிறோம்? அடிக்கடி கனவுகள் வருமா?

பொதுவாக பத்து வயதுக்குமேல் ஆன அனைவரும் ஒரு நாளைக்கு நாலிருந்து ஆறுமுறை தூக்க நிலையில், REM (Rapid Eye Movement) எனப்படும் துரிதமான கண்ணசைவு நேரங்களில் கனவு காண்கிறார்கள். இந்த துரிதக் கண்ணசைவு நேரங்களில் நாம் விழித்திருக்கும் நிலையைப் போலவே நமது மூளை இயங்குகிறது. ஆனால் மூளையின் எல்லாப் பகுதிகளும் இந்த நிலையில் இயங்குவதில்லை.

இந்த REM (தூங்க ஆரம்பிக்கும் வேளை) முன்னிரவில் ஐந்திலிருந்து பத்து நிமிடங்களும் பின்னிரவில் 30லிருந்து 34 நிமிஷங்களும் நீடிக்கின்றன. எனவே கனவு கிட்டடத்தட்ட அரைமணி அளவுக்கு நீடிக்கலாம் எனத் தெரிகிறது.

துரிதக் கண்ணசைவு இல்லாத, மூளை சாதாரணமாக இயங்கத் துவங்கும் விடிகாலை நேரங்களிலும் கனவுகள் வருகின்றன என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதனால்தான் சாதாரணமாக நாம் 4லிருந்து 6முறை இரவில் கனவு காண்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆனால் நாம் தூங்கும் நேரங்களில் மட்டும்தான் கனவுகள் வருகின்றன என்று தீர்மானமாகச் சொல்லமுடியாது. பகலில் சிலநேரங்களில் நாம் விழித்திருக்கும்போதுகூட அசந்த நிலையில் நம்மைச் சுற்றி இருப்பதை மறந்திருக்கும்போது கூடப் பகல் கனவுகள் வருகின்றன.

ஓரளவு இருண்ட அறையில் இருவரை அமரவைத்து அவர்களிடம் குறிப்பிட்ட இடைவேளைகளில் அவர்கள் விழித்திருந்த நிலையிலும் மனதில் என்ன தோன்றுகின்றன என்று ஆய்வு செய்தபோது இந்த உண்மை நிரூபணம் செய்யப்பட்டது.

நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவைகளையும் மறந்த சூழ்நிலையில் மூளை குறிப்பிட்ட அளவு செயல்பாட்டுடன் இருக்கும்போது எந்த நேரத்திலும் கனவு காணலாம் எனத் தெரிகிறது. பத்துவயதுக்குக் குறைவானவர்கள் துரிதக் கண்ணசைவுகளின்போது 20 சதவிகித நேரங்களில்தான் கனவு காண்கிறார்களாம்.

முடிவாக, நாம் துரிதக்கண்ணசைவு நேரங்களிலோ அல்லது கண்ணசைவு இல்லாத நேரங்களிலோ, விழிப்பு நிலையிலோ கனவு காண்கிறோம். துரிதக் கண்ணசைவு நேரங்களில் கட்டாயம் கனவு காணவேண்டும் என்பதும் இல்லை. அந்த நேரங்களில் கனவுகள் வராமல்கூட இருக்கலாம்.

கனவுகள் முக்கியமானவையா?

நிச்சயமாக அப்படி ஒன்றும் முக்கியமானவை அல்ல. நம்மில் பலர் ஏதாவது கனவு கண்டால் அதைப்பற்றியே பேசி விவரித்து அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சிலர் தங்களுக்கு வரும் கனவுகளை லட்சியம் செய்வதில்லை.

கனவுகளுக்குக் கொடுக்கப்படும் கவனம் ஒவ்வொரு சமூகத்திற்கும் தனி மனிதனுக்கும் வேறுபடுகிறது. கனவு காணாவிட்டால் ஒருவர் உடல்நிலை பாதிக்கப்படுமா என்று கேட்டால் அதற்கு ஒன்றும் ஆதாரம் இல்லை.

நாம் காணும் எல்லா கனவுகளுக்கும் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?

இந்தக்கேள்விக்கு ஆமாம் அல்லது இல்லை என்று நிச்சயமாகக் கூறமுடியாது. சிலர் கனவுகளுக்கு உள்ளர்த்தம் இருக்கிறது என்று சொல்வார்கள். நம்மால் அது இல்லை என்று உறுதியாகக் கூறமுடியாது.

சில கனவுகள் உருவகமாக அல்லது அறிகுறியாக ஏதாவது செய்தியைச் சொல்லலாம். ஆனால் நம் கனவுகளில் பெரும்பாலானவை, வழக்கமாக நம் நினைவில் பதிந்த, வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள்தான் பலருக்கு கனவுகளாகத் திரும்பத் திரும்ப வருகின்றன. இது மிகவும் சகஜமான நிகழ்ச்சி. இதற்கு தனி அர்த்தம் ஏதும் கிடையாது.

அதேபோல் நம்மில் பலர் யாரோ நம்மைத் துரத்துவதுபோலக் கனவு காண்கிறோம். இதற்காகப் பயப்படத் தேவையில்லை. இதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியாவிட்டாலும் உங்களைப்போல பெரும்பாலானவர்கள் இதே

மாதிரி கனவுகளைக் காண்கிறார்கள் என்ற செய்தி உங்களுக்கு ஓரளவு ஆறுதலாய் இருக்கும்!

கனவு காணுவதற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன?

நமது பயமோ அல்லது மனஅழுத்தமோ நாம் காணும் கனவுகளுக்கு அடிப்படையான காரணங்களாக அமைகின்றன. இதைத் தொடர்ச்சி அனுமானம் என்று சொல்கிறார்கள். பரீட்சைக்குப் போகும்போது 'ஐயோ, எப்படி எழுதப்போகிறோமோ!' என்று பயத்துடன் இருந்தால் உங்கள் கனவுகள் அது சம்பந்தமானதாக இருக்கும்.

எதைப்பற்றி அதிகம் நினைக்கிறோமோ அவை கனவுகளில் வருகின்றன. நீங்கள் கிரிக்கெட் விளையாடுபவராக அல்லது ரசிகராக இருந்தால் உங்கள் கனவுகள் அதைச் சுற்றியே பெரும்பாலும் அமையும். யாரிடமாவது நாம் மிக அன்பு செலுத்தினாலோ அல்லது யாரையாவது காதலித்தாலோ அவர்களைப் பற்றிய கனவு காண்பீர்கள். (டூயட் கூடப் பாடலாம்!)

அடுத்து எழும் கேள்வி, போதை மருந்துகள் கனவுகளைத் தூண்டுமா என்பது.

'தூண்டும்' என்று சொல்ல முடியாவிட்டாலும் அவைகள் கனவுகளைப் பயமானதாகவும், விரிவாகவும் ஆக்குகின்றன என்று சொல்லலாம். எல்.டோபா என்ற மருந்தைப் பார்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுத்தபோது இந்த உண்மை அறியப்பட்டது.

ஆனாலும், போதை மருந்துகளுக்கும் கனவுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய முழுமையான ஆய்வு இதுவரை நடைபெறவில்லை.

யாரெல்லாம் கனவு காண்கிறார்கள்?

மிருகங்கள் கனவு காணுமா என்ற கேள்விக்கு நிச்சயமான பதில் இல்லை. ஆய்வில் சொல்ல முடிவதெல்லாம் மிருகங்களுக்கும் விரைவுக் கண்ணசைவுகள் இருக்கின்றன என்பதுதான். இந்தக் கண்ணசைவு நேரங்களில் நமக்குப் பெரும்பாலும் கனவுகள் வருகின்றன.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் இனம் எல்லாவற்றிற்கும் இந்த விரைவுக் கண்ணசைவுகள் உண்டு. ஆனால் இதை மட்டும் வைத்து அவைகள் கனவு காண்கின்றன என்று உறுதிப்படுத்த முடியாது. மனிதர்களுக்கும் இந்த மாதிரியான நேரங்களில் கனவு வர வேண்டும் என்பது கட்டாயமில்லை அல்லவா!

அடுத்து எழும் வினா, கண்பார்வையில்லாதவர்கள் கனவு காண்பார்களா? அவர்கள் கனவுகள் எப்படியிருக்கும்?

நாம் காணும் கனவுகள் நேரில் நடப்பதைப்போல அவ்வளவு தெளிவாகவும், விரிவாகவும் இருப்பதுதான் இந்த சந்தேகத்திற்குக் காரணம். நிச்சயம் கண்பார்வை இல்லாதவர்களும் கனவு காண்கிறார்கள்.

குழந்தைகள் காணும் கனவுகள் எப்படிப்பட்டதாக இருக்கும்?

தூக்கப் பரிசோதனை செய்தபோது அவர்கள் அடிக்கடி கனவு காண்பதில்லை மற்றும் அவர்கள் காணும் கனவுகள் சுவாரசியமற்றதாக, உப்புச் சப்பில்லாதவையாகவே அமைகின்றன என அறிய முடிந்தது.

ஐந்தாவது படிக்கும் வயது வரும்போது சிறுவர்கள் நன்றாகவே கனவு காண்கிறார்கள்.

கனவுகள் ஏன் நினைவில் நிற்பதில்லை?

நாம் தூக்க நிலையில் கனவு காண்பதால் அந்தக் கனவிற்கு அப்போது அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இது கிட்டத்தட்டப் பழக்கமானவர்கள் காரை டிரைவ் செய்து கொண்டுபோவது போலத்தான். மனம் எங்கேயோ இருந்தாலும் அனிச்சையாக செயல் நடந்து கொண்டிருக்கும். அதனால்தான் நாம் நமது கனவுகளில் 95 லிருந்து 99 சதவிகிதம் வரை நினைவில் வைக்க முடிவதில்லை.

கனவுகள் நினைவில் நின்றால் அதற்குக் காரணம்?

கனவுகளின் மேல் தனி விருப்பமுள்ளவர்கள் கனவுகளை நினைவில் வைத்துக்கொள்கிறார்கள்.

சிலருக்கு கனவில் வந்ததுபோல் நிஜ வாழ்விலும் நடந்திருக்கலாம். அந்த நிகழ்ச்சியே அவர்களுக்குக் கனவுகளை நினைவில் வைத்துக்கொள்ளத் தூண்டுகோலாக இருக்கிறது.

கனவுகளின் மேல் ஆர்வமும் கனவுகளை நினைவில் வைத்துக் கொள்வதற்கான தூண்டுகோலுமே சிலர் கனவுகளை மறக்காமல் இருக்கக் காரணமாக இருக்கலாம். சில சமயங்களில், அவர்கள் கனவுகளை நினைவு வைத்துக்கொள்ளவேண்டும் என்று மனதுக்குள் தீர்மானம் செய்துகொண்டவர்களாக இருக்கலாம். அல்லது ஏதாவது ஒரு சமயம் அவர்கள் கண்ட கனவு பலித்திருக்கலாம், அல்லது ரொம்ப சுவாரசியமானதாக இருந்திருக்கக் கூடும்.

கனவுகளை நினைவில் வைத்துக் கொள்ளும் பலரிடமிருந்து சேகரித்த விவரங்கள் இந்தச் செய்திகளை நமக்குத் தெரிவிக்கின்றன.

முரண்பாடு ஏன்?

சிலர் கனவுகளை அதிகமாக நினைவு வைத்துக்கொள்வதற்கும் அதற்கு மாறாக சிலர் கனவுகளை நினைவிலேயே வைத்துக் கொள்ளாமல் போவதற்கும் அவர்களுள் ஏற்படும் ரசாயனத் தடுமாற்றங்கள் காரணமாக இருக்கலாம். சில மருந்துகள் மூலம் ஒருவர் காணும் கனவைத் துல்லியமாக நினைவில் வைக்கமுடிகிறது எனச் சோதனையில் கண்டிருக்கிறார்கள்.

ஒன்றுமே நினைவில்லை என்று சொல்லுபவர்களுக்கு வரும் கனவுகளே குறைவாக இருக்கலாம், அல்லது கனவு வராமலே கூட இருக்கலாம். துரிதக் கண்ணசைவு நேரங்களில் ஒருவர் நாலு அல்லது ஐந்து முறை கனவு காண்கிறார்கள் என்று சொல்லும்போது இது எப்படி சாத்தியம் எனத் தோன்றலாம்.

ஆனால் இந்தக் கனவுகளைப் பற்றி 1950-60களில் ஆராய்ச்சி செய்தவர்கள் அவசரப்பட்டு முடிவிற்கு வந்துவிட்டார்களோ, போதுமானவர்களிடமிருந்து சரியான தகவல்களைச் சேர்க்கவில்லையோ என்று தோன்றுகிறது. சமீப காலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் கற்பனைத்திறன் குறைவானவர்கள் மீது நடத்தப்பட்ட சோதனைகள் மூலம் சிலர் குறைவாகக் கனவு காண்கிறார்கள், ஒரு சிலர் கனவுகளே காண்பதில்லை என்ற கருத்து வலுப்படுகிறது.

சிலருக்கு மூளையில் சில குறிப்பிட்ட பாகங்களில் ஏற்படும் அழற்சி கூட கனவு காணும் திறன் இல்லாமல் போவதற்குக் காரணமாக இருக்கிறது. இவர்களுக்கு எல்லோரையும் போல அயர்ந்த நித்திரைக்கு முன்னால் ஏற்படும் துரிதக் கண்ணசைவுகள் ஏற்படுகின்றன. ஆனால் கனவு காண்பதில்லை. இதனால் அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை, மன உறுதியானவர்களாகவே இருக்கிறார்கள்.

சின்னக் குழந்தைகள் பெரியவர்களைப்போல அவ்வளவு கனவுகள் காண்பதில்லை. குழந்தைகள் தூக்கத்தில் ஏதாவது பேசுவதைப்பார்த்து அவர்கள் கனவு கண்டு பேசுகிறார்கள் என நினைக்கிறோம். அது சும்மா, தூக்கத்தில் உளறும் உளறல்கள்தான்.

கனவுகள் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்கின்றனவா?

கனவுகள் எதிர்காலத்தில் நடக்கப்போவதைச் சொல்லும் என்பதற்கு அறிவியல் ரீதியாக எந்த ஆதாரமும் இல்லை.

கனவு காணும்போதே இறப்பது சாத்தியமா என்றால் நிச்சயமாக இல்லை. சாவதுபோல் கனவு கண்டால் அது நிச்சயம் நடக்கும் என்று சொல்வதெல்லாம் கட்டுக் கதை. உண்மையில் அதுமாதிரியான கனவுகள் சுகமான அனுபவங்களாக அமைகின்றன.

கனவுகளைப் பற்றிய பல ஆராய்ச்சிகள், கனவுகளுக்குப் பலன் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இன்னும் பல சந்தேகங்கள் தீர்க்கப்படாமலே இருக்கின்றன.

19. இன்னா பன்னிரண்டு

நாம் மற்றவர்களிடம் பழகும் போது எப்படி நடந்து கொள்கிறோம், நமது உடல் பாஷைகள், பேசும் விதம் ஆகியவற்றைக்கொண்டே அவர்கள் நம்மை மதிப்பீடு செய்கிறார்கள். குறிப்பாக நாம் ஒரு வேலைக்குச் செல்லுமிடத்தில் உயர் அதிகாரிகளிடம் பேசும்போது நமது நடை உடை பாவனைகள் எப்படி அமைகின்றன என்பதைப் பொறுத்துத்தான் நமது வெற்றியும் தோல்வியும் அமையும். இது நாம் நடைபயில முயற்சிப்பது போலத்தான். உங்களைப் பின்பக்கமாக நடந்து போகச் சொன்னால் எவ்வளவு கடினமாக இருக்கும்? அது போலத்தான் மற்றவர்களுடன் பழகும்போது எப்படி அவர்களுடன் உறவாட வேண்டும் என்பதான பயிற்சியும். எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவதற்கு முன்னால் என்னவெல்லாம் கூடாது என்பதைத் தெரிந்துகொண்டால் பயனுள்ளதாக இருக்கும்.

நாம் என்னவெல்லாம் செய்யக்கூடாது? இதோ 12 மோசமான பழக்கங்கள்:

1. மற்றவர்களிடம் பேசும்போது அவர்களை நேராகப் பார்க்காமல் நிலத்தைப் பார்த்துப் பேசுவது. யாருடன் பேசுகிறோமோ அவர்களது கண்ணை நேராகப் பார்த்துப் பேசும்போதுதான் நமது வார்த்தைகளிலுள்ள உண்மையையும் நேர்மையையும் அடுத்தவருக்குப் புரியவைக்க முடியும். அதற்காக அவர்களை முறைத்துப் பார்க்கக் கூடாது.

2. நிற்கும்போதோ உட்காரும்போதோ நேராக இல்லாமல் வளைந்து கூனியிருப்பது. நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் மற்றவர்களை உங்கள் பால் ஈர்க்க அவசியம். அது உங்களுக்கு உங்கள்மேல் உள்ள தன்னம்பிக்கையைக் காட்டும்.

3. முகத்தைச் சிடுசிடுவென வைத்துக்கொண்டு முறைப்புடன் பேசுவது. இது யாருக்குமே பிடிக்காது, உங்களுக்கு பேசப் பிடிக்கவில்லையானால் அவர்களுடன் பேசுவதைத் தவிருங்கள், பேசும்போது முகத்தில் ஒரு புன்னகையைத் தவழவிடுங்கள். அது உங்கள் தன்னம்பிக்கையைக் காட்டுவதோடு உங்களோடு உறவாடுபவருக்கும் ஒரு உற்சாகத்தை அளிக்கும்.

4. யாராவது புதியவர்களைப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக்கொள்வது. உங்கள் பெற்றோர்கள் உங்களது சிறு வயதில் புதியவாராக யாராவது இருந்தால் அவருடன் பழகாதே என்று சொல்லிக் கொடுத்திருக்கலாம். ஆனால் நீங்கள் இப்பொது வளர்ந்து விட்டிர்கள். யாருடன் பேசும்போதும் நீங்கள் என்ன பேசுவது என்று பேசத் திணறாமல் அவர்களுடன் சரளமாக உரையாடுவது உங்களது உறவுகளை

மேம்படுத்தும். சந்திப்பவர்கள் பரிச்சயமில்லாதவராக இருந்தாலும் கூச்சமில்லாமல் பேசப் பழகுங்கள்.

5. நீங்கள் மற்றவர்களது மனதில் ஏற்படுத்தும் முதல் முத்திரைதான் உங்களோடு உறவாடுபவர்களது நினைவில் எப்போதும் நிலைத்து நிற்கும். அதை வைத்துத்தான் நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். அதனால் முதல் சந்திப்பிலேயே மற்றவர்களைக் கவருமாறு நடந்துகொள்வது மிகவும் அவசியம்.

6. மிகவும் சங்கோஜத்துடன் அதிகமாகப் பேசாமலிருப்பது. வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமானால் மற்றவர்களிடம் உறவாடும்போது நன்கு சகஜமாகப் பேசத் தெரிய வேண்டும். எண்ணங்களைத் தங்குதடையில்லாமல் வெளிப்படுத்த வேண்டும். அதற்காக வளவளவென்று பேசி 'இவன் எப்போது வாயை மூடுவான்' என்று மற்றவர்கள் நினைக்கும்படி செய்யக் கூடாது. வார்த்தைகளை அளந்து சரியான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, அழகாகப் பேச வேண்டும். அசந்தர்ப்பமாக ஏதாவது பேசி, தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தக் கூடாது. முக்கியமாக நீங்களே உங்கள் பேச்சைக் கேட்க வேண்டும். மனதில் தோன்றுவதை யெல்லாம் கண்டபடி உளறக் கூடாது.

7. மற்றவர்கள் பேசும்போது அவர்கள் பேச்சில் கவனமில்லாமல் இருப்பது. அடுத்தவர்கள் பேசும்போது காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவர்கள் பேசும்போது எங்கோ கவனத்தைச் செலுத்திவிட்டு, அவர்கள், 'நான் சொல்வது சரிதானே' என்று கேட்கும்போது என்ன சொன்னார்கள் என்றுகூடத் தெரியாமல் விழிக்கக் கூடாது. அவர்களைப்பற்றி உங்களுக்கு ஏதும் அக்கறையில்லை, 'மனுஷன் மகா போர்' என்று நினைத்தால் ஏதோ பரவாயில்லை. ஆனால் முக்கியமான அலுவலக அதிகாரியிடமோ அல்லது மிகவும் வேண்டியவருடனோ பேசும்போது மனதை அங்கும் இங்கும் அலைய விடதீர்கள். கேட்கும் விஷயத்தில் கவனமாக இருங்கள்!

8. சொந்தக்காரர்களுடன் அல்லது நண்பர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாமலிருப்பதைத் தவிர்க்க வேண்டும். எல்லோரிடமும் நல்ல உறவு வைத்திருக்க அவர்களுடன் எப்போதும் தொடர்பில் இருப்பது அவசியம். அவ்வப்போது அவர்களது பிறந்த நாள், மணநாள் இவைகளைக் குறித்து வைத்துக்கொண்டு, வாழ்த்துத் தெரிவித்து, அவர்களுடன் ஏதாவது வகையில் தொடர்பு வைத்திருக்க வேண்டும். அதற்காக தினமும் பேச வேண்டும் என்பது அவசியமில்லை. நீங்கள் ஒருவர் இருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு அவ்வப்போது நினைவு படுத்திக்கொண்டிருந்தால் சரி!

9. உற்சாகமில்லாமல் சோர்ந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும். நீங்கள் இருக்கும் சூழ்நிலை இறுக்கமாக இருக்கும்போது அந்த இறுக்கத்தைத் தளர்த்தி ஒரு நல்ல உற்சாகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். சூழ்நிலை மகிழ்ச்சிகரமாக இல்லையென்றால் அதற்குப் பிறர் மீது பழிபோடுவதில் பயனில்லை. நிலைமையை சரிப்படுத்த நீங்கள் ஏதாவது செய்யுங்கள்! நீங்கள் மகிழ்ச்சியாக இல்லையென்றால் அதைப்பற்றி யாருக்கும் அக்கறையிருக்காது. ஒரு வேளை உங்கள் அம்மாவைத் தவிர!

10. மற்றவர்களோடு கலகலப்பாய் இல்லாமல் உம்மனாமூஞ்சியாய் இருப்பது அடுத்தபடி தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. உங்கள் நண்பர்கள், உறவினர்கள் நீங்கள் ஒரு ஜாலியான மனிதர் என்று எண்ணும்படியாக இருக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மற்றவர்களோடு சேர்ந்து பேசி வாழ்க்கையை உற்சாகமாகச் செலவிடுங்கள்!

11. உங்களுக்குள்ள பயத்தையும் தயக்கத்தையும் வெளிக்காட்டாதீர்கள். முக்கியமாக, புதிய நண்பர்களைச் சந்திக்கும்போது, உயர் பதவியில் இருப்பவர்களுடன் பேசும்போது, நேர்முகத் தேர்விற்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம்.

12. விடாப்பிடியாகத் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று நினைப்பது. எப்போதும் திறந்த மனதோடு இருங்கள் உங்களைச் சுற்றிப் பல மதத்தினர், வெவ்வேறு ஜாதியைச் சேர்ந்தவர்கள், கொள்கையில் மாறுபட்டவர்கள் இருப்பார்கள். அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொள்ளுங்கள். அவர்களுடன் மனக்கசப்போ அல்லது வேறுபாடோ இருந்தால் சுமுகமாகப் பேசித்தீர்த்துக் கொள்ளுங்கள்.

மூலம்: Pete Grand

20. நான் விரும்பும் மனிதன்

மாற்றங்கள்

அவன் சிக்னலிற்காகக் காரில் காத்திருந்தான். அவனுக்கு முன்னாலிருந்த காரில் ஒரு பெண் ஏதோ பேப்பரைப் படித்துக்கொண்டிருந்தாள் சிக்னல் பச்சைக்கு மாறியது. ஆனாலும் அந்தப் பெண் காரைக் கிளப்புவதாகக் காணோம். அவள் சிக்னல் மாறியதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. மறுபடியும் பச்சை சிவப்பாகியது. பின்னால் காத்திருந்தவனோ கோபத்தால் சிவந்திருந்தான். பல கெட்ட வார்த்தைகளைச் சொல்லி உறுமி, ஸ்டியரிங் வீலைக் கைகளால் குத்தி, தன் கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த போலிஸ்காரர் அவனை எச்சரித்தார். அதற்கு அவன், நான் "என் காருக்குள் இருந்து கத்துகிறேன். அதற்கு நீங்கள் தடைபோட எந்த சட்டமும் இல்லை' என்று கோபமாகக் கூறினான். ஆனால் அந்த போலிஸ்காரர் அவனிடமிருந்த லைசென்ஸ் மற்றும் ஆவணங்களை எல்லாம் சரிபார்த்துவிட்டு அவனிடம் திருப்பித் தந்தார். அவன் கோபமாகச் சொன்னான் "எனக்குத் தெரியும், நான் எனது காரிலிருந்து சத்தம் போடுவதற்கு உங்கள் சட்டத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்று".

அதற்கு அந்த போலிஸ்காரர் நிதானமாகச் சொன்னார், "காரிலிருந்து கத்தியதற்காக உன் ஆவணங்களைப் பார்க்கவில்லை, உனது காரின் பின்புறத்தில் அன்பே கடவுள் அமைதிக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள், பிரார்த்தனை பலனளிக்கும் போன்ற வாசகங்கள் ஸ்டிக்கரில் ஒட்டியிருக்கிறது, ஆனால் நீ நடந்து கொள்ளும் விதம் அவற்றிற்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் இருந்ததால் நீ காரைத் திருடி எடுத்து வருகிறாயோ எனச் சந்தேகமாக இருந்தது" என்றார்.

ஆமாம்! அவன் நடந்து கொண்டவிதத்திற்கும் பின்னால் அவன் ஒட்டியிருந்த ஸ்டிக்கருக்கும் சம்பந்தமே இல்லை. கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்! நாம் எப்படி இருக்கவேண்டுமென்று நினைக்கிறோமோ, உண்மையில் அப்படி இருக்கிறோமா? நாம் நாம் விரும்பும் மனிதராக இல்லை என்று உணரும்போது நாம் நம்மை மாற்றிக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். உயர்ந்த லட்சியங்களை உருவாக்கிக் கொண்டு அதையடைய முயற்சி செய்தால் அதில் சிறிது பின்னடைவு இருந்தாலும் பரவாயில்லை.

முக்கியமான கேள்வி "நீ இன்று எப்படி இருக்கிறாய் என்பது அல்ல? நாளை எப்படியிருக்க விரும்புகிறாய்" என்பதுதான்

“மாறுதல்கள் இல்லை என்றால் உலகமே இல்லை”.

21. நெஞ்சம் மறப்பதில்லை...!

மூன்று தலைமுறைகளாக திரை வானில் கொடி கட்டிப் பறந்த நடிகர் நம்பியார் மறைந்துவிட்டார். வில்லன் என்றாலே நம்பியார் என்று வில்லத்தனமான நடிப்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். அவரது மறைவு தமிழ்த் திரையுலகை துயரக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது.

வீரப்பாவின் வில்லன் சிரிப்பும், நம்பியாரின் புருவநெரிப்பும் ரசிகர்கள் மனதை விட்டு என்றும் நீங்காதவை. மரணம் என்பது யாருக்குமே நிச்சயம் என்ற வேதாந்தம் நன்றாகத் தெரிந்திருந்தாலும், 88 ஆண்டுகள் பூரணமான நிறைவு பெற்ற வாழ்க்கையை வாழ்ந்து விட்டுத்தான் மறைந்திருக்கிறார் என்று நமக்கு நாமே சொல்லிக் கொண்டாலும், அந்தக் காலியான இடம் நமது மனசுக்குள் ஏனோ ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துகிறது.

நல்ல நடிகர், நண்பர், ஆன்மிகவாதி, நகைச்சுவை உணர்வு மிக்கவர் என்று இவருக்கு பல முகங்கள்!

1919ம் அண்டு மார்ச் மாதம் 17ம் தேதி பிறந்த இவர் தனது 13ம் வயதில் நவாப் ராஜமாணிக்கம் நாடகக் குழுவில் சேர்ந்து மேடை நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். பின் திரையுலகில் நுழைந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக திரைப்படங்களில் நடித்து வந்தார். ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார் அவர். அவரது முதல் படம் 'பக்த ராமதாஸ்'. கடைசியாக நடித்து வெளிவந்த படம் 'சுதேசி'.

நம்பியார் எப்போதும் நகைச்சுவையாகப் பேசி உற்சாகமாக இருப்பார் என்றும் அவர் கோபப்பட்டு தான் என்றுமே பார்த்ததில்லை எனவும் கூறுகிறார் அவரது மருமகன் சரத் பாபு. ஸ்னேஹாவை அவரது மகள் என்ற காரணத்திற்காகவே திருமணம் செய்துகொண்டதாக நினைவு கூறுகிறார். மருமகன் மெச்சிய மாமனார்!

எம்.ஜி ஆர், சிவாஜி தொடங்கி ரஜினி, கமல், விஜய்காந்த், பிரபு என்று இரண்டு தலைமுறை நடிகர்களோடு நடித்துவிட்டார். 'எங்க வீட்டுப் பிள்ளை', 'உலகம் சுற்றும் வாலிபன்', 'ஆயிரத்தில் ஒருவன்', முக்கியமாக 'நெஞ்சம் மறப்பதில்லை' முதலியவை பானை சோற்றுக்கு சில பத(ட)ங்கள்!

வில்லன் நடிகராகவே தோன்றிய இவர் பிற்காலத்தில் குணச்சித்திர பாத்திரங்களிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார். கமலஹாசனுக்கு முன்னதாகவே திகம்பரசாமியாரில் 11 வேடங்களில் நடித்தவர். தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி என்று எந்த மொழியையும் விட்டு வைக்காத இவர் 'ஜங்கிள்' என்ற ஆங்கிலப்படத்திலும் தன் முத்திரை பதித்திருக்கிறார்.

நம்பியாருக்குக் 1967ல் கலைமாமணி விருது வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். கழக நிறுவனரும், படத் தயாரிப்பாளருமான ஆர்.எம்.வீரப்பன், நம்பியாருக்கு எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் எம்.ஜி.ஆர் விருது கொடுக்க விரும்பியதாகவும், ஆனால் அவர் 'யோசிக்கிறேன்' என்று சொல்லிவிட்டதாகவும் தகவல். பட்டம், விருதுகளுக்கு நம்பியார் என்றுமே ஆசைப்பட்டதில்லை

தீவிர ஐயப்ப பக்தரான நம்பியார் 65 முறை சபரிமலை யாத்திரை சென்றிருக்கிறார். அமிதாப் பச்சன், ரஜினிகாந்த் முதலியோருக்கும் குருசாமியாக இருந்தவர்.

உலகில் எல்லோரும் பிறக்கிறார்கள் – இறக்கிறார்கள். ஆனால் சிலர்தான் இறந்த பிறகும் மற்றவர் நெஞ்சங்களில் வாழ்கிறார்கள். அவர்களுள் நம் நம்பியாரும் ஒருவர்.

22. அன்புடையீர்.....

"நேசம் அல்லது அன்பு என்றால் என்ன?"

"அன்பு என்பது சொர்க்கத்தை ஒருமுறை பார்க்கக் கிடைக்கும் வாய்ப்பு" என்றார் கரேன் சண்டே (Karen Sunde)

சில குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும் கேட்ட போது கிடைத்த பதில்கள்:

"எனது பாட்டி குனிய முடியாதபடி மூட்டு வலியால் அவதிப்பட்டபோது எனது தாத்தா அவருக்கு கால் நகங்களில் நகப்பூச்சு இட்டார். அவர் தான் மூட்டுவலியால் அவதிப்படும்போது இதை பாட்டிக்காகச் செய்தார். இதுதான் அன்பு"

"உங்களை நேசிப்பவர்கள் உங்கள் பெயரை உச்சரித்துக் கூப்பிடும் விதமே தனியாக இருக்கும். உங்கள் பெயர் அவர்களது நாவில் பத்திரமாக இருக்கும்."

"நீங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடும்போது உங்களது பங்கு ஐஸ்கிரீமை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமலிருப்பது"

"அன்பு என்பது நீங்கள் சோர்வாக இருக்கும்போது முகத்தை மலர்ச்சி அடையச் செய்வது"

"அன்பு என்பது என் அம்மா எனது அப்பாவிற்காகக் காபி போட்டவுடன் அப்பாவுக்குத் தருமுன் அது சரியாக இருக்கிறதா என்று சுவைத்துப் பார்த்துவிட்டுத் தருவது"

"என்னுடைய அம்மா மற்ற எல்லோரையும் விட என்னை நேசிக்கிறாள். அவள்தான் என்னைக் கன்னத்தில் முத்தமிட்டுத் தூங்க வைக்கிறாள்"

"அன்பைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் நீ வெறுப்பவரிடம் அன்பு செலுத்த ஆரம்பிக்கவேண்டும்"

"அன்பு என்பது உன் நண்பனிடம் 'உனது சட்டை மிகவும் அழகாயிருக்கிறது' என்று சொன்னவுடன் அவன் அதைத் தினமும் போட்டுக்கொள்வது"

"நான் பள்ளியில் பாட்டுப் போட்டியில் முதல் முதலாகப் பாடும்போது எனக்குக் கூடியிருந்தவர்களைப் பார்க்கும்போது மிகவும் பயமாக இருந்தது. அப்போது என் அப்பா என்னை நோக்கி கைகளை அசைத்துப் புன்னகை செய்தார். அவர் மட்டும்தான் அப்படிச் செய்தார். அப்புறம் எனக்கு பயமே இல்லை."

"எனது அக்கா என்னை மிகவும் நேசிக்கிறாள் அவள் எனக்கு அவளது பழைய உடைகளை எல்லாம் கொடுத்துவிட்டுப், பாவம் தனக்குக் கடைக்குப்போய் புதிதாக வாங்கிக் கொள்கிறாள்"

"நீங்கள் ஒருவரை நேசிக்கும்போது உங்கள் கண் இமைகள் மேலும் கீழும் செல்கின்றன. அவைகளிலிருந்து நட்சத்திரங்கள் தெரிகின்றன."

23. ஐ.பி.எல். திருவிழா 2008

44 நாட்கள் - 59 போட்டிகள்!

இதுவரை இதுபோல பிரம்மாண்டமான விளையாட்டு விழா நடந்திருக்கிறதா! என்று வியக்க வைக்கும் பிரமிப்பு ஜூன் ஒன்றாம் தேதி முடிவடைந்தது. ரசிகர்கள் இந்த விழா ஏற்படுத்திய மயக்கத்திலிருந்து இன்னும் வெளிவரவில்லை.

ஐ.பி எல் போட்டிகள் ஆரம்பித்தபோது இதற்கு எத்தகைய வரவேற்பு இருக்கும் என்ற சந்தேகம் நமக்குள் இருந்தது. ஏலத்திற்கு வீரர்களை எடுப்பதுபற்றி பல விமரிசனங்களும் கேலிப்பேச்சுகளும் இருந்தன.

ஷேன் வார்னையும், வாட்சனையும் நமது போட்டியாளராகப் பார்த்த நாம் அவர்கள் நம் நாட்டு வீரர்களை அவுட்டாக்கும்போது விசிலடித்துப் பாராட்டும் விந்தைகளைக் காண முடிந்தது. முரளிதரன் பந்தில் யூசுஃப் பதான் அவுட்டாகமாட்டாரா என்று துடித்தது நம் இதயம்.

அரை இறுதிக்குள்ளேயே நுழைவோமா மாட்டோமா என்றிருந்த நிலையில் அரையிறுதியிலும் வென்று இறுதிப்போட்டிக்கும் சென்னை அணி நுழைந்தபோது ஆரவாரித்த சென்னையர் இதயங்கள் ஏராளம்!

இதுவரை நடந்த போட்டிகளிலேயே விறுவிறுப்பாக அமைந்தது இந்த இறுதிப்போட்டி. கடைசிப் பந்து வீசப்படும்போது இரு அணி ஆதரவாளர்களின் இதயங்களுமே துடிக்கத் தவறின.

பந்தயங்களுக்கு அரங்கு நிறைய வந்திருந்த ரசிகர்கள், தொலைக்காட்சியில் மூழ்கிய ஆர்வலர்கள் என அமோக வரவேற்பைப் பெற்றது 20- 20 போட்டிகள்.

சீரியலிலேயே தங்கள் முகங்களைப் புதைத்துக்கொள்ளும் குடும்பத் தலைவிகள்கூட இரவு எட்டுமணிக்கு ஐ.பி.எல் போட்டிகளைக் காணத் தயாராய் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும் இரவு பன்னிரண்டு மணிவரை திருவிழாக் கோலந்தான்!

பூர்வாங்க போட்டிகள் முடிவடையும் நிலையில் சென்னை அணி அரை இறுதிக்குள் நுழையுமா என்பதே நம்மவர்கள் மத்தியில் கேள்விக்குறியாக இருந்தது. முதல் நான்கு போட்டிகளில் பரபரப்பான முறையில் வென்ற சென்னை அணி நட்சத்திர வீரர்களான ஹைடன், ஹஸ்ஸி, மற்றும் ஜேக்கப் ஓரம் தத்தமது நாடுகளுக்கு நடையைக் கட்ட திடீரெனத் தடுமாறியது. நாம் நம் முயற்சியால் ஜெயிப்பதைவிட, எந்த அணி எந்த அணியிடம் தோற்றால் அல்லது ஜெயித்தால் நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று கணக்குப் போடுகிறோம்.

நல்ல வேளையாக ‘தப்பித்தோம்.. பிழைத்தோம்’ என்று அரை இறுதியில் நுழைந்த நிலையில் சென்னை ரசிகர்களின் உற்சாகம் வானை எட்டியது. அரை இறுதியிலும் யுவராஜ் அணி பரிதாபமாகத் தோல்வியைத் தழுவ, அதிர்ஷ்ட தோனியின் தலைமையில் இறுதி ஆட்டதிற்குள் பிரவேசித்தது சென்னை.

இந்த போட்டிகளைப் பற்றி சில புள்ளிவிவரங்கள் நம்மைத் திகைக்க வைக்கின்றன. ஏப்ரல் 18லிருந்து மே 14 வரை ஐ.பி.எல் போட்டிகளைக் கண்டு களித்தவர்கள் எண்ணிக்கை 99 மில்லியனாம். ஐ.பி.எல் போட்டிகளை அயல்நாட்டில் கண்டு களித்தவர்களின் எண்ணிக்கை இதில் சேரவில்லை.

உலகக் கோப்பை ஒருநாள் போட்டிகளின் போது அதனை டி.வி யில் கண்டு ரசித்த ரசிகர்கள் கூட 32.8 மில்லியன்தான்! தென் ஆப்பிரிக்காவில் நடந்த 20-20 போட்டியைப் பார்த்த ரசிகர்களின் எண்ணிக்கை 48 மில்லியன்.

விளம்பரங்கள் மூலம் கிடைத்த தொகை 350 கோடியையும் தாண்டியது. இறுதி ஆட்டத்திற்கு மட்டும் 300 கோடி அளவிற்கு சூதாட்டம் நிலவியது எனச் சொல்கிறார்கள். நேரடி ஒளிபரப்பு செய்த செட் மாக்ஸ் பார்வையாளர்கள் 5.7 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதத்திற்கு உயர்ந்ததாம்!

ஐ.பி.எல் போட்டிகளின் இந்த அசாதாரண வெற்றிக்குக் காரணம் என்ன? வணிகநோக்கில் இந்தப் போட்டிகளை மக்களிடையே சேர்ப்பதில் அமைப்பாளர்களின் சாதனைதான்.

ஐந்து நாள் போட்டிகள் ஒரு ஆரவாரமில்லாத கர்நாடக சங்கீதம் என்றால் இந்த 20-20 போட்டிகள் குத்துப்பாட்டுக்ளைப்போல.

20 ஓவர் போட்டிகள் முதல் ஓவர் ஆரம்பித்த வேகத்திலேயே சூடுபிடிக்கத் துவங்கி உச்சஸ்தாயியை எட்டுவதற்குள் முடிந்தே விடுகின்றன.. அதற்குள் எத்தனையோ சிக்சர்கள், பவுண்டரிகள், காட்சுகள் என்று ஒவ்வொரு கணமும் மைதானமே அதகளமாகிறது. பறக்கும் விசில் சத்தங்கள், ஒவ்வொரு பவுண்டரிக்கும், சிக்சருக்கும் கவர்ச்சி கன்னிகளின் ஆட்டம்!

இந்தத் துரித உணவு யுகத்தில் யாரால் பொறுமையாய் நாள் பூராவோ ஐந்து நாட்களோ காத்திருக்க முடியும்? ஏதோ வந்தோமா, அடித்தோமா, அவுட்டானோமா என்று மூன்று மணி நேரத்தில் முடிப்பதை விட்டு!

இந்தப் போட்டிகளின் சிறப்பு அம்சம் இந்தியாவின் மூலைகளில் ஒளிந்திருந்த பல இளம் கிரிக்கெட் வீரர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்தது. அடுத்த உலகக் கோப்பையின் போது பல இளம்வீரர்கள் சாதனை படைக்கக் காத்திருக்கிறார்கள். இவர்களில் யாரைத் தேர்வு செய்வது, யாரை விடுவது என்று தேர்வாளர்களுக்கு தர்மசங்கடமாகவே இருக்கும். எப்படியோ இந்திய அணிக்கு சிறந்த இளம் பட்டாளங்கள் கிடைத்தால் சரிதான்!